# தமிழரசு


ஓராண்டுச் சாதனைகள்

சிறப்பு மலர்

16.6.1992 & 1.7.1992   விலை: ரூ.2



# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.



இந்த இதழில்...

# தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்- செய்திகள்...

## 23-வது ஆண்டில் தமிழரசு

'தமிழரசு 23-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரார்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆனித் திங்கள் - 17

மலர்:23 இதழ்:1

16-6-1992 இதழும், 1.7.1992 இதழும் இணைந்தது.

# உங்கள் நம்பிக்கை வீண் போகாது!



தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும், மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான் - இன்றைய காலகட்டத்தில், என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் - அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்.

வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டுள்ளனர்; நாம் தினை விதைத்தோம்; எனவே, அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

என்னை முதலமைச்சராக நம்பி ஏற்றுக் கொண்டீர்களே - உங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை விளக்கவே இப்போது இவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
புரட்சித்தலைவி டாக்டர்
ஜெ. ஜெயலலிதா

*(21.8.1991 அன்று பர்கூர் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)*

“

**தொழில் வளர்ச்சியில் தமிழகம் வியத்தகு முன்னேற்றம் கண்டு வருகிறது. தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி, சிறு தொழில் முன்னேற்றம் முதலான தொழில் வளத்துக்குத் தொழில் துறை தொடர்ந்து தக்க உதவிகளை - சலுகைகளை வழங்கி வருகிறது.**

”



# தமிழகத்தின் தொழில் கொள்கை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சியே முக்கியமாகும். இதனை உணர்ந்து பாரதியார், ''உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சியில் பின் அடைந்து இருந்த நிலையை மாற்றி அமைத்து அகில இந்திய அளவில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டுமென்ற குறிக்கோளை அடைவதற்கு, தொழில் முன்னேற்றத்தை முன் உரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையில் சில சிறப்பு நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

எந்த ஒரு தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படை ஆதாரங்களாகிய நிலம், நீர், மின்சாரம் ஆகிய இம்மூன்றும் தங்குதடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்து தரவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு தான் இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.7.91 அன்று தொழிலதிபர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் பிரச்சினைகளையும் கருத்துக்களையும் கேட்டு அறிந்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் 20.1.92 அன்று தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முதலாகப் புதிய தொழில் கொள்கையை நாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இப்புதிய தொழில் கொள்கை, அடிப்படை வசதி மேம்பாடுகள், முதலீடு மேம்பாடுகள், ஊக்கச் சலுகைகள், வரிச் சலுகைகள், சிறு தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு உள்ள பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த

அணுகுமுறை ஆகும். தொழில்கொள்கையைச் செயல்படுத்த இந்த அரசு தேவையான நடவடிக் கைகளையும் எடுத்து வருகிறது.

ஏற்கெனவே அமைந்துள்ள தொழில் பகுதிகள், தொழில் வளாகங்கள், தொழில் பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதி களை அமைத்துத் தருவதற்குத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Corporation for Infrastructural Development - TACID) நிறுவப்பட்டு செயலாற்றி வருகிறது. இக்கழகத்திற்கு அரசின் பங்குத் தொகை மூல தனமாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


இம்மாநிலத்திற்கு உள்ளும், வெளியிலும் தொழில் முனைவோரைக் கண்டறிந்து அவர் களுக்கு ஊக்கமும், ஆலோசனைகள் வழங்கவும், தொழில் தொடங்கத் தேவையான பல்வேறு அரசுத் துறைகளின் அனுமதியினைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவும் வகையில் தொழில் ஆலோசனை நல்கவும் தமிழ்நாடு தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Industrial Guidance and Export Promotion Bureau) விரைவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மிகப் பெருந்தொழில்கள் அமை வதனை ஊக்குவிக்கும் வகையில் எவ்வித நிபந் தனையும் இன்றி இவ்வரசு கீழ்க்கண்ட சலுகை களை, இடம் பற்றிய நிபந்தனையின்றி அறிமுகப் படுத்த உள்ளது.

ரூபாய் 200 கோடிக்கு மேல் உள்ள முதலீடு களுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனை வரி/ஒத்திவைப்பு ஆகியவற்றில் 6 ஆண்டுகள் தள்ளுபடி/12 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

ரூபாய் 300 கோடிக்கு மேல் உள்ள முதலீடு களுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடி யும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனைவரி/ ஒத்திவைப்பு ஆகியவற்றில் 7 ஆண்டுகள் தள்ளு படி/14 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

தொழில் துறையில் பெண்களுக்கு முன் னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு தொழில் துறை யில் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காடு களுக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக் கும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக்காடுகளும், உச்ச அளவாக ரூ.5 இலட்சமும் சிறப்பு மானியம் வழங்க உத்தர விடப்பட்டுள்ளது. மற்றும் எல்லாத் தொழில் பேட்டைகளிலும் தொழில் வளாகங்களிலும் உள்ள தொழில் கூடங்களில் முக்கிய தொழில் முனைவோருக்கு 30 விழுக்காடு தொழில் கூடங் களுக்கு அரசு மனைகள் ஒதுக்கப்படுகின்றன. இவ்வாண்டு 800 மகளிருக்குத் தொழில் முனை வோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



தனியார் துறையில் புதிய தொழில்கள் தொடங்க முன்வரும் நிறுவனங்களுக்கு ஆலோ சனைகள் மற்றும் உதவிகளையும் நல்கும் வகையில் டிட்கோ மற்றும் எல்காட் நிறுவனங்களில் 'வழி காட்டும் சேவை' துறை என்ற (Escort Sector Project) புதிய பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் தமிழ் நாட்டில் தொழில் முதலீடு செய்யும் பொருட்டு அவர்களை ஈர்ப்பதற்குப் புதுடில்லியில் உள்ள தமிழக அரசின் ஆணையர் (Resident Commissioner) தலைமையில் வெளிநாட்டு ஊக்குவிப்பு ஒருங் கிணைப்புப் பிரிவு (Foreign Investment Promotion Corporation)ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழில் பிரிவுகளைச் சீர் அமைத்து நவீனப்படுத்தும்போது, பாதிக்கப்படும் தொழிலாளர் களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி (Labour Rehabilitation Fund) என்ற புதிய திட்டம் நமது மாநிலத்தில் முதன்முதலாகக் கொண்டு வரப் பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டத்தில், வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தர்மபுரியில் பர்கூரிலும், திருநெல்வேலியில் கங்கைகொண்டானிலும், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடியிலும், ஒவ்வொன்றும் சுமார் ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆகும் உப்பைப் பயன்படுத்தி காஸ்டிக் சோடா தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமாகிய தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் என்ற நிறுவனம் மத்திய அரசின் இசைவுக் கடிதம் பெற்று, மேற்படி தொழிற்சாலையை விரைவில் அமைக்கவுள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக, 3½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இவ் வாண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாள் திறக்கப் பட்டுச் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை திறப்ப தற்கு 3 கோடி ரூபாயை அரசு குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்துள்ளது. மேலும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ்

நிறுவனம் ரூ.6.03 கோடியைப் பங்கு மூலதன மாக முதலீடு செய்ய அரசு அனுமதித்துள்ளது. இதன் காரணமாக 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மின்னணுத் தொழிற் சாலைகளை உலகளவில் பெருமையடையச் செய்ய அரசு ஆவன செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated circuits) தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை ஒன் றினை ரூ.300 கோடி அளவில் கூட்டுத் துறையில் அமைக்க எல்காட் உத்தேசித்துள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரண மாக, நீண்ட நாளாக ஆவலுடன் எதிர்பார்த்த சென்னை மணலி அரோமாடிக்ஸ் (NAPCO) நிறுவனத்தில், பெட்ரோலிய, இரசாயனப் பொருட் களை உற்பத்தி செய்யும் அரோமாடிக்ஸ் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று அமைக் கத் தேவையான மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது.

இதற்காக 1655 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உள்ளது. இத்திட்டம் ரூ.1,380 கோடியில் செயல் படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் சுமார் 20,000 பேர்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடும்.

அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பல்வேறு பெரிய நடுத்தர மற்றும் சிறிய தொழில் களுக்குக் கிடைப்பதற்காகத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகள் என்று தமிழகத்தில் சில பகுதிகள் அறிவிக்கப்பட்டு இருந்தன. பின்தங்கிய பகுதிகளுக்கென அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில், மற்றும் சிறிய தொழில்களுக்குக் கிடைப்பதற்கு வசதியாக மேலும் சில பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளென அரசு அறிவித்துள்ளது. மேலும், கீழ்க்கண்ட சில பகுதிகளைப் பின் தங்கிய பகுதி களாக அறிவித்துள்ளது.

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | - | அவினாசி |
| காமராசர் | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| சேலம் | - | இராசிபுரம் |
| புதுக்கோட்டை | - | புதுக்கோட்டை |
| சிதம்பரனார் | - | சாத்தான்குளம் |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் | - | பாளையங்கோட்டை |

மின்சக்தியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, இவ்வரசும் தொழில் துறையில் திருவாளர் மக்னெல்லி பாரத் இன்ஜினியரிங் கம்பெனி (Mcnally Bharath Engineering Company Limited) என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாக TIDCO-வைக் கூட்டு முனைவோர்களாக நியமித்து அரசு அங்கீ கரித்துள்ளது. இத்திட்டம் ரூ.7,000 கோடி முதலீட்டில் தொடங்கப்படும்.

தொழில் முனைவோர், புதிய தொழில் நுட்ப உத்திகளைக் கொண்டும், மேல் நாடுகளில் கடைப் பிடிக்கும் முறைகளைக் கொண்டும் முன்னோடித் திட்டங்கள் உருவாக்குவதற்காகத் தொழில் நுட்ப உத்தி மூலதன (Venture Capital Fund) நிதியி லிருந்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது. சிறு தொழில்களைப் பதிவு செய்யும் முறையை எளிதாக்கவும், மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 5 ஆண்டுகளில் தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சிறு தொழில்கள் மற்றும் வேறு வகைப்படும் தொழில்களுக்கும் கீழ்க்கண்ட விகிதத் தில் குறைந்த அழுத்த மின்சாரம் வழங்குவதற்கு மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.


1. முதல் ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 40 சதவீதம்.

2. 2-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 30 சதவீதம்


3. 3-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உப யோகித்த மொத்த மின் கட்டணத்தில் 20 சதவீதம்.

சிறு தொழில் பிரிவிலும் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்க முதலீட்டுத்தொகைக்கான மானியத்தை வழங்கத் திட்டங்கள் தீட்டி, ஒவ்வொரு நிலை யிலும் வழங்க அரசு எண்ணியுள்ளது.

இவ்வாறு இந்த அரசு பொறுப்பு ஏற்றபின், தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் காண முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையில் தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்தைத் தொழில் துறை யில், இந்தியாவில் ஒரு முன்னணி மாநிலமாக்க எல்லா வகையிலும் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாகத் தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் தொழில் தொடங்க முனைவோர்களுக்கு, இவ் வரசு எல்லா ஒத்துழைப்பும் நல்கி, அனைத்து உதவிகளும் செய்ய முன்வந்துள்ளது. ●



# நிதி நெருக்கடியிலும்



**"கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்துவதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது."**

அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்த தருணத்தில், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றது.

ரூ.1600 கோடி மதிப்புள்ள திட்டத்திற்கான பற்றாக்குறை ரூ.898 கோடியாகவிருந்தது. ஏழை மக்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல் நடவடிக்கையாக, நாட்டு மதுவை ஒழித்து, மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக வருமான இழப்பீடு ரூ.322 கோடியாகும். ரூ.1600 கோடி திட்டத்தை ஒப்புநோக்கில், ரூ.1220 கோடி பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு இயலாத நிலையில் அரசு இருந்தது.

அரசு நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பஸ் கட்டண உயர்வானாலும், அல்லது மின் கட்டணச் சீரமைப்பானாலும் ஏழை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் கவனமாகச் சரிசெய்யப்பட்டது. ஏழை மக்களின் நலனைப் பாதுகாக்கவே அரசு நிதி நிலையை மேம்படுத்த எல்லா நடவடிக்கைகளை எடுத்தது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்காக அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தது.

இந்த நாட்டில் தமிழ்நாட்டில்தான் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை குறைவாக இருப்பது என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். மையத் தொகுப்பின் விலை அதிகரிப்பு காரணமாக விலையினைத் திருத்துவதற்கான அவசியத்தில் இருந்தபொழுதிலும், அரசு ஏழைகளின் தேவைகளுக்கு மதிப்பளித்து அரிசியின் விலையை நாட்டிலேயே குறைவாக இருக்கும்படி சரிசெய்யப்பட்டு வருகிறது. இவ்வாறாக, அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயத்தில் அரசு எப்போதும் ஏழைகள் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வருகிறது.

கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்துவதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக, 1991-92-ஆம் ஆண்டிற்காக ரூ.1600 கோடி திட்டத்தை நிறைவேற்ற இயலாது என்ற காரணத்தால் மைய திட்டக்குழு 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடாக ரூ.1460 கோடியாகக் குறைக்க வற்புறுத்தியபொழுது, முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு இது ஏற்புடைத்தல்ல என்றும், 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டு முழுவதையும்

# நிலையான பணிகள்

நிறைவேற்றும் என்று உறுதி செய்ததோடல்லாமல், 1992-93 ஆம் ஆண்டிற்கான உயர்ந்தத் திட்ட மதிப்பீடாக ரூ.1751 கோடி கோரினார்.

1991-92 ஆண்டிற்கான ஆண்டு ஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றியது என்பது பெருமைக் குரிய விஷயமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்

1992-97 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் தயாரிக்கும் தருணத்தில் மையத் திட்டக்குழு நிதி ஆதாரங்கள் ரூ.6500 கோடி திட்ட ஒதுக்கீட்டை அனுமதிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என தெரிவித்தது.



**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒரு சிறுவனின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 1.6.92 அன்று தலைமைச் செயல கத்தில் நிதியுதவி வழங்கினார்.**

கீடான ரூ.1600 கோடி திட்டத்திற்கெதிராக ரூ.1650 கோடி திட்டச்செலவாகச் செலவிடப் பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கான ரூ.1751 கோடி ஆண்டுத் திட்டத்தை மையத் திட்டக்குழு ஏற்பளிப்பதில் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெற்றி கண்டுள்ளார்.

முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைப் பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தார். மையத் திட்டக் குழு வினருடன் 1992 ஏப்ரல் மாதம் நடந்த விரிவான விவாதத்தினைத் தொடர்ந்து தமிழகத்திற்கு முதன் மையாகக் குறிப்பிட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.6500

கோடியில் இருந்து உயர்வு ஒதுக்கீடான ரூ.10,200 கோடிக்கான திட்ட மதிப்பீடு பெறமுடிந்தது.

எட்டாவது ஆண்டுத்திட்ட மதிப்பீடு கணிச மாக உயர்த்தப்பட்டதைத் தமிழ்நாட்டு மக்களின் நலம் நாடும் அனைவராலும் வரவேற்கப்பட்டது. எல்லாத் திட்டங்களையும் சரியாக நிறைவேற்று வதற்காக அரசு அதிக அளவில் உறுதி கொண்டு உள்ளது. முன்னேற்றப்பணிகளுக்கு நிதி வசதிகள் செய்து தரப்பட்டன. அரசு மிகக் கடுமையான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருந்தாலும், செலவினங்களில் தொய்வு ஏற்படாதவாறு கவனித்துக்கொண்டது.

அரசின் முன்னேற்றப்பணிகளுக்கு முத் தாய்ப்பு வைத்தாற்போல் இருபது அம்சப் பொருளா தாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதல் நிலை அரசுக்குத் தரப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளின் முயற்சியினாலும், இந்தத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் குறித்த காலத்தில் நிதி வசதி அளித்ததனாலும் இது சாத்தியமாயிற்று. வெளி நாட்டு உதவி பெறும் திட்டங்களை நிறை வேற்றுவதில் அரசு நல்ல முறையில் செயல் பட்டது.

மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.195 கோடி என்ற அளவைக்காட்டிலும் ரூ.240 கோடி கூடுதல் மைய உதவியாக அரசு பெற்றது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் அரசின் சாதனை நிச்சயமாக வரவேற்கப்படவேண்டியது.

## இலாபத் தொழில்

**கலங்கிய நீரில் மீன் பிடிப்பது கலபம்தான். ஆனால் அதைவிடச் சுலபம், தேங்கிய நீரில் மீன் வளர்ப்பது! இலாபமும் கூட. ஒரு எக்டேர் பரப்பளவு நீரில் ஆண்டுக்கு 15 டன் மீன் பிடிக்கலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.**

**மத்திய உயிரியல் நுட்பத் துறையின் ஆதரவில் இத்தகைய திட்டமொன்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் வெற்றிகரமாகச் செயலாக்கம் பெற்றுள்ளது.**

**சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், வியாபார ரீதியில் எக்டேர் ஒன்றில் ஆண்டுக்கு ஐந்து முதல் பதினைந்து டன் கார்ப் மீனை அறுவடை செய்வதற்கான தொழில் நுட்பத் திட்டங்கள் உருவாகி வருகின்றன.**




★ இந்தியாவிலேயே, தன்னிறைவுத் திட்டங்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம் தமிழ்நாடு அரசு தான் என்று மத்திய அரசே பாராட்டியுள்ளது.



# காவல்துறையின் சாதனைகள்

**இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறையானது நிகரற்றதெனப் போற்றப் படுவதாகும்; மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொறுப்பில் உள்ள அத் துறைச் சாதனைகள் இங்கே அணிவகுக் கின்றன:**

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், அரசின் எல்லாத் துறைப் பணிகளும் செம்மையாக முடுக்கி விடப்பட்டன.

குறிப்பாக உள்துறையின் பணி சிறப்புறத் தொடர்கிறது.

கடந்த காலத்தில் காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத் துறை போன்ற சீருடைப் பணியாளர்கள் பணி யாற்றுகின்ற துறைகளில், சார்நிலைப் பணிகளுக்கான பணியாளர்கள், சம் பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

இத்துறைகளுக்கான சார்நிலைப் பணியாளர் தேர்வினைச் சீரான முறை யில் நடத்திடவும், அவ்வப்போது தற் காலிக அடிப்படையில் நடைபெறும் தேர்வு களைத் தடுத்திட்வும் வேண்டி, தமிழ்நாடு சீருடைப் பணிகளுக்கான தேர்வு வாரியம் ஒன்றினைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. இக்குழு தற்சமயம் காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் பணிக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது; விரைவில் பிற சார்நிலைப் பணிகளுக்கான ஆட்களைத் தெரிவு செய்யும் பணியை இந்த வாரியம் மேற்கொள்ளும்.

**காவலர்களுக்கு உணவுப் படி**

பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் காவலர்களுக்கு, இதுவரையில் காவலருக் கும் தலைமைக் காவலருக்கும் ரூ.6 மட்டுமே ஒரு நாள் உணவுப்படியாக அளிக்கப் பட்டது. ஆய்வாளரும், உதவி ஆய் வாளரும் ரூ.7.50 இவ்வகையில்

பெற்றனர்.

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும் பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவலர்க்கு வழங்கப்படும் உணவுப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 456, உள்துறை, நாள் 17.3.92-இல் பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப்படும் காவலர்க்கு கீழ்க்கண்டவாறு உணவுப் படியினை உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, இரண்டாம் நிலைக் காவலருக்கும், லான்ஸ் நாயக்குக்கும் நாளொன்றுக்கான படி ரூ.16-ம், தலைமைக் காவலருக்கும், முதனிலைக் காவலருக்கும் ரூ.20-ம், உதவி ஆய்வாளருக்கும், ஆய்வாளருக்கும் ரூ.30-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி**

காவல்துறை அலுவலர்களுக்கு 16.3.1992-க்கு முன்னர் வரை மாதாந்திரக் கருவிக் கலன் பெட்டிப் படி ('கிட்' படி) பின்வருமாறு வழங்கப்பட்டு வந்தது.

| | |
|---|---|
| துணைக் காவல் கண்காணிப்பாளர் | ரூ.30 |
| உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் | ரூ.20 |
| தலைமைக் காவலர் | ரூ.15 |

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி ('கிட் படி') உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அரசு ஆணை (நிலை) எண்.458, உள்துறை, நாள் 17.3.92-இல் காவல்துறை அலுவலர்க்குக் கீழ்க்கண்டவாறு கருவிக் கலன்கள் பெட்டிப் படியை ('கிட் படி') உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

1. காவலர்/தலைமைக் காவலர்/ லான்ஸ் நாயக்/நாயக் ஹவில்தார் ரூ.25

2. உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் ரூ.30

3. துணைக் காவல் கண்காணிப்பாளர்/ கூடுதல் காவல் கண்காணிப்பாளர்/மற்றும் காவல் கண்காணிப்பாளர் (இந்தியக் காவல் பணி அந்தஸ்து சாராத) தளவாய்கள் (இந்தியக் காவல் பணி சாராத) துணைத் தள வாய்கள்/உதவித் தளவாய்கள். ரூ.40



**சீருடைப் படி**

காவல்துறை அலுவலர்களுக்கு (இந்திய காவல் பணி அந்தஸ்து பெறாத காவல்துறை கண்காணிப்பாளர் முதல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வரை) சீருடைப் படி கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக்கப்பட்டு வந்தது •

ஆரம்பக்காலச் சீருடை மானியம் ரூ.750

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.) ரூ.250

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்களுக்குச் சீருடைப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 457, உள்துறை, நாள் 17.3.92-இல், காவல்துறை அலுவலர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சீருடைப் படியை உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ஆரம்ப காலச் சீருடை மானியம் ரூ.1,500

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை) ரூ.500

**காவல்துறையை நவீனப்படுத்துதல்**

இலங்கைத் தீவிரவாதிகள்/பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்து அடக்குவதற்காகவும் திட்டங்கள் வகுப்பதற்கான விரிவான செயற்குறிப்பிற்கு சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, ஆயுதங்கள், வெடிமருந்துகள், விரைவில் செல்லுதல், அதிரடிப்படைப் பயிற்சி, கூடுதலான படைப் பிரிவுகள், வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சி - சாதனம், பாதுகாப்புச் சாதனம், மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்புச் செய்தி - பயிற்சி ஆகியவைகளில் மாநிலக் காவல்துறையை வலுப்படுத்துவதற்கான ரூ.80.450 கோடி செலவாகும் விரிவான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசும் இதற்கான தொடக்க உதவித் தொகையாக ரூ.10 கோடி வழங்கியுள்ளது. இந்தத் தொகையை மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 100 டெம்போ டிரேக்ஸ் (Tempo Trax), வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் (Ammunition Bomb Disposal) படைத் தளவாடம், நுண் அலை இலக்க அமைப்பு (Micro Wave Digital) போன்ற சாதனங்கள் வாங்குவதற்குத் தமிழக அரசு பயன்படுத்தியது. மேலும், 123 டெம்போ டிரேக்ஸ்களையும், 269 மீயுயர் மின் அலைப்பெட்டிகளையும் (VHF Sets) வாங்குவதற்காக முறையே ரூ.339.85 இலட்சம், (ரூ.262.00 + 77.85 இலட்சம்) ரூபாயையும் 1991-92-ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் காவல்துறையை வலுப்படுத்தியதில், இவ்வாண்டில் பெரிதும் சாதனை ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக்கழகம்**

காவல்துறையின் நீண்டநாளைய தேவையை உணர்ந்த தற்போதைய அரசு 1991-ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு காவல்துறையினர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், காவல்துறைப் பணியாளர்களுக்கு 80 சதவீதம் வீட்டுவசதி செய்துகொடுக்கும் திட்ட இலக்கினை அடைய, ஒவ்வோராண்டும் 3,000 குடியிருப்புகள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதற்கிணங்க 1992-93-ஆம் ஆண்டில் 1000 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது. இதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புப் பாதுகாப்புப் படைப் பிரிவை ஏற்படுத்துதல்**

மிகவும் முக்கியமான பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, தேசியப் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு அளிக்கும் அதே அடிப்படையில் முதலமைச்சருக்கும் ஏனைய முக்கியப் பிரமுகர்களுக்கும் அருகிலிருந்தே பாதுகாப்பு அளிக்கத் தமிழ்நாடு அரசு, சிறப்புப் பாதுகாப்புப்படை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.



**இந்தியத் துணைக்கண்டத்தில் - திறமைக்கும் நேர்மைக்கும், வளர்ச்சிக்கும் உயர்வுக்கும், இலஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்**

**முற்றிலும் மகளிரே நிருவகிக்கும் காவல் நிலையம்**

சென்னை மாநகரில் முற்றிலும் மகளிரே நிருவகிக்கும் காவல் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரச புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இக்காவல் நிலையம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கியுள்ளது.

**உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்**

உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் தற்போது காவல்துறைப் பணியாளர்களுக்கு மட்டும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இவ்வாறு இந்தச் சலுகையை அதிகரிப்பதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலையில் 50 சதவீதத்தை அரசு ஏற்க இயலும்.

**விளையாட்டுகளும் போட்டி விளையாட்டுகளும்**

சென்னையில் 1991 டிசம்பரில் நடைபெற்ற 35-வது அனைத்திந்தியக் காவலர் விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கி சுடுவதில் தமிழ்நாடு காவல்துறை ஒட்டுமொத்த வீரருக்கான கோப்பையை வென்றது. மேலும் நாய் விளையாட்டுப் போட்டிக்கு ஒன்றும், அறிவியல் சார்ந்த துப்பு துலக்கும் பணிக்கு ஒன்றுமாக மேலும் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தமிழ்நாடு காவல்துறை பெற்றுள்ளது.

**நலத் திட்டங்கள்**

காவல்துறையில் உள்ள பணியாளர் - அலுவலர்களுக்கான பின்வரும் நலத் திட்டங்களுக்குத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது

1. தமிழ்நாடு காவல்துறை நலநிதிக்கு ஒட்டு மொத்த ஆண்டு மானியமாக அளிக்கப்பட்டுவந்த ரூ.5 இலட்சம் 1991-92 முதற்கொண்டு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2. பணியிலிருக்கும்போது மிகுந்த வீரதீரத்துடன் செயல்பட்டதால் இறந்த காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டுவந்த தனிக் கருணைத் தொகை 1.00 இலட்சம் ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. பணியிலிருக்கும்போது, மிகுந்த வீரதீரத்துடன் செயல்பட்டதன் விளைவால் காயமடைந்த காவல்துறைப் பணியாளர்களுக்குத் தனிக் கருணைத்தொகை ரூ.1,500-லிருந்து ரூ.20,000 வரையில் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

4. காவல்துறைப் பணியாளர்கள் பணியில் இருக்கையில் வீர தீரச் செயலில் ஈடுபட்டு இறந்து விடுவோர்களேயானால், அவருடைய வாரிசுதாரருக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியம், குடும்ப ஊதியத் தொகையாக அப்பணியாளர் வயது முதிர்வு ஓய்வுபெறும் நாள் வரையில் வழங்கப்படும். அதன் பின்னர், செயலிலுள்ள ஆணைப்படி

**★ இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையினையும் பேணிக் காப்போம்; இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்!**

**— மாண்புமிகு முதல்வர்**

கிடைக்கக்கூடிய குடும்ப உதவித்தொகை வழங்கப்படும்.

5. காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை போன்ற சீருடைத் துறைகளில் பணியாளர்களைப் பணியில் அமர்த்துவதற்குத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் நியமன வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. காவல்துறைப் பணியாளர்களுக்கு அலுவலர்களுக்கு ஆடை அணி பணிப்பை பராமரிப்புப் படிகள், உணவுக் கட்டணங்கள், சீருடைப் படிகள் ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன.

காவல்துறைப் பணியாளர்களின் பயனுக்காகச் சென்னை மாநகரில் ஒய்வு இல்லம் ஒன்று கட்டுவதற்கும், 17 மாவட்டங்களிலுள்ள 135 காவல் நிலையங்களோடு இணைந்துள்ள குடியிருப்புகளில் நவீன கழிப்பிடங்கள் கட்டுவதற்கும் அரசு கருதியுள்ளது.

**தீயணைப்புத் துறையில் வசதிகளும் சலுகைகளும்**

**புதிய கோட்டம் உருவாக்குதல்**

காமராசர் கோட்டத்தை, இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் கோட்டமாகவும் இரண்டாகப் பிரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்புதிய கோட்டம் 1.3.1992 அன்று முதல் இயங்கி வருகிறது.

**புதிய தீயணைப்பு நிலையங்கள் துவக்குதல்**

1. இவ்வரசு பதவியேற்றபின் 1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஒன்பது இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரூர் - செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், அனுப்பானடி - மதுரை மாவட்டம், நாவல்பட்டு - திருச்சிராப்பள்ளி மாவட்டம், கணபதி - கோயம்புத்தூர் மாவட்டம், பவானி - பெரியார் மாவட்டம், கும்மிடிப்பூண்டி - செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், ஊத்தங்கரை - தர்மபுரி மாவட்டம், துவரங்குறிச்சி - திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆர்க்காடு - வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

2. 1992-93-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 6 இடங்களில் புதியதாகத் தீயணைப்பு நிலையங்கள் துவக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

கொளச்சல் - கன்னியாகுமரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை - தர்மபுரி மாவட்டம், சேத்தியாத்தோப்பு - தென்னார்க்காடு மாவட்டம், வேதாரண்யம் - நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மண்டபம் - இராமநாதபுரம் மாவட்டம், வில்லிவாக்கம் - சென்னை மாவட்டம்

ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க ஆகும் செலவினம் பின்வருமாறு:

தொடர் செலவினம் ரூ.5.13 இலட்சம், தொடராச் செலவினம் ரூ.12.14 இலட்சம்


**புதிய வாகனங்கள் ஒப்பளித்தல்**

இவ்வாண்டு 5 நோயாளர் ஊர்திகள் வாங்கப்பட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், விருத்தாசலம், முசிறி, ஒரத்தநாடு, சங்ககிரி மற்றும் சோழவந்தான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நோயாளர் ஊர்திகள் வழங்க இவ்வரசு ஒப்பளித்துள்ளது. இதற்காகும் மொத்த செலவினம் ரூ.14 இலட்சமாகும்.

**பணியாளர் தேர்வுக்குழு அமைத்தல்**

இதுவரை நிலையத் தீயணைப்பு அலுவலர்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும், தீயணைப்பாளர்களைத் தீயணைப்புத் துறையும் தேர்வு செய்தன. நிலையத் தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பாளர்களைக் காவல் மற்றும் சிறைத்துறைக்குத் தேவையான பணியாளர்களுடன் சேர்த்துத் தேர்ந்தெடுக்கத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுவை அரசு தற்பொழுது அமைத்துள்ளது.

**—தொடர்ச்சி 77-ஆம் பக்கம்**



# தமிழ்நாட்டில் நீதி நிர்வாகம்



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
**கே.ஏ. கிருஷ்ணசாமி**

> **"இந்த ஓராண்டுக் காலத்தில், தமிழ் நாட்டில் நீதிநிர்வாகம் மிகவும் சிறந்து விளங்குவதைப் புள்ளி விவரங்களோடு விளக்கும் கட்டுரை இது."**

**ப**ன்னெடுங்காலத்தொட்டே, நீதி நிருவாகம் என்பது இன்றியமையாத பணிகளில் ஒன்றாக அனைத்து அரசு அமைப்பிலும் கருதப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும், அவற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பாடு அடைந்துள்ளன. நீதித்துறை சுதந்திர மாகச் செயல்படுவதற்கான தகுந்த சூழ் நிலையை உருவாக்கித் தருவதில் இவ்வரசு எப்போதும் விழிப்புடன் இருந்து வருகிறது. சிறந்த சேவையினை வழக் காடும் மக்களுக்கு வழங்குவதற்குத் தேவை யான நீதித்துறைக்கான கட்டடங்கள், மனித சக்தி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவைகளை அரசு வழங்குகிறது.

**மாநில அளவிலான நீதித்துறையின் படி அமைப்பு பின்வருமாறு**

சட்ட அதிகாரகளின் படியமைப் பானது தலைமை வழக்குரைஞரே தலைமை அலுவலராகவும், அரசு உரிமை யில் வழக்குரைஞர், கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர், குற்றவியல் வழக்குரைஞர், கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் போன் றோரை உள்ளடக்கியது.

1991-92-ஆம் ஆண்டு நீதி நிரு வாகத்தில் அரசின் சாதனை பின் வருமாறு

**சென்னை உயர்நீதிமன்றம்**

உயர்நீதிமன்றம் 28 நீதிபதிகளுடன் செயல் ஆற்றி வருகிறது. வழக்குகளை விரைந்து முடிக்கும் நோக்கத்துடன் நீதி பதிகளின் எண்ணிக்கையை 32-ஆக உயர்த்துவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு அளித்த செயற்குறிப்பிற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது.

**நீதித்துறை ஒதுக்கீடு**

1991-92-ஆம் ஆண்டில் நீதி நிரு வாகத்திற்கு நிதியினை ஒதுக்கீடு செய் வதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. 1988-89-ஆம் ஆண்டில் நீதி நிருவாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகையான ரூ.24.48 கோடிக்கு மாறாக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.40.19 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.45.99 கோடியும் உயர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய நீதிமன்றங்கள் அமைத்தல்**

மூன்றாகப் பிரிக்கப்பட்ட இராமநாத புரம், பசும்பொன் முத்துராமலிங்கத்



**சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள செல்வி நீதிபதி காந்த குமாரி பட்நாகர் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னை ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் (15.6.'92). மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.**

தேவர், காமராசர் மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், இடையில் ஏற்பட்ட சில இடர்ப்பாடினால், நீதிமன்றங்களை அமைப்பது காலதாமதமாகியது. 1991-92-ஆம் ஆண்டு இந்த இடர்ப் பாடுகள் நீக்கப்பட்டு, புதிய நீதிமன்றங்கள் விரைவில் துவங்கவிருக்கும் நிலையில் உள்ளோம். இந்நீதிமன்றங்கள் இப்பகுதி களில் வாழும் மக்களின் நீண்ட நாள் தேவையினை நிறைவு செய்யும்.

**உரிமையியல் நீதிமன்றங்கள்**

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக சிவகங்கையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லி புத்தூரில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

சிதம்பரனார் மாவட்டத்துக்காக தூத்துக்குடியில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்துக்காகத் திருவண்ணாமலை யில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

**குற்றவியல் நீதிமன்றங்கள்**

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக, சிவகங்கையில், நீதித் துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லி புத்தூரில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

**1991-92-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீதிமன்றங்கள்**

**உரிமையியல்**

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கொடைக்கானல்
2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நிலக்கோட்டை.
3. துணை நீதிமன்றம், இராணிப்பேட்டை.

**குற்றவியல்**

நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரியில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

சந்தனமரக் கடத்தல் குற்றங்களை விசாரிக்க, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில், திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்காக தனி நீதிமன்றம்.

## காசநோயைக் குணமாக்க

**இந்தியர்களில் 1.5 சதவிகிதம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக, காச நோயைக் குணமாக்குவதற்கு நீண்ட கால மருத்துவச் சிகிச்சை அளிக்கப் பட்டு வந்தது. அதாவது 18 முதல் 24 மாதங்கள். குறுகிய கால மருத்துவ முறை 212 மாவட்டங்களில் அறி முகப்படுத்தப்பட்டதிலிருந்து, இது 6 முதல் 8 மாதங்களாகக் குறைக்கப் பட்டுவிட்டது. சராசரியாக ஒவ் வொரு ஆண்டும் 12 இலட்சம் புதிய காசநோயாளிகள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். கிராமப் புறங்களில் காசநோயைக் கண்டு பிடிப்பதற்காக, ஒவ்வொரு ஆரம் பச் சுகாதார நிலையமும், மாத மொன்றுக்கு 50 சளி பரிசோதனைகளை நடத்த வேண் டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.**

பயங்கரவாத-நாசவேலைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட நீதிமன்றம்.

உடனடித் தேவை காரணமாக - அதாவது, தற்செயல்விடுப்பில் செல்லுதல் போன்ற காரணத்தினால் தனி நீதிபதி தற்காலிகமாக அலுவலகம் வராத நேரத்தில், வழக்குகளை விசாரிக்கும் பணி தடங்கலின்றி நடைபெற கூடுதல் நீதிபதி ஒருவரை அரசே நியமித்துள்ளது.

**1991-92-ஆம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள் குறித்த செலவினங்கள்**

1991-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 4 கோடி செலவில் கட்டப்பட்ட உயர்நீதிமன்றக் கூடுதல் வளாகத்தினைத் துவங்கி வைத்தார்.

1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1. உயர்நீதிமன்றக் கட்டடத்திற்கும் புதிய கட்டடத்திற்கும் இணைப்பு வழி கட்டுதல் ரூ.10.50 இலட்சம்.

2. கூடுதல் உயர்நீதிமன்றக் கட்டடத்தை முன்பகுதியில் சிமிட்டி வண்ணப்பூச்சு பூசுதல் ரூ.2.50 இலட்சம்.

3. இராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் ஒரு இலட்சம்.

4. பல்வேறு நீதிமன்றங்களுக்குச் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.8.65 இலட்சம்


5. உயர்நீதிமன்றத்தில் புதிய நிருவாகத் தொகுதிக்குத் தேவையான அறை கலன்கள் வாங்குதல் ரூ.27.91 இலட்சம்.

6. 41 உருக்குப் பதிவேட்டு அடுக்குகள் வாங்குதல் ரூ.1.25 இலட்சம்.

7. இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் வழக்குரைஞர்கள் சங்கக் கட்டடம் கட்டுதல் ரூ.237 இலட்சம்.

**தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு**

ஏழை எளியவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டப்படி ஆலோசனை நல்குவதற்காகத் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டு உள்ளது. இவ்வாலோசனைக் குழு 1977-ஆம் ஆண்டிலிருந்து சமுதாயத்தில் பின்தங்கியவர்களை வழக்காடும்போது அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும், அவ்வாறே 1992-93-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும் தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்துள்ளது.



**★ உலக உயிர்களில் அறிவு நிரம்பப்பெற்ற உயிர் - பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான், அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த செயல்களையெல்லாம் சாதிக்க முடியும்.**

**—தந்தை பெரியார்**

**சட்டமியற்றல்**

**தமிழ்நாடு பொதுச் சொத்து அழிப்பு மற்றும் இழப்பைத் தடுத்தல் சட்டம்**

பொதுச் சொத்துக்கள் சேதமடைவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக அரசு 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்தச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தில் எவர் சேதம் விளைவித்தாரோ அவரிடம் மட்டுமன்றி அத்தகைய சேதங்களுக்குப் பொறுப்பாளியாக உள்ள அரசியல் கட்சி அல்லது பிற இனக்குழுவிடமிருந்து சேதத்தில் மதிப்புத் தொகையினை வசூலிக்க வழி செய்கிறது.

**தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதி திருத்தச் சட்டம் - 1992**

வழக்குரைஞர்கள் மன்றத்தின் கருத்துக்களை ஏற்று வழக்குரைஞர்கள் வக்காலத்துக்கு ஆஜராவதற்கான குறிப்பாணைகள் அல்லது ஆஜர் ஆவதற்கான ஏனைய ஆவணங்களைத் தாக்கல் செய்வது ஆகியவற்றின் போது நீதிமன்றத் தபால்தலையுடன் சேர்த்து, தற்போது ஒரு ரூபாய் என்று இருப்பதற்குப் பதிலாக 2 ரூபாய் மதிப்புள்ள வழக்கறிஞர் மன்றத் தபால் தலைகளை ஒட்ட வேண்டும் எனவும், பிற கருத்துக்களையும் ஏற்று திருத்தச் சட்டம் ஒன்றை 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு கொண்டு வந்துள்ளது. இத் திருத்தச் சட்டத்தின் மூலம் வழக்குரைஞர்கள் நலநிதியின் நிதி வளம் அதிகரிக்கும் எனவும் அதனால் வழக்குரைஞர்கள் மன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நிவாரணம் கிடைக்கும்.

தமிழக அரசு, நீதித்துறையின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றவும் நீதித்துறை தனித்தும், வழக்காடும் மக்களுக்கு நீதி விரைவாகக் கிட்டும் வகையிலும் செயல்படத் தகுந்த சூழலை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சிறைத்துறை**

தமிழகத்தில் சிறைகளை நவீனப்படுத்தும் வகைக்காக மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.864 இலட்சங்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மைய அரசு ரூ.432 இலட்சமும் மாநில அரசு ரூ.432 இலட்சமும் செலவு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு வழங்கும் தொகை ரூ.432 இலட்சத்தில் சில திட்டங்களுக்கு 100 சதவிகித மானியமும் சில திட்டங்களுக்கு 50 சதவிகித மானியமும் அளிக்க ஒப்புதல் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள மொத்த செலவுத் தொகை ரூ.864 இலட்சத்தில் ஏற்கெனவே ரூ.359 இலட்சத்திற்குச் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது மைய அரசு தமிழகத்தில் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்குவதற்கு ரூ.235.59 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றிற்கு மாநில அரசு தன் பங்குத் தொகையாக ரூ.45.23 இலட்சம் வழங்க வேண்டும். எனவே 31.3.92 நாளிட்ட அரசாணை எண். 555-இல் தமிழகத்தில் சிறைச்சாலைகளை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள மொத்த செலவினத்தொகை ரூ.280.82 இலட்சத்திற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

# வருவாய்த்துறையின் வளமான பணிகள்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

**எஸ்.டி. சோமசுந்தரம்**



”

**வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா வழங்குதல், நிலம் கையகப்படுத்துதல், உபரி நில ஒப்படைப்பு, மாவட்டங்கள் பிரித்தல், வறட்சி நிவாரணப் பணிகள் முதலான பணிகளை வகுத்தும், தொகுத்தும் விரைவாய் செயலாற்றி வருகின்றது வருவாய்த் துறை.**

“

சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலிவரும் துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்று. வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா வழங்குதல், மாவட்டங்களைப் பிரித்தல், நிலச் சீர்திருத்தம் முதலான பணிகள் இவற்றுள் அடங்கும்.

**வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 4,57,672 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு

ஆதிதிராவிடர் 1,77,343, பழங்குடியினர் 3,660, ஏனையோர் 2,76,669 மொத்தம் 4,57,672.

**விவசாய நிலப்பட்டா**

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 6,372 பேருக்கு விவசாய நிலப்பட்டா வழங்கப் பட்டுள்ளது. மொத்தம் 6,426.55 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு

ஆதிதிராவிடர் 1,207, பழங்குடியினர் 16, ஏனையோர் 5,149, பயனாளிகள் மொத்தம் 6,372.

**நிலம் கையகப்படுத்துதல்**

அரசுத் துறைகள், அரசுப் பொது நிறுவனங்கள் மற்றும் இரயில்வே துறையினர் கையகப் படுத்தியும் பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக வெற்று நிலங்களாக வைத்திருக்கும் நிலங்களை அரசு திரும்பப் பெற்று, வேறு பொது நோக்கங் களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் ஒதுக்கீடு செய்துதர நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.

**மாவட்டங்களைப் பிரித்தல்**

1. 1991-92-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தை தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரித்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் 18.10.91 முதல் இயங்கி வருகிறது.

2. 1992-93-இல் தென்னார்க்காடு மாவட் டத்தை தென்னார்க்காடு மாவட்டம் என்றும், வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மாவட்ட நிர்வாகம் மக்களை நெருங்கிச் செயல்படவும், மக்களின் குறைகளை நன்கு களைவதற்கும், சிறப்புத் துணை மாவட்டாட்சித் தலைவர் மற்றும் அவருக்கு உதவி செய்யத் துறை

அலுவலர்களுடன் கூடிய 'பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு' என்ற பிரிவு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் செயல்பட தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வட்ட அலுவலகங்களில் பொது மக்கள் அடிக்கடி செல்வதைத் தடுப்பதற்காக 3 முதல் 4 கிராமங்கள் அடங்கிய ஒவ்வொரு மண்டலத் திற்கும் ஒரு மண்டலத் துணை வட்டாட்சியரை அரசு நியமித்துள்ளது.

5. சாதிச் சான்றிதழ்களை விரைந்து வழங்கு வதற்கு ஏற்றவகையில், மாணவர்களிடமிருந்து சாதிச் சான்றிதழ்கள் கோரி மனுக்கள் பெறப்பட்ட அன்றே அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது.

6. சாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றி தழ்கள் மற்றும் சொத்து மதிப்புச் சான்றிதழ்கள் போன்றவை வழங்கும் முறை குறித்து அரசு சுருக்கமாக அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.

### நிலச் சீர்திருத்தம்

### பினாமி நிலம் எடுத்தல்

**நீண்ட நெடுங்காலமாக வெளிப்படையாய் வராமல் இருக்கும் பல்லாயிரக்கணக்கான பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, அந்நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கே சொந்தமாக்கும் குறிக்கோளின்படி, 1958-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் நாள் வரையிலான காலத்தில், மிகை (உபரி) நிலங்களை விற்பனை, கொடை, ஒப்படைவு, ஏற்பாடு, பாகப்பிரிவினை ஆகியவற்றில் எந்த வகையிலேனும் அல்லது பிற எந்த வகையிலேனும் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும் சட்டப்படி செல்லாத வையாக ஆக்கும் வகையிலும், நிலமற்ற ஏழை களுக்கு அந்த நிலங்களை வழங்கவும், சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 3.10.1991 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட முன் வடிவுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.**

### உபரி நில ஒப்படைப்பு

1991-92-ஆம் நிதியாண்டு முதல் மே திங்கள் வரையில் 4,721 நபர்களுக்கு 5,115 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. 1991-92-ஆம் நிதியாண்டில் 2,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் 4,524 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு நிர்ண யிக்கப்பட்ட இலக்கை மிஞ்சியுள்ளதால், மைய அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.

### பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு

உழுபவனுக்கே நிலத்தை உரிமையாக்கும் வகையில் சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. பயிரிடும் குத்தகைதாரரின் நலன்களைப் பாதுகாக்க நில உரிமையாளர்களுக் கும் பொது நம்பகங்களுக்கும் மற்றும் குத்தகை தாரர்களுக்கும் ஏற்படக்கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க ஐந்து வருவாய் நீதி மன்றங்கள் இருந்தன. தற்போது மேலும் 6 வருவாய் நீதி மன் றங்களை மன்னார்குடி, திருவாரூர், கும்ப கோணம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய இடங்களில் ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

**நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார் (18.10.1991).**



**குத்தகைப் பதிவு செய்தல்**

விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகை தாரர்கள் தங்களது பெயரினைப் பதிவு செய்வதற் காக உதவும் வகையில், நிலமற்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகை தாரர் ஒருவரும், மற்றும் சமூக நல ஊழியர் மூவரும் அடங்கிய புதிய ஆலோசனைக் குழுக் களைச் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து வட்டங்களிலும் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

**குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்**

விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக அரசு 1948-ஆம் ஆண்டைய குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் சீரான முறை யில் செயல்படுத்த உள்ளது.

**நகர்ப்புற நிலச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நில ஒதுக்கீடு**

தமிழ்நாடு நகர்ப்புற உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப் பட்ட வெற்று நிலத்தில், 9 எக்டேர், 25 ஏர், 84 சதுர மீட்டர் நிலத்தை அரசுத் துறைகள், அரசு கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள், ஆகியவற்றிற்கு 1.7.91 முதல் 31.5.92 வரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**குடியிருப்புப் பட்டா வழங்குதல்**

குடியிருக்க வீடு இல்லாத விவசாயி, விவசாயத் தொழிலாளர் அல்லது கிராமப்புற கைவினைஞர் ஆகியோருக்கு 1991-92-ஆம் நிதியாண்டு முடிய 1,81,609 குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

**வருவாய்த்துறைக்கட்டடங்கள் மற்றும் பிற முக்கிய வசதிகள்**

1991-92-ஆம் நிதியாண்டில் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் ஒவ்வொன்றும் சுமார் ரூ.43 இலட்சம் செலவில், பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்) மற்றும் இராமநாதபுரம் (திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்) வட்டாட்சியர் அலுவலகங்களைக்கட்ட அனுமதிக் கப்பட்டுள்ளது. இதே நிதியாண்டில் காங்கேயம் (பெரியார் மாவட்டம்), பென்னகரம் (தருமபுரி மாவட்டம்), கந்தர்வக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் ஏற்காடு (சேலம் மாவட்டம்) ஆகிய ஊர்களிலுள்ள வட்டாட்சியர் அலுவலகங் களை விரிவுபடுத்த ரூ.8 இலட்சத்திற்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

பரமக்குடி, கொடைக்கானல், பழனி, கிருஷ்ண கிரி, தருமபுரி மற்றும் சைதாப்பேட்டை கோட்ட அலுவலகங்கள் புதிதாகக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே நிதியாண்டில், உத்திரமேரூர் வட்டாட்சி யரின் அலுவலகத்தின் புதிய கட்டடத்தை,



★ சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல் தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்வேறு இன மக்கள் வாழும் மொழிவாரி மாநிலங்கள் சேர்ந்த கூட்டாட்சியின் தொகுப்புதான் நம் குடியாட்சி.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

1992-93-ஆம் நிதியாண்டில் பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்), இன்னொரு வட்ட அலுவலகம் (வருவாய் நிருவாக ஆணையரால் தெரிந்தெடுக்கப் பட வேண்டியது) மற்றும் கொடைக்கானல் வரு வாய்க் கோட்ட ஆட்சியருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியருக்குக்குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்பட உள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள எல்லா பிர்கா வருவாய் ஆய்வாளர் களுக்குப் புதிய குடியிருப்பு கட்டிக் கொடுப்பதை அரசு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மொத்தமுள்ள 1,081 பிர்காக்களில் 1,071 பிர்கா ஆய்வாளர்களுக்குக் குடியிருப்புகள் இது வரையில் கட்டுப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 10 பிர்கா ஆய்வாளர்களுக்குப் புதிய குடி யிருப்புகள் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டும் சாதனை நிறைவு பெறுகிறது.

இந்த நிதியாண்டில் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்குக் குடியிருப்பு மற்றும் 'முகாம்' அலுவலகம் சுமார் ரூ.23 இலட்சத்தில் கட்டு வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதில், ரூ.10 இலட் சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வட்டாட்சியர் அலுவலகங் களில், இடநெருக்கடி உள்ள ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்கள் விரிவுபடுத்தி கூடுதல் கட்டடங்கள்

கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து வருவாய் நிருவாக ஆணையரின் முடிவான அறிக்கை பெறப்பட்டு ஆணைகள் வழங்கப்படும். தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகங்களில், வரும் பொதுமக்கள் வசதிக்காகவும், அங்கு பணிபுரியும் ஊழியர்களின் வசதிகளுக்காகவும் குளிர்மின்கலன்கள் பொருத்தப்பட இருக்கின்றன. இந்த வகையில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் குளிர் நீர் மின்கலன்கள் வசதிகள் செய்யப்படும். இதே நிதியாண்டில் மேலும் ரூ.12 இலட்சம் செலவில் சில வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் இந்த வசதிகள் ஏற்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.


**இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் எதிர்பாராத விபத்துக்கள்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3.7.91 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நல்லூரில் இயற்கை எரிவாயுக் கசிவு ஏற்பட்டதால், அப்பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருதி போக்குவரத்து மற்றும் உணவுச் செலவுகளுக்காக ரூபாய் ஒரு இலட்சம் முன்னாள் தஞ்சை மாவட்டாட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டது.

ஜூன், ஜூலை 1991-இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின்போது ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட ஒரு குழு அனுப்பப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப ரூ.55,996 இலட்சம் நிவாரணப்பணிகளுக்காக வழங்கப்பட்டது.

சென்னையில் புயல் வெள்ளம் மற்றும் தீ விபத்தினால் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.600-ம், பகுதியாய்ப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.300-ம் பிற பகுதிகளின் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைக்கு ரூ.250-ம் மானியமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நவம்பர் 1991ல்ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து 3,547.6 இலட்சம் ரூபாய் அளித்து நிவாரணப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் அரசு மேற்கொண்டது. 1991-92-இல் இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ரூ.3,604.6 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து 1991-92-க்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு அதிகமாகவே செலவு செய்து சாதனை படைத்துள்ளது.



**மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் டாக்டர் என். ஜனார்த்தன ரெட்டி அவர்கள், 4.6.92 அன்று நெல்லூரில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் (நந்தி விருதுகள்) வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நினைவுப் பரிசினை வழங்கினார்.**

வறட்சி நிவாரணப் பணிகள்

1991-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிலவிய வறட்சி நிலைமையை ஆராய்ந்து தமிழ்நாடு அரசு 30.11.1991 வரை ரூ.8.69 கோடி பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு வழங்கியது.

1.1.1992-க்குப் பிறகு கோயம்புத்தூர், காமராசர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, பெரியார், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், சிதம்பரனார் மாவட்டத்தில் கடுமையான வறட்சியினால் பாதிக்

கப்பட்டதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.6.72 கோடி செலவில் ஆழ்துளைக் கிணறுகள் உட்பட பல்வேறு குடிநீர்ப் பணிகளுக் காக 30.4.92 வரை செலவு செய்ய அனுமதி வழங்கினார்கள்.

தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என அரசுக்குத் தெரியவந்தது. எனவே, 30.4.92-க்குப் பிறகும் வறட்சி நிவாரணப்பணி களைத் தொய்வு இல்லாமல் தொடர்ந்து செயல் படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் ரூ.6 கோடி, மே மற்றும் ஜூன் திங்களில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

**வேளாண்மை வருமான வரி**

விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையிலும் வரி வசூலிப்பதில் தொல்லைகளைத் தடுப்பதற்கு மான ஒரு நடவடிக்கையாக நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, நிலக்கடலை, பருத்தி, எள் முதலான மலைத் தோட்டப் பயிரல்லாத பிற பயிரினங்கள் அனைத்தின்மீதும் விதிக்கப்படும் வேளாண்மை வருமான வரியினை அறவே விலக்குவதற்காக இந்த அரசு சட்டம் 40/91 மூலமாக ஏற்கெனவே சட்டத்திருத்தம் செய்துள்ளது.

மேலும் நிகர வருமான விலக்களிப்பு வரம்பை ரூ.10,000 விருந்து ரூ.22,000 ஆக உயர்த்தி யுள்ளது. அது மட்டுமல்லாமல் மலைத் தோட்டப் பயிர்கள்மீது மட்டுமே வேளாண்மை வருமான வரியை முடிவு செய்து சட்டத்திருத்தம் செய் துள்ளது. நிலைப்படுத்தப்பட்ட (Standard Acres) முறையிலிருந்து சாதாரண ஏக்கர் முறைக்கு 8 சாதாரண ஏக்கர் வரையில் வரி விலக்களித்து ஒட்டு மொத்தமாக வரி செலுத்துவதற்குரிய நில வரம்பை 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர்களுக்கு உயர்த்தியுள்ளது. இந்தச் சட்டத் திருத்தங்கள் மூலமாகச் சுமார் 45,000 விவசாயிகள் பயனடை கிறார்கள்.



மக்கள், தமக்குச் சேவை செய்வதற்காகவே தன்னிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதால் - அத்தொண்டிற்காக மாத ஊதியம் பெறுவது முறையல்ல'' என்று கூறி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாத ஊதியமாகப் பெயரலவிற்கு ஒரே ஒரு ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு வருகிறார்

**நில அளவைப் பதிவேடுகளைக் கணிப்பொறியில் செயலாக்குதல்**

தமிழ்நாடு அரசு, மைய அரசு உதவியுடன், 25 இலட்ச ரூபாய் செலவில் நில அளவைப் பதி வேடுகளைக் கணிப்பொறியில் செலவாக்கும் திட்டத்தை முதன்மைத் திட்டமாக, சேலம் மாவட் டத்தைத் தேர்ந்தெடுத்தது.

**வருவாய் நிர்வாகத்துறையினை மேம்படுத்துதல் மற்றும் நிலஅளவைப்பதிவேடுகளைச் சீராக்குதல்**

மைய அரசு 1991-92-ஆம் ஆண்டு, வருவாய் நிர்வாகத்தினை மேம்படுத்தவும், நிலஅளவைப் பதிவேடுகளைச் சீராக்குவதற்கும் ரூபாய் 148 இலட்சத்திற்கு மிகையாமல் அளிக்க நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும் 1991-92-இல் மாநில அரசு ரூ.74 இலட்சத்தினை மேற்கண்ட திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தன் பங்காக மத்திய அரசு ரூ.74 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

**நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் தவறுகளைக் களைதல்**

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் முறை கேடுகள் நடந்துள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்ததன் அடிப்படையில், பத்திரிகையின் வாயி லாகத் தவறுகளை திருத்தி ஆணையிடவும், ஒவ் வொரு குறுவட்டத்திலும் 5 கிராமங்களைத் தேர்ந் தெடுத்து சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர் களும் முகாமிட்டு தவறுகளைத் திருத்தி ஆணை யிடவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**நிலஅளவைப் பதிவேடுத் துறையில் உள்ள தொகுப்பூதிய பணியாளர்களை நிரந்தரமாக்குதல்**

1982-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணிக் காகப் பல்வேறு இனங்களில் தொகுப்பூதியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அப்பணி யாளர்களில் இவ்வரசு பதவியேற்ற நாளிலிருந்து கீழ்க்கண்ட துறைகளில் நிரந்தரப் பணியாளர் களாக (ஊதிய ஏற்ற முறையில்) நியமிக்கப் பட்டனர். 1. சார்பதிவாளர் அலுவலகம் 25, 2. ஊட்டச்சத்துத் துறை 82, 3. கருவூலத் துறை 6.

இவ்வாறு வருவாய்த்துறை பல நிலைகளில் பணியாற்றி மாவட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப் பிட வேண்டும்.●



# எல்லோருக்கும் கல்வி



மாண்புமிகு கல்வி அமைச்சர்

## செ. அரங்கநாயகம்

**"'எல்லோருக்கும் கல்வி' என்பதே அரசின் இலட்சியம். அந்த அடிப்படையில் கல்வித் துறை அரும்பணிகள் ஆற்றி வருகின்றது."**

'கண்ணுடையோர் என்போர் கற்றோர்' என்றார் வள்ளுவர். அதற்கிணங்க, அனைவரும் கல்விக் கண் பெற அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றது.

எல்லோருக்கும் கல்வி என்னும் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 6-11 வயது பிரிவில் 0.85 இலட்சமும், 11-14 வயது பிரிவில் 1.25 இலட்சம் மாணவ மாணவிகளை கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்காகும்.

அதன்படி 1991-92-ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வியில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவ மாணவிகளின் விவரம் வருமாறு:-

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 6-11 வயது பிரிவின் கீழ் 4.25 இலட்சம் 11-14 வயது பிரிவின் கீழ் 6.25 இலட்சம் மாணவ மாணவிகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்காகும்.

1991-92-ஆம் ஆண்டில் 1,000 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் (இளநிலை) மாதம் ரூ.800 தொகுப்பு ஊதியம் வீதம் அனுமதிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் இன்னும் ஊரக வளர்ச்சித்துறையினராலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் இக்கட்டடப் பராமரிப்பிற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் ரூ.4 கோடி ஊரக வளர்ச்சித்துறை இயக்ககத்தற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாணவர்கள் பள்ளிகளை விட்டு பெருமளவில் இடையில் நிறுத்திவிடுவதைத் தவிர்க்க, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், இலவசச் சீருடை வழங்கும் திட்டம், இலவசக் காலணி வழங்கும் திட்டம், பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவசப் பஸ் பாஸ் வழங்கும்

திட்டம் 1-ஆம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம் முதலியன நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களினால் பயனடைவோர் 62.09 இலட்சம் ஆவார்கள். சத்துணவுத் திட்டம் சமூக நலத்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களின் முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பெண் ஆசிரியைகளை மட்டுமே நியமனம் செய்தல் வேண்டும் என்று அரசு ஆணை வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் 27 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த 13.1.92-இல் ஆணை வழங்கப்பட்டுள்ளன.

நிதி உதவியற்ற 8 ஆரம்பப் பள்ளிகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 14 நிதி உதவியற்ற ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

### மைய அரசு உதவியுடன் கூடிய திட்டங்கள்

**கரும் பலகைத் திட்டம்**

1987-88 முதல் மூன்று கட்டடங்களாக இத்திட்டத்தின் கீழ் ஓராசிரியர் தொடக்கப் பள்ளிகளை மேலும் ஒரு ஆசிரியர் பணியிடம் வழங்கி ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்துதல், சரியான கட்டட வசதி இல்லாத தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தருதல், கற்பிப்பு உபகரணங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்த தொகை, இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூடுதலாசிரியர் பணியிடங்கள் வழங்கி ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தும் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களிலும், 1,829 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டன. பணியிடங்கள் அனைத்தும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு 1829 ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இதுவரை கூடுதல் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிய வகையில் 1204.28 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. செலவிடப்பட்டுள்ள தொகையில் 31.3.1992 வரையில் 754.32 இலட்சம் ரூபாய்கள் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கற்பிப்பு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்களிலும் 29,075 பள்ளிகளுக்குக் கற்பிப்பு உபகரணங்களும் நூலகப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மைய அரசு இத்திட்டத்திற்காக வழங்கிய நிதி ஒதுக்கீடு 2306.66 இலட்சம் ரூபாய்களாகும்.

தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறை கட்டட வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்




★ கிராமப்புறங்களில்- வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து- ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களுடன் கூடிய திட்டத்தை அமலாக்கல் ஆகியவற்றின் மூலம் அவர்களின் வறுமையை ஒழிக்க ஊரக வளர்ச்சித்துறை முனைந்து செயலாற்றி வருகிறது.

களுக்குச் சேர்த்துக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1,197 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன. 809 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 388 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

**நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்தும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக இரண்டு கட்டங்களில் நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கப் பட்டுள்ளன.

மூன்றாவது கட்டத்தில் 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு 1991-92-இல் அறிவியல் பெட்டகங்கள் வழங்குவதற்கு மைய அரசு ரூ.5.25 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது.

**தொழில் நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தினை உயர்த்துதல்**

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 2666 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன. இதற்காக மைய அரசு ரூபாய் முப்பது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது.

இரண்டாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் எழுபது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 6222 தொடக்கப் பள்ளிகளுக்கு, வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் நூறு இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 10,000 பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப் பட்டன.

**பள்ளிக் கல்வி**

6-18 வயது தொகுதியினரின் கூடுதல் மாணவர் சேர்க்கைக் காரணமாக கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு, கீழ்க் குறிப் பிட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களை 1991-92-ஆம் ஆண்டு அனுமதித்துள்ளது:

1. இடைநிலை ஆசிரியர்கள் (மாதம் ரூ.800 தொகுப் பூதியம்) .. 1200 பணியிடங்கள்

2. உயர் பள்ளித் தலைமையாசிரியர்கள் .. 20 பணி யிடங்கள்

3. பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) தமிழாசிரி யர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,400 தொகுப்பூதியம்) 145 பணியிடங்கள்

4. முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,750 தொகுப்பூதியத்தில்) 120 பணி யிடங்கள்

**பள்ளிகளுக்குச் சுற்றுப்புறச் சூழல் கல்வி**

பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வித் திட்டம் முதற்கட்டமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.34 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத் தின் இரண்டாம் கட்டமான ரூ.33.86 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்திலுள்ள 1,746 தொடக்க மற்றும் 173 நடுநிலைப் பள்ளிகளில் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும், பயன் தரும் மரங்கள் மற்றும் பிற மரங்களைப் பள்ளி வளாகத்தில் வளர்த்து சுற்றுப்புறச் சூழலைச் சிறப்படையச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.



★ **மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை- அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மை அளிப்பதுமாகும்.**

**—தந்தை பெரியார்**

**அறிவியல் கல்வி - தொழிற்கல்வி**

1986-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிக்கப் படும் அறிவியல் கல்வியின்தர மேம்பாடு சிறப்பாய் வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,769 உயர்நிலைப் - மேல்நிலைப் பள்ளிகள் ரூ.599.98 இலட்சம் பெறுமானமுள்ள அறிவியல் உபகரணங்கள் மற்றும் நூல்நிலைய நூல்கள் ஆகியவற்றைப் பெற் றுள்ளன. மேலும் நடுவணரசின் திட்டத்தின் கீழ் கல் வியை தொழிற்கல்வியாக மாற்றும்பொருட்டு, 940 புதிய தொழிற்கல்விப் பிரிவுகள் துவங்க 340 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.568.55 இலட்சம் செலவில் உப கரணங்கள் மற்றும் கட்டடம் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. கிராமப்புற மாணவர்களிடையில் திறமை மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்குவிப்பதற் கான திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடி வெடுத்து, அத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் படிக்கும் மாணவ மாணவியருக்கு எட்டாம் வகுப்பின் இறுதியில் மாவட்ட அளவில் ஒரு தேர்வு நடத்தி தேர்ச்சி யில் முதலில் வரும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வீதம் ஊக்கு விப்புப் படிப்புதவித் தொகை அம்மாணவ மாணவி பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரை அளிக்கப்படும்.

**பள்ளிகளில் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

அரசுப் பள்ளிகளுக்குப் போதிய வகுப்பறைகள் இல்லாததால் 64 அரசு உயர்நிலை - மேல்நிலைப் பள்ளி



களில் மூன்று வகுப்பறைகள் ''ஹட்கோ'' நிதி உதவி யுடன் ரூ.300 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1989-90 வரை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 39 பள்ளி களுக்கு ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக ரூ.35 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**பள்ளிகள் திறத்தல்**

1991-92-இல் 21 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 20 நடுநிலைப் பள்ளி களை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மிகப் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் 7 உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம்**

கல்வியில் மேன்மை நிலையையும் சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களில் திறமையான நிர்வாகத்தையும் ஏற்படுத்தவும் மற்றும் முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரியர் களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்கும் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தும் நெறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதப்பட்டது. இதற்கென 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது.

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்குதல்**

கடந்த பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் பல (தொடக்க, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள்) அரசின் நிதி உதவி இன்றி இயங்கி வந்தன (பள்ளி முழுவதுக்குமோ அல்லது பள்ளியின் சில பிரிவுகளுக்கோ). இவற்றில் சிறுபான்மைப் பள்ளிகள் சிலவற்றுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து சென்னை உயர் நீதிமன்றம் ஆணைகள் பிறப்பித்திருந்தது. இப் பொருள் பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

தற்போதைய அரசு ஜூன் 1991-இல் ஆட்சிக்கு வந்த உடன் இவ்விஷயத்தைத் தீவிர ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு மாநில அரசின் நிதி நிலைக்குட்பட்டு இப் பிரச்சினைக்கு நியாயமான பரிகாரம் வழங்க வேண்டும் என்று கருதியது. பொருத்தமான வரன்முறைகளின் அடிப்படையிலும் இப் பள்ளிகளின் கோரிக்கைகள் குறித்து நியாயமான பரிகாரத்தை அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக வல்லுநர் குழுக்களை அரசு நியமித்தது. அவ் வல்லுநர் குழுக்கள் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில் 1987-88-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் தொடங்கப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப் பட்ட தனியார் பள்ளிகளுக்கும் வல்லுநர் குழுக்கள் பரிந்துரைத்த ஆசிரியர் - மாணவர் விகிதத்தின் அடிப் படையில் அனுமதிக்கத்தக்க பணியிடங்களுக்கு அரசு நிதி உதவி வழங்கலாம் என அரசு முடிவு செய்தது. இதன்படி இத்தகைய 332 சிறுபான்மை மற்றும் சிறுபான்மையின ரல்லாத அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆரம்ப, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள் பயனடையவும் விதத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.2.60 கோடி செலவில் 746 பணியிடங்களுக்கு அரசு 1.6.91 முதல் அரசு மானியம் அனுமதித்து 1.4.92 அன்று அரசாணைகள் வெளியாகி யுள்ளன.

**முழு எழுத்தறிவுத் திட்டம்**

நூறு சதவீத எழுத்தறிவு இயக்கம் மக்கள் சக்தியையும், தன்னிறைவுத் தொண்டு நிறுவனங்களின் உதவியையும்

திரட்டி 15- 35 வயதுப் பிரிவு மக்கட்கு முழுமையான எழுத்தறிவு வழங்க 1991- 92-ஆம் ஆண்டு முதற் கட்டமாக கீழ்க்கண்ட ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 18.34 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு-அம்பேத்கர், மதுரை.

இரண்டாவது கட்டமாக 1992-93-இல் மேலும் கீழ்க்கண்ட பத்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.

இராமநாதபுரம், கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார், திண்டுக்கல்-அண்ணா, சென்னை, தென் ஆர்க்காடு, சேலம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர். எஞ்சிய மாவட்டங்களில் 1993-94-இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டத்திற்கான நிதியை மத்திய மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், புதிய கல்விக் கொள்கைக்கிணங்க தயாரிக்கப்பட்ட 1 முதல் 12 வரை யிலான வகுப்புகளுக்குத் தரமான பாட நூல்களை நியாயமான விலையில் வெளியிடுகின்றது.

1991-92-ஆம் கல்வி ஆண்டில் 457 இலட்சம் பாடநூல் படிகள் மாநிலத்திலுள்ள 118 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில அரசின் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத் தின் கீழ், ரூ.18.30 கோடி பெறுமானமுள்ள 3.36 கோடி பாட நூல் படிகளை இந்நிறுவனம் வழங்கி யுள்ளது. இவற்றால் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் 64 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள் ளனர். பாட நூல் நிறுவனம் குறிப்பேடுகளையும் தயாரித்து மாணவர்களுக்குச் சீரான விலையில் வழங்கி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு ரூ.325 இலட்சம் பெறுமானமுள்ள குறிப்பேடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**கல்லூரிக் கல்வி**

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் புதிய பெண்கள் கல்லூரி ஒன்றை ரூ.32.39 இலட்சம் செலவில் அடிப் படை வசதிகளுடன் 1991-92-ஆம் ஆண்டில் நிறுவு வதற்கும், 1992-93-ஆம் கல்வி ஆண்டில் வேலை வாய்ப்பிற்குரிய படிப்புப் பிரிவுகளுடன் செயற்படுவதற் கும் அரசு ஆணையிட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட படிப்புப் பிரிவுகள் அக்கல்லூரியில் அளிக்கப்படும்.

1. இளஅறிவியல் (கணிதம்)
2. இளஅறிவியல் (கணிப்பொறி அறிவியல்)
3. இளங்கலை (Corporate Secretaryship)
4. இளங்கலை (Bio Chemistry)

இது ஓர் பெண்கள் கல்லூரி என்பதால் மாணவியர் விடுதி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும்.

பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சி அமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளை களைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்காகவும் அதன் அலுவலல் முறைக்குழு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலும் வகையில் மேற்படி அறக்கட்டளையின் மேலாண்மை அரசிடம் மேவியிருக்கச் செய்யும் கால அளவை மேலும் மூன்று ஆண்டுகட்கு நீட்டிக்க வகை செய்யும் எண்ணம். 1992-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் 1992-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இயற்றப்பட்டது.

**1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு**


கல்வியில் மேன்மை நிலையையும், சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களை நிருவகிப்பதில் திறப்பாட்டையும் எய்துவதற்கு விழைகின்ற ஒழுங்கு முறைப்படுத்தும் வகைமுறைகளைச் செய்வதற்கும் முறை யான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரி யர்களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்காக வும் வேண்டி, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின்னர் சட்டமாக வெளியிடப்படும்.

**தொழில்நுட்பக் கல்வித் துறை**

கடந்த ஓராண்டில் தொழில்நுட்பக் கல்வித் துறை கீழ்க்கண்ட சாதனைகளை எய்தியது:

பொறியியற் பட்டப்படிப்பிற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மானியம் பெறும் 3 பொறியியற் கல்லூரிகளிலும் கல்லூரி ஒன்றுக்குக் கூடுதல் மாணவர் சேர்க்கை 24 என்ற விகிதத்தில் ஆணை வழங்கப்பட்டது. தற்காலிகமாக மூடி வைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பொறியியற் கல்லூரிகள் மீண்டும் துவக்கப்பட்டன.





★ காலம் மாறக்கூடியது;
மாறிக்கொண்டுதான் இருக்கும்;
காலத்திற்கேற்பக் கருத்தில்
மாற்றம் வேண்டும்; மாறாத
சமுதாயம் மறைந்து விடும்.

—அறிஞர் அண்ணா

* அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஒப்புதலுடன் கூடிய முழு நேர எம்.இ. (என்விரோன் மெண்ட்டல் என்ஜினியரிங்) பாடம் கோவை அரசினர் பொறியியற் கல்லூரியில் துவங்கியது.

* இத்துறையின்கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் வளர்ந்துவரும் பொறியியற் துறைகளில் பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டன.

அ. கணிப்பான் பொறியியலில் 1991-92-ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு ஒரு கல்லூரியில் துவங்கப் பட்டது.

ஆ. மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் பட்டப்படிப்பு 1991-92-ஆம் ஆண்டு முதல் ஒரு கல்லூரியில் தொடங்கப்பட்டது.

* பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் உள்ள பர்கூரில் பொறியியற் கல்லூரி தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* மலைவாழ் மக்களின் நலனுக்காக நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நீலகிரி தோட்ட உரிமையாளர் களின் கூட்டமைப்பினால் நடத்துப்பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகம் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல் படத் துவங்கியது.

* ஆதிதிராவிட மாணவர்களுக்கு 'ஆட்டோமொபைல் என்ஜினியரிங்'-இல் பயிற்சி பெறத்தக்க வகையில் 10 ஆதி திராவிட மாணவர்கள் சென்னையிலுள்ள இந்துஸ்தான் தொழில் நுட்பப் பயிலகத்தில் பயிற்சி பெற சிறப்பு ஆணைகள் வழங்கப்பட்டன.

* மகளிர் தொழில் நுட்பப் பயிலகங்கள் மகளிர் மட்டுமே முதல்வராகப் பணியாற்றும் நிலைமினை உண் டாக்க ஏதுவாக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மாணவர்களின் நலனைக் கருதி தொழில் நுட்பப் பயிலகங்களில் (Polytechnic) சேர்வதற்கான அதிகப் பட்ச வயது வரம்பினைத் தாழ்த்தப்பட்ட மற்று ம் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு 22 ஆண்டிலிருந்து 25 ஆண் டாகவும், மற்றவர்களுக்கு 20 ஆண்டிலிருந்து 22 ஆண்டாகவும் உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

* சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளிலும் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் / கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு அரசு நிறுவனங்களால் இயக்கப்படும் பேருந்துகளில் 50 சதவிகித கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட பொறியியற் கல்லூரிகளில் பல ஆண்டு களாகத் தொடர்ந்து வந்த ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்கும் முயற்சியாகக் கூடுதலாக ஆசிரியப் பணி யாளர்கள் பணியமர்த்த ஆணைகள் வழங்கப்பட்டன

அ. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.
ஆ. அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி
இ. அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி
ஈ. தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் கூடு தலாக மாணவியருக்கென விடுதிகள் ரூ. 21 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ. 28 இலட்சம் செலவில் மின்னணுவியல் மற்றும் தொடர் பியல் துறைக்கெனத் தனியாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்டவும் கூடுதலாக வகுப்பறை வசதிகள் உண் டாக்கவும் ரூ.29 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ.14.50 இலட்சம் செலவில் கூடுதல் கணிப்பான் மைய வசதிகள் அமைக்கப்பட்டன.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்குக் கூடுதலாக சுமார் 10,000 சதுர அடி அளவிலான கட்டடங்கள் கட்டும் பணி நிறைவேறியது.

சென்னை மையத் தொழில் நுட்பப் பயிலகத்தில் முதுநிலை பட்டயப் படிப்பிற்கெனக் கணிப்பான் மையம் அமைக்கப்பட்டது.

* கனடா நாட்டின் பல்வேறு நாடுகளின் வளர்ச்சிக் கான அமைப்பின் நிதியுதவியுடன் தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்கள் கனடா நாட்டில் கற்பித் தலுக்கான முறைகளில் பயிற்சி பெறத் திட்டம் செயல் பட்டு வருகிறது.

**பல்கலைக்கழகக் கல்வி**

பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியம் கடைசியாக 1986-87-இல் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழக மானியக்குழு ஊதிய விகிதங்கள் நடை முறைப்படுத்தப்பட்டாலும், ஆசிரியரல்லாத ஊழியர் களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதாலும், சில அகவிலைப்படி தவணைகள் வழங்கப்பட்டதாலும், பல்கலைக்கழகங் களின் செலவினங்கள் கணிசமாக அதிகரித்து பல்கலைக் கழகங்களில் நிதி நெருக்கடியினை தவிர்ப்பதற்காக, இந்தப் புதிய அரசு, பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியத்தினை 1.4.1991 முதல் உயர்த்தி



நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது. இந்த உயர் நிர்ணயத்தினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.7 கோடி (ரூபாய் ஏழு கோடி) நிதிச்சுமை ஏற்படும்.

**சட்டங்கள்**

அரசு பதவியேற்றபின்பு, பல்கலைக்கழகங்களின் செயல்பாட்டினைச் செம்மைப்படுத்துவதற்காக, பல் கலைக்கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டன. புதியவர்கள் பல்கலைக்கழகங்களின் அமைபுகளில் உறுப்பினர்களாகப் பதவி வகிக்கவகை செய்யும் வழியில், தகுந்த மாற்றங்கள் செய்து திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழகங் களின் துணைவேந்தர்கள் நியமன விஷயத்தில் வேந்தர், இரண்டாவது பட்டியலொன்றைப் பெற்று, அதிலிருந்து ஒருவரைத் துணை வேந்தராக நியமனம் செய்யக்கூடிய வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழக உறுப்பினர்களின் பதவிக் காலத்தினை அவர்களது தேர்வு மையம், நிறுவனம் மற்றும் பணிக்காலத்தோடு இணைத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து ஒரு பொதுவான பல்கலைக் கழகச் சட்டம் கொண்டுவரும் பொருள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

1986-ஆம் ஆண்டைய தேசியக் கல்விக் கொள்கை யில், மாநிலங்களில் உயர்கல்வித் தரத்தினை உயர்த்தவும் இணைத்துச் செயல்படுத்தவும், ஒரு உயர்கல்வி மாநில மன்றம் நிறுவப்படுவது குறித்து பரிந்துரைகள் உள்ளன. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் நிறுவுவதற்கான சட்ட முன்வடிவு கடந்த வரவு-செலவு திட்டச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. வரும் ஆண்டில் இந்த மன்றம் நிறுவப்படும்.

**ஈரோடு பல்நோக்கு விளையாட்டரங்கம்**

பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் வ.உ.சி. பூங்காவில் பல்நோக்கு விளையாட்டரங்கம் ஒன்று ரூ.62 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்விளையாட் டரங்கம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காங்கேயத்தில் 22.1.92 அன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்விளையாட்டரங்கத்தில் வி.ஐ.பி. கூடம் (Gallery) ஒன்றும், 3000 பார்வையாளர்களுக்கான கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 100 விளையாட்டு வீரர்கள் தங்கி ஓய்வு பெறுவதற்கான ஓய்வுக் கூடமும், அலுவலக அறைகள், சிறகு பந்து (Shuttle-cock Indoor Stadium) உள் விளையாட்டு அரங்கமும், விருந்தினர்கள் தங்குவதற்கான அறைகள் விளையாட்டுப் பொருட்கள் வைக்கும் அறை, மாற்றுடை அறை, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமையப் பெற்றுள்ளது.

இவ்விளையாட்டரங்கில் 400 மீட்டர் டிராக் வசதி, கால்பந்து களம், வளையப் பந்து களம், கையுந்துப் பந்து களம், கூடைப்பந்துக் களம் மின்ஒளி அமைப்புடன் (Flood-lit) கபாடி, கோ-கோ களம் ஆகியவைகள் அமையப்பெற்றுள்ளன. மேலும் உள்விளையாட்டரங்கில் சிறகுப் பந்து, ஷட்டில் பேட்மிட்டன், டேபிள் டென்னிஸ், ஜிம்னாஷியம் மற்றும் பளு தூக்கும் விளையாட்டுக்கள் விளையாட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

***10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி, 1993.***

10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டியை 1993 ஜனவரியில் நடத்தும் சிறந்த வாய்ப்பு தமிழ்நாட்டுக்குத் தரப்பட்டுள் ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் இந்த பெருமைக்குரிய போட்டியை நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. தற்போது உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத் தரம் உள்ளதாக மேம் படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தைப் புதுப் பிப்பதற்கு ஆகும் உத்தேசச் செலவு சுமார் முப்பது கோடி ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஐந்து கோடி ரூபாய் நல்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளார். நேரு விளையாட்டு அரங்கத்தை 1993 நேரு கோப்பைப் போட்டியை நடத்தும் அளவிற்குப் புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் இந்திய அரசு உடனடியாக இரண்டு கோடி ரூபாய் நல்கியுள்ளது. மாநில அரசு ஐந்து கோடி ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்து. எஞ்சிய தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன் மக்கள் முதலானோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப் படும். இந்த விளையாட்டு அரங்கில் வணிகக்கடை அறை களும் அமைக்கப்படவிருப்பதால் சென்னை மாநகராட்சி இதற்காக வங்கிகளிடமிருந்து கடன் வசதியையும் பெற முடியும். நேரு விளையாட்டு அரங்கைப் புதுப்பிக்கவும் புதுமையாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.



# மது 'விடம்' நெருங்காதீர்

கவிஞர் பல்லவன்

மதுவிடம் நெருங்காதீர்-மயக்கும்
மது'விடம்' நெருங்காதீர்!
(மதுவிடம்)

மதியினை அழிக்கும்!
மரணத்தை அழைக்கும்!
இதயத்தை அரிக்கும்!
எலும்பையும் எரிக்கும்!

(மதுவிடம்)

குலப்புகழ் சிதைக்கும்!
குடும்பத்தைக் குலைக்கும்!
வளர்ச்சியைக் தடுக்கும்!
வாழ்க்கையைக் கெடுக்கும்!

(மதுவிடம்)

வருவாயைப் பறிக்கும்!
வறுமையை அளிக்கும்!
குருமொழி பழிக்கும்!
கொலைவெறி வளர்க்கும்!

(மதுவிடம்)


பெண்களை வதைக்கும்!
பிள்ளையை உதைக்கும்!
அன்னையை வெறுக்கும்!
அறிவுரை மறக்கும்!
(மதுவிடம்)

விழிகளை உருட்டும்!
வீதியில் புரட்டும்!
பழிசெய விரட்டும்!
பகையினைத் திரட்டும்!

(மதுவிடம்)

"சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில், நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' கிராமப் புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியிலுள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகிறது."

# மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் மருத்துவ நலப் பணிகள்




மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**எஸ். முத்துசாமி**


சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில் நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழகம் முழுவதும் விரிந்து பரந்து சீராகச் செயல்பட்டு வருகின்ற சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்கள், மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளை ஆற்றிவருகின்றன. இந்நிறுவனங்களில், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை மாநில அரசு நியமித்துள்ளது. நவீன முறையில் நோய்களைக் கண்டறிந்து தக்க மருத்துவம் அளிப்பதற்கு வசதியாக இந்நிறுவனங்களில் நவீன கருவிகள் வாங்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் காணப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கான சுகாதார முகாம் என்ற புரட்சிகரமான கருத்து அனைவருடைய கவனத்தையும ஈர்த்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் *18.1.1992-* ஆம் நாளன்று ''புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்'' என்ற நல்வாழ்வுத் திட்டத்தைத் தொடங்கினார்கள்.

இத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியில் உள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகின்றது. கிராமப்புறங்களில், 5,000 மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு துணைச் சுகாதார மையம் உள்ளது. பொதுவாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உதவியாகக் கிராமச் சுகாதாரச் செவிலியர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். இவர், பேறுகாலத்திற்கு முன்னர் பதிவு செய்தல், இரும்புச்சத்து மாத்திரைகளை (Folic acid tablets) வழங்குதல், இசிவுநோய்த் தடுப்பூசி போடுதல், மகப்பேறு இடத்தை நிர்ணயிப்பதில் கருவுற்ற தாய்மார்களுக்கு உதவுதல் போன்ற தாய் சேய் நலப்பணிகளைச் செய்து வருகிறார். மகப்பேறு காலத்தைத் தொடர்ந்து, குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல் போன்ற எல்லாப் பணிகளையும் அவர் செய்கிறார்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நோயாளிகள் மருத்துவர்களின் உதவியை நாடிவரும்போது, செவிலியர், மருத்துவரின் உதவிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். துணைச் சுகாதார நிலையங்கள்

அமைந்த பகுதியில் வாழும் மக்கள், அரசு மருத்து வரிடமிருந்து மருத்துவ அறிவுரை பெறுவதற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஏழை, எளிய மக்களின் இத் துன்பங்களைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அறிமுகப்படுத்திய இத்திட்டத்தின் கீழ் மருத்துவர் குழு ஒன்று ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்தையும் பார்வையிட்டு, சுகாதார முகாமை ஏற்படுத்தி நோயாளிகளைப் பரிசீலனை செய்கிறது. இம் முகாம்கள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படுகின்றன. ஒவ்வொரு வரையும் மருத்துவப் பரிசோதனை செய்வது மட்டுமன்றி, மக்கள் சுகாதார அறிவு பெறவும், இம்முகாம் வாய்ப்பு அளிக்கிறது. இரத்தம், சிறு நீர், சளி முதலியவற்றை உடனடியாகச் சோதனை செய்ய ஒரு ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநரும் இருக்கிறார். மக்களைக் கண் சம்பந்தமாக நோய்களிலிருந்து காப்பாற்றி கண் சிகிச்சைகளும் நடத்தப்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதியில், நோயின் தன்மையைக் கண்டறிய இம்முகாம்கள் நடத்தப்படுகின்றன. தோல் நோய்கள், மூச்சுக் கோளாறு நோய்கள் மட்டுமன்றி, இதயம் சம்பந்தப்பட்ட நோய்களும் அறியப்படுகின்றன. அரசின் இந்நன்முயற்சிக்கு நோயாளிகளிடத்தில் மருந்துகளைப் பகிர்ந்தளிப்பதற்காக மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உதவி செய்கின்றன.

சுகாதார ஆய்வு முகாம்களை மக்கள் விரும்பி வரவேற்கின்றனர். அவர்கள் பெருந்திரளாக வந்து, அரசு அளிக்கும் இந்த நல்வாழ்வுத் திட்டப் பணிகளை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.


நோய் கண்டுள்ளவர்கள் என்று இம்முகாம்களின்போது கண்டறியப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

### கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல்

இவ்வாண்டில், அரசு, ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் குறைந்தது 32 படுக்கைகளுக்கு வகை செய்வது என்ற குறிக்கோளை எய்தியுள்ளது. இந்தக் குறிக்கோளை எய்த 14 வட்ட மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளில் எண்ணிக்கை 222 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், படுக்கைகளின் எண்ணிக்கை 1000-லிருந்து 1020 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

### மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளித்தல்

போதுமான அளவுகளிலும், தரங்களிலும், வகைகளிலும் மருந்துகள் கிடைத்தாலன்றி மற்றப்படி, பல்வேறு அடிப்படை வசதிகளை நிறவினாலும், மருத்துவப் பணியாளர்களைப் பணியிலமர்த்தினாலும், மக்களுக்கு மருத்துவச் சேவை புரிதல் என்ற குறிக்கோளை எய்த இயலாது என்பதை



அரசு நன்கறியும்.

மருத்துகளை வாங்குவதற்காக மருந்துகள் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் இவ்வாண்டில் ஆய்வு செய்தார். மருந்துப் பொருள்களின் விலை அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் மருந்துப் பொருள்களுக்கான ஒதுக்கீட்டை உடனடியாக உயர்த்துவதற்கு அவர் ஆணை பிறப்பித்தார். 1991-92- ஆம் ஆண்டு தொடக்கத்தில் சுமார் ரூ.43 கோடியாக இருந்த ஒதுக்கீடு அதே ஆண்டில் மேலும் ரூ.6 கோடி உயர்த்தப்பட்டு, 1992- 93-ஆம் ஆண்டில் ரூ.53 கோடியாக மேலும் அதிகரிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் வட்ட/மாவட்ட/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதுமான அளவு மருந்துப் பொருள்கள் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்க அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறு ஆணை பிறப்பித்தார். அதன்படி, அரசு தலையிட்டு, 15 நாட்களுக்குள் ரூ.6 கோடி மதிப்புள்ள மருந்துகளைக் கொள்முதல் செய்து, பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்தது. தற்போது அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான அளவில் மருந்துகள் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

மருந்து கொள்முதல் கொள்கையில் நீண்ட காலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் பற்றி அரசும் உணர்ந்துள்ளது. மருத்துவமனைகளில் தரமான மருந்துகளைப் பயன்படுத்த அவற்றை வாங்குவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான அளவு மருந்துகள் கிடைப்பது குறித்து மாநிலத்தில் உள்ள அனை

வரும் பாராட்டியுள்ளனர்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி**

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உரிய நேரத்தில் முறையாக மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டிய அவசியம் பற்றி அரசு உணர்ந்துள்ளது. மாநிலத்தில் பெருமளவு காலியாக இருந்த பதவிகள் இவ்வாண்டில் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 500 மருத்துவர்கள் நேரடியாகக் கலந்தாலோசித்த பின்னர் பணியிலமர்த்தப்பட்டனர். மாவட்டத் தலைமையிடத்திலிருந்து மருத்துவர்கள் குழு அடிக்கடி ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டதன் மூலம் உரிய நேரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் திறந்து, மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பது சீராக்கப்பட்டுள்ளது.

**பணியாளர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை**

மருத்துவ நலப்பாதுகாப்பில் தொடர்ந்து பெரும் மேம்பாட்டினைக் கொண்டுவரும் பொருட்டு, அனைத்துப் பணியாளர்ச் சங்கங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மருத்துவப் பணியை மேம்படுத்துவதிலுள்ள நிருவாக இடையூறுகள், முட்டுக்கட்டைகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்காகப் பல்வேறு பணியாளர் சங்கங்களுடன் சுமார் 38 கூட்டங்கள் நடத்தப்பட்டன. நம்முடைய மருத்துவமனைகளில் உள்ள மருத்துவப் பணிகளில் அளவை அதிகரிக்க அனைத்துச் சங்கங்களும் முன் வந்துள்ளன. பணியாளர் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளும், குறைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படும் என்று அரசு, அச்சங்கங்களுக்கு உறுதியளித்துள்ளது. மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகளில் மருத்துவப் பணிகளை மேம்படுத்துவதைப் பற்றி அரசு, பணியாளர் சங்கங்களுடன் கலந்துபேசி, அதுகுறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கும் பொருட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை மருத்துவக் கல்லூரி/அரசு பொது மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் கூட்டங்கள் நடத்தியது.



**மாவட்ட மருத்துவமனைகள்**

மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதை விரைந்து மேம்படுத்தும் பொருட்டு, அரசு கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட மருத்துவ அலுவலர்கள் அனைவருடனும் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இக்கூட்டங்களில் பல்வேறு வட்ட மருத்துவமனைகளில் வெவ்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டன. துப்புரவு, குடிநீர், பொதுமக்கள் பாதுகாப்பு, கட்டடங்கள் முதலியன போன்ற உள்ளூர் மருத்துவமனைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டன. இவ்விவாதங்களில் கிடைத்த அனுபவங்கள் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**எய்ட்ஸ் சிகிச்சைப் பிரிவு**

தமிழ்நாடு மாநிலத்தில் எய்ட்ஸ் நோய் குறித்த அச்சம் நன்கு உணரப்பட்டு வருகின்றது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கு எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பிரிவு, அதிக அளவில் தொற்று நோய் உண்டாக்கும் கிருமிகள் பரவி 'எய்ட்ஸ்' நோய் உண்டாவதைத் தடுப்பது தொடர்பான பணிகளை வரையறுத்து ஒருங்கிணைத்துச் செயலாக்கும்.

**முதலமைச்சரின் பொது நிவாரண நிதி**

இதய நோய்கள், சிறுநீரகச் செயல் இழப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் மருத்துவ முறையில் அவற்றுக்குத் தீர்வுகாண பெருந்தொகை செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென மருத்துவமனைகளில் சிறந்த அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யப்பட்டிருப்பதுடன், இந்நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்கி, அரசு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது. மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்கும், இருதய வால்வுகளை (Valve Replacement) மாற்றியமைப்பதோடு, இருதய அறுவைச் சிகிச்சையை மேற்கொள்வதற்கும், அரசு ரூ.20,000 வரையில் நிவாரண உதவித் தொகையை

உயர்த்தி வழங்குகிறது. ஏனைய வகைகளைச் சேர்ந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.15,000 வரையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவி தேவைப்படுவோர் அரசினை அணுகும்போது அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்குரிய நடைமுறையை அரசு தளர்த்தி உள்ளது.



பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும், இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்

—காந்தியடிகள்

**பணி அமைப்பு நிலை நிருவாகம்**

தமிழ்நாடு மருத்துவப் பணியில் மருத்துவர்களாகப் பணியாற்றும் மருத்துவர்கள், தாங்கள் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்வு அடைவதற்குமுன்னர், பல ஆண்டுகள் சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பணி அமைப்பு முறையில் தேக்க நிலை ஏற்பட்டு மருத்துவர்களிடையே ஆர்வமின்மை ஏற்படுத்துகின்றது. இம்மருத்துவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மருத்துவப் பணி அமைப்பு நிலை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 427 மருத்துவர்களின் பதவித்தரத்தை பொருத்தமான வகையில் நிலையுயர்த்தி ரூ.3,000-4,500 என்ற சம்பள விகிதத்தில் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்த்தவும், முதுநிலை சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் 188 பதவிகளை ரூ.3,700 - 5,000 சம்பள வீதத்தில் பதவி உயர்த்தவும், அரசு ஆணை பிறப்பித்தது; இத்துடன் 404 முதுநிலை சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களின் பதவித் தரத்தை ரூ.2,500 - 4,200 என்ற சம்பள வீதத்தில் நிலையுயர்த்தி வருகின்றது. தமிழ்நாடு மருத்துவப் பணிகளில் பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்துவதோடு கூட, செவிலியர்கள், மருந்தாளுநர், பரிசோதனைக் கூட தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் உட்பட துணை மருத்துவப் பணியாளர்களின் பிரச்சினைகளையும் அரசு கவனித்து வருகின்றது.

**குறைகள் தீர்க்கும் திட்டம்**

மருத்துவமனைகளிலும், ஏனைய மருத்துவ நிறுவனங்களிலும் பணிபுரியும் பல்வேறு பணியாளர்கள், தொழிலாளர்கள், ஆகியோரின் குறைகளைத் தீர்க்க, அரசு உரிய முறையை ஏற்படுத்தியுள்ளது. பணியாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, வகைப்படுத்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவக் கல்லூரித் தலைவர்கள் ஆகியோர் அனைவரும் ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கள்கிழமை அன்று குறை தீர்க்கும் நாளை நடத்துகின்றனர்.

**மருத்துவமனைகள் குறித்த மாவட்டக் குழு**

சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்ய, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, நிலைமையை அறிந்து, தேவையான மேம்பாடுகளைச் செய்வது குறித்து உள்ளூர் நிருவாகத்திற்கு ஒரு வாய்ப்பளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**குடும்பநலம்**

தமிழ்நாடு 1991-92-ஆம் ஆண்டில் குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு அளிக்கப்படும் சேவையை மேற்கொண்டும். மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டு மக்கள், அவர்களின் நீண்ட காலப் பயனுக்காகக் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த அரசு, மேலும் 2 நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1. ஒரேயொரு அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உயிரோடிருக்கிற குடும்பத்தின் உறுப்பினர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும்போது அக்குடும்பத்தின் பெயரில் ரூ.2,000 வைப்பீடு செய்யப்படும்.

2. குடும்ப நலத்திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களின் பயனுக்காக, பரிசுச் சீட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும், குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களிடையே ஒவ்வொரு திங்களிலும் பரிசுச் சீட்டு குலுக்கப்படும், பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும். பரிசு பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 7.5 கிராம் எடையுள்ள ஒரு தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக ஒவ்வொன்றும் 3.75 கிராம் எடையுள்ள மூன்று தங்கப்பதக்கங்களும் வழங்கப்படும்.

**ஏனைய சிறப்புத் திட்டங்கள்**

அரசு இந்த ஆண்டு முதற்கொண்டு இந்திய மக்கள் தொகைத் திட்டம் V-ஐ, 8 புதிய நகரங்களுக்குத் நீட்டிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும். இதேபோன்று, 'யுனிசெப்' நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன், 1.4.92-ஆம் நாள் முதல் குழந்தை உயிர்க்காப்பு - தாய்மை நலத் திட்டம் செயல்படுத்தப்படும்.

போக்குவரத்துத் துறை

# திட்டங்களும் எட்டிய சாதனைகளும்


மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

## கே.ஏ. செங்கோட்டையன்

**“ கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயனடைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம், இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 1981. ”**

இந்தியப் பெருநாட்டில் எந்த ஒரு மாநிலத்திற்குள் சென்று பார்த்தாலும், கேட்டாலும் ஒரு ஏகோபித்த கருத்தை நாம் அறிய முடியும். அது இந்தியாவிலேயே தமிழகம் தான் போக்குவரத்துத் துறையிலே மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது தான். இது ஒன்றும் மிகைப்பாட்டின் வெளிப்பாடல்ல. உண்மையின் நிலைப்பாடு!

ஏறத்தாழ 4¾ கோடி தமிழக மக்கள் வாழும் இந்த மாநிலத்தில் செயல்படும் பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,000-க்கும் சிறிது அதிகமாகும். அதில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே சொந்தமானவை 13,977 ஆகும். தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் சுமார் 6,000-க்குச் சற்று அதிகமாகும். இந்த 14,000 பேருந்துகளும் தமிழக அரசின் 16 போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானவையாகும். ஏற்கெனவே 15 அரசு போக்குவரத்துக் கழகங்களாகப் பணியாற்றிய நிலைமையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிட



மாகக் கொண்டு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் அவர்களின் பெயரில் 16- வது போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 650 பேருந்துகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு செயல்படும் 16 போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சத்து எண்பதாயிரமாகும்.

இவர்களெல்லாம் இந்த அரசுப் பேருந்துகளை நேரப்படி இயக்குவதன் காரணமாகத்தான் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்றாடம் பகல் இரவு என்று இல்லாமல் ஆயிரக்கணக்கான பேருந்துகள் செயல்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பகல் நேரத்தில் மட்டும் தான் பஸ் பயணம். இரவு நேரப் பயணங்கள் என்பவை பெரும்பாலும் இரயில்வே மூலமாகத் தான் இருந்தது. இப்போது இருபத்தி நான்கு மணி நேரமும் பல இடங்களிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகள் இடையறாது இயக்கப்படுகின்றன.

இதன் காரணமாக ஏறத்தாழ நாளொன்றுக்குச் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் எந்தவிதச் சிரமமும் இன்றிப் பயணம் செய்ய முடிகிறது. சென்னை நகரில் மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் சுமார் 35 இலட்சம் மக்களைச் சுமந்து செல்கிறது.

இவ்வளவு மக்களைச் சுமந்து செல்லும் பேருந்துகளைச் சரியான முறையில் பராமரித்து வைத்திருந்தால்தான் சொகுசான பயணத்தையும் குறிப்பிட்ட காலப் பயணத்தையும் எந்த ஒரு போக்குவரத்துக் கழகமும் உறுதி செய்ய முடியும். அந்த வகையில் இரவு நேரப் பராமரிப்பு, இரவு நேரத்தில் சுத்தம் செய்தல், பயன்பாட்டின் காரணமாக ஏற்படுகிற பழுதுகளை நீக்கி பயணத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் வாகனங்களை வைத்திருப்பது போன்ற அனைத்துப்பணிகளையும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழக நிர்வாகமும் மேற்கொண்டுள்ளன.

கடந்த ஓராண்டுக் காலப் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் ஒரு நாள்கூட இந்தத் துறையில் வேலை நிறுத்தம் என்னும் நிலை ஏற்படவில்லை. கடைந்தெடுத்த கம்யூனிச வாதம் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் ஆட்சியில்கூட அடிக்கொரு வேலை நிறுத்தம் நடைபெறும் இந்த நாட்களில் இங்கே தமிழகத்தில் தன்னேரிலாத ஆட்சி நடத்தும் தாய்க்குலத்தின் ஒளி விளக்கு, டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே தேசிய காரணம் தவிர்த்து வேறு எந்தக் காரணத்தாலும் இங்கே வேலை நிறுத்தம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் அன்னையின் பரிவும் ஆற்றல் மிக்க தலைமையின் அறிவு சார்ந்த ஆட்சி முறையுமாகும்!

அவருடைய ஆட்சியின் சாதனையைப் பட்டியல் போட்டுக் காட்டுவதென்பது

இரவு நேரத்தில் கண்சிமிட்டும் விண் மீன்களின் எண்ணிக்கையைக் கணக்கிடு வதற்கு ஒப்பாகும். எங்கெங்கு நோக்கி னும் சக்தியடா என்பதைப் போல் இங்கே எங்கெங்கே நோக்கினும் சாதனையடா என்றுதான் சொல்லத் தோன்றும்.

எனவே இந்தச் சாதனைகளையெல் லாம் தொகுத்துக் காட்டிட முயன்றால் அதுவே ஒரு தொகை நூல்போலாகி விடும். இருப்பினும் முக்கியமான சில வற்றையேனும் இங்கே கோடிட்டுக் காட்டு வது புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியின் சாதனைகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

கடந்த ஆண்டில் மிகச் சிறந்த சாதனை களாகக் கீழ்க்காணும் சாதனைகளை மட்டும் இங்கே பட்டியல் போட விரும்பு கிறேன்.

கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துககளின் எண் ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயன டைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம். இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 1981. இதில் கழிவு செய்யப்பட்ட பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப் பட்டவை 1404. எஞ்சிய 577 பேருந் துகள் புதிய வழித்தடங்களிலும், ஏற் கெனவே உள்ள வழித்தடங்களிலும் இயங்கிவரும் பேருந்துகளோடு கூடு தலாகச் சேர்க்கப்பட்டு இயக்கப்பட்டவை யாகும்.

மேலும், சாலை வசதி கொண்டு 1000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எல்லாக் கிராமங்களுக்கும் இந்த ஆண்டின் முடிவுக்குள் போக்குவரத்து வசதி செய்ய தமிழகக் காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அன்னையின் ஆணைப்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வேறு சில நிறுவனங்கள் உதவியுடன் சோழன் போக்குவரத்துக் கழகம் டீசலுக்கு மாற்று எரிபொருளாக (C.N.G.)

பயன்படுத்தி வெள்ளோட்ட முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஒரு பேருந்து இயக்கிவைக்கப்பட்டதும் ஒரு சீரிய சாதனையாகும்.

சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயங்கும் துரிதப் பேருந்துகள் உள்ள நிலையம் மிகுந்த இட நெருக்கடியில் சிக்கியிருந்ததன் காரணமாக திருவிதாங்கூர் மன்னர் பூங்காவின் இடம் இணைக்கப்பட்டு பேருந்து நிலையம் விரிவாக்கப்பட்டது. சென்னையிலிருந்து புறப்படும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் பாரிமுனையிலிருந்து இயக்கப்படுவதோடு,




வெளியூர்களிலிருந்து சென்னை நோக்கி வரும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் எம்.யு.சி. மைதானத்தில் நிறுத்தப்படும் நிலையும் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தான் துரிதப் பேருந்துகளில் ஒரு இடத்திற்குச் செல்லவும் சென்று திரும்பவுமான முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

மதுரை மற்றும் திருச்சியிலிருந்து சென்னைக்குச் சென்று திரும்பவும் மேலும் சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்று திரும்பும் பயணிகளுக்கு முதன்முறையாக இவ்வசதி தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பிற இடங்களுக்கும் விரைவில் அமல்படுத்த உள்ளது. பயணம் செய்யும் நாளுக்கு 9 நாட்களுக்கு முன்னரே முன் பதிவு செய்யும் வசதி இங்கே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் சென்னை நகரைப் பொறுத்தவரை பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தியது பயணிகளிடையே நல்ல வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

பயணியர் விரும்பியவாறு பயணம் செய்ய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்களைப் பயணிகளின் நலனை முன்னிட்டு வழங்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயண அட்டையை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இது மாற்றத் தக்க ஒன்றாகும்.

இந்தப் பயண அட்டையை வாங்குவதன் மூலம் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் - கணக்கின்றி - பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் பயணம் செய்யலாம்.

இதற்குரிய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்கான கட்டணம் ரூ.200. வாரச் சலுகைப் பயணச் சீட்டுக் கட்டணம் ரூ.50 ஆகும். விரும்பியவாறு பயணம் செய்யும் தினப் பயணச் சீட்டுக்கான பயணக் கட்டனம் ரூ.10.

சில போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சந்தைப் பேருந்துகள் என்னும் புதியவகைப் பேருந்துகள் இயக்கப்பட்டு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு சென்றுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு, குடந்தை நகரில் நடைபெற்ற மகாமகப் பெருவிழா நம் அனைவரின கண்ணையும் கருத்தையும் கவர்ந்த விழாவாகும். 20 இலட்சம் மக்கள் கூடி மகாமகக் குளத்தில் நீராடித் தூய்மை பெற்றார்கள். இப்பெருவிழாவையொட்டி இரயில் மூலம் பயணம் செய்த சுமார் 20 இலட்சம் பக்தர்களைத் தவிர, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சுமார் 2,500 பேருந்துகள் மூலமாக 39,380 நடைகள் இயக்கப்பட்டு சுமார் 32.34 இலட்சம் பயணிகளின் பயணம் இனிதாக்கப்பட்டது. 16.2.1992 முதல் 20.2.1992 வரை இயக்கப்பட்ட இந்த 39,380 நடைகளில் எங்கேயும் ஒரு சிறு விபத்துக்கூட இல்லாமல் பேருந்துகளை இயக்கிய பெருமை நமது போக்குவரத்துக் கழக நிர்வாகங்களுக்கும் ஊழியர் பெருமக்களுக்குமே உரியதாகும்! இவையெல்லாம் அன்னையின் ஆணைப்படி துல்லியமாகக் கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.

இந்த ஆண்டிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மகளிருக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கையில் சில மாற்றம் செய்யப்பட்டு அவர்களின் பயணம் தொல்லையற்றதாகவும் பயமற்றதாகவும் இருக்கும் வகையில் உறுதி செய்யப்பட்டது.

அதேபோல, இரயில்வேக்களில் உள்ளதைப் போல் பேருந்துகள் புறப் படும்வரை 'வி.ஐ.பி.-க்கள் இருக்கைக்கு வி.ஐ.பி.-க்கள் வரவில்லை என்றால் ஆர்.ஏ.சி. என்னும் முறை மூலம் இட ஒதுக்கீடு செய்யப்படுவதும் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அநேகமாகத் துரிதப் பேருந்துகள் 3 ஆண்டுக்குள்ளும், சாதாரணப் பேருந்துகள் 6 ஆண்டுக் குள்ளும் புதய பேருந்துகள் மூலம் புதி தாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

நீண்ட தூரப் பயணம் மேற்கொள் ளும் பேருந்துகளில் சோதனை அடிப் படையில் முதல் கட்டமாக 10 'ஒயர் லெஸ்' வசதியைப் பொருத்துவதற்கான நடவடிக்கை இந்த ஆண்டு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

**சமூக நல நடவடிக்கைகள்**

இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக என்று ஒரு தனியான



**★ நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான், இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வரவேற்றபோது டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 'நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறை கூற முடியாது' என்று கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு!**

நிதியைத் திரட்ட மேற்கொண்ட நடவடிக் கைக்கு உதவியாக அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாயை நிதியாக வழங்கியுள் ளார்கள்.

8-ஆம் வகுப்பு வரை உள்ள மாண வர்களுக்கு இலவசப் பயணமும், 8-ஆம் வகுப்பு வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 50 சதவீத சலுகைக் கட்டண சீட்டுக்கள் கழகப் பேருந்துகளில் வழங்கப்பட்டது. ஆயினும் இவையனைத் தும் அரசு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் போன்ற கல்வி நிலையங்களில் படிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலை இந்த ஆண்டு அன்னையின் ஆணையால் மாற்றப்பட்டு, தனியார் கல்லூரிகள், சுயநிதி பெறும் கல்வி நிலையங்களைச் சார்ந்த மாணவ மாணவியர்க்கும் 50 சதவீதம் சலுகைக் கட்டணப் பயண வசதி நீட்டிக்கப்பட்டது இந்த ஆண்டின் மற்றொரு முக்கிய சாதனையாகும்.

சாலை விபத்துக்களைத் தவிர்ப்பதன் அவசியத்தை உணர்த்தவும் விபத்து இல்லாத பயணத்தை உறுதி செய்யவும் விபத்து இன்றிப் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர்களுக்கு ஏற்கெனவே வழங்கப் பட்ட ஊக்கத் தொகையை மேலும் ரூ.50 கூடுதலாக உயர்த்தி வழங்கப்பட ஆணை யிடப்பட்டது.

மேலும் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் விபத்தின்றி பணி செய்த ஓட்டுநர் களுக்கு முந்தைய ஆண்டில் வழங்கப் பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலாக ரூ.25 இந்த ஆண்டு முதல் அளிக்கப் பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த முகாம் நடத்தப்பட்டு பொது மக்கள் மாணவ மாணவியர், மற்றும் ஊழியர்களிடையே சாலை விபத்துக் களைக் குறைப்பதற்கான மன நிலை உரு வாக்கப்பட்டது.

இந்த வகையில் சாலைப்பாதுகாப்பை விளக்கும் வழிமுறைகளை வீடியோ படங்கள் மூலமாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் தயாரித்து தொலைக்காட்சி மூலமும், தனிக் காட்சிகள் மூலமும் பொதுமக்களைச் சென்றடையும் நிலை உருவாக்கப்பட்டது.

**தொழிலாளர் நல்வாழ்வுத் திட்டங்கள்**

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை யேற்ற கடந்த ஓராண்டுக் காலத்தில்

ஊழியர்களோடு ஒரு இணக்கமான நல்லுறவை வளர்த்துக் கொள்ள அவற்றின் பிரதிநிதிகளோடு வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் கருத்துக்களைக் கேட்டு இயன்ற வரை நிறைவேற்றி வந்துள்ளது.

இதன் காரணமாக, பணிக்காலத்தில் இறந்துபோகும் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குடும்பங்களும், அரசு ஊழியர்களின் குடும்பங்களைப் போன்றே 1.8.1991 முதல் ரூ.60.000 நிதியுதவி பெறும் நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணையால் உருவாக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் இந்தத் தொகை ரூ.20,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்படும் என்று வெறும் வாக்குறுதி மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த நிலையை மாற்றி 1.9.89 முதல் 31.7.91 வரை இறந்த ஊழியர் குடும்பங்களுக்கும் உண்மையாகவே அவர்கள் அந்தப் பயணப் பயனை அடையும் நிலையும் இந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வீட்டுவசதித் திட்டங்களுக்கான சுழல்நிதி உருவாக்கப்பட்டது.

பெருகி வரும் தொழில் நுட்பப்பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்காக என்றே ஏற்கெனவே பெருந்துறையிலும் ஈரோட்டிலும் மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பொறியியல் கல்லூரியில் மொத்தம் 180 மாணவர்களே ஆண்டுதோறும் அனுமதிக்கப்பட்டனர். அதில் 50 சதவீதம் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 240 ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டதன் காரணமாக, இனிமேலும் 30 போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்கு அதிகமாக இடம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதுமட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களின் நிதியையும் ஊழியர்களின் பங்குத் தொகையையும் பயன்படுத்தி இந்த ஆண்டு முதல் திருநெல்வேலி, பர்கூர், குரோம்பேட்டை, ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 3 பாலிடெக்னிக்குகள் அமைப்பதற்கான ஆணையையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பட்டயதாரர்களாக, மாறும் நிலை இந்த ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அடுத்து தாமாக முன்வந்து ஓய்வு பெற முன்வருவோருக்கு எஞ்சிய பணிக் காலத்திற்கு ஆண்டுக்கு ரூ.7,500 மொத்த உதவிப் பணம் கொடுக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி இனி அவர்கள் ஆண்டுக்கு ரூ.8,500 ஆகப் பெறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி விமான நிலையப் பணிகள் முடிவடைந்து இவ்விமான நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு 30.4.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் திறமையுடன் செயல்பட அவ்வப்போது வழங்கப்பட்ட ஆலோசனை காரணமாக பல கோடி ரூபாய் செலவு மிச்சப்படுத்தப்பட்டதோடு அக்கழகம் ஈட்டிய லாபத் தொகையும் அதிகரித்தது.

மோட்டார் வாகன வரி மற்றும் போக்குவரத்துத் துறையில் ஈட்டிய சிலபல சாதனைகளையும் கூட இங்கே குறிப்பிடுவதே சாலப்பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 50 சிசி வரையுள்ள அனைத்து 2 சக்கர வாகனங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது.

சென்னை நகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உரிமங்கள் வழங்குதல், தகுதிச் சான்றிதழ் வழங்குதல் ஓட்டுநர், நடத்துநர் உரிமம் அளித்தல் ஆகிய பணிகளை விரைந்து முடிப்பதற்காக ரூ.13.50 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. 10,000 பதிவுகளுக்கு மேற்படும் ஒவ்வொரு வட்டாரப் போக்குவரத்து நிலையத்திலும் ஒரு புதிய யூனிட் அலுவலகம் திறப்பதற்கான ஆணையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டிலே பிறப்பித்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் பெருகிவரும் தேவையைக் கருத்தில் கொண்டு நான்கு போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டன.

திருப்பூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த பிரிவுப் போக்குவரத்து அலுவலகங்கள் தனியதிகாரம் பெற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

நீலகிரி, தர்மபுரி, புதுக்கோட்டை, நாமக்கல் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குக் கடந்த ஆண்டிலே ஜீப்புகள் வழங்கப்பட்டன.

வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்குப் போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் 145-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டு பணியில் வேகமும் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியும் உருவாக்கப்பட்டன.

மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஒரு பகுதியாக மோட்டார் வாகனங்கள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுக்கட்டுப்பாட்டுச் சோதனைக்கும் உட்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**—இவ்வாறாகப் போக்குவரத்துத் துறைப் பணிகள் தமிழகத்தில் மேம்பட்டு விளங்குகின்றன.** ●



# உள்ளாட்சித் துறையின் உயரிய பணிகள்...

**திரு. அழகு திருநாவுக்கரசு**
**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்**

**’ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் தமிழகத்தில் உள்ள கிராமப் புறங்களை மேம்படுத்துவதே என்பதை இந்த ஓராண்டுக் காலச் சாதனைகளே உறுதிப்படுத்தும்’ என்பது இங்கே விளக்கப்படுகிறது.**

“நாட்டின் பொருளாதாரம் கிராமங்களில்தான் வாழ்கின்றது.

கிராமங்கள் வளர்ச்சி பெற்றால் தான் நாடு வளர்ச்சியடைய இயலும்”

- என்ற அண்ணல் காந்தியடிகளின் அரிய கருத்தை நடைமுறைப் படுத்தும் வகையில் அறிஞர் அண்ணா அவர்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கிராமங்களின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தியது போன்றே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் பெரிதும் ஆர்வம் கொண்டு அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார். ஆட்சி அமைக்க வாக்களித்த கிராமப்புற மக்களின் நலனும், நகர்ப்புற மக்களின் வளனும் காக்கப்படுவதற்கு எல்லா வகையிலும் கடந்த ஓராண்டில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

பிறப்பிலிருந்து இறப்புவரை மக்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து இருப்பது நகராட்சி நிர்வாகமும், ஊராட்சி நிர்வாகமும் ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது சட்டமன்றக் கூட்ட உரையில் 4.9.91 அன்று சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத் தப்படும் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி முதலீட்டில் கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று தெளிவுபடுத்தினார்கள். 20.11.91-ஆம் நாளிட்ட 385-ஆம் எண் அரசு ஆணை மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சாலை மேம்பாடு, தொடக்கப் பள்ளிக் கட்டடம் கட்டுதல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவுக் கூடங்கள் கட்டுதல், கிராமக் குடிநீர்த் திட்டம், தெருவிளக்கு அமைத்தல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்தல், தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் முதலிய கிராமத்தின் இன்றியமையாத தேவைகள் அனைத்தும் 1992 செப்டம்பர் முடிய ஓராண்டில் நிறைவேற்றப்படும்.



1991-92-ஆம் ஆண்டுக்கு ரூ.194.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1992-93- ஆம் ஆண்டிற்கு இதே போன்ற தொகை ஒதுக்கப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் வறுமைக் கோட்டிற்கு கீழ் கிராமப்புறத்தில் வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களும் கூடிய திட்டம் மூலம் வறுமையை ஒழிப்பதாகும்.

கிராமங்களில் பயன் உள்ள கூடுதல் வேலைவாய்ப்பினை வேலையற்ற விவசாயக் கூலிகளுக்கும் குறைந்த வேலை உள்ள நபர்களுக்கும் ஆண், பெண் இருபாலர்க்கும் சமுதாயப் பணிகள் செய்ய வாய்ப்பு அளித்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களில் நிலையான சொத்துக்களை உருவாக்கி அதன் மூலம் கிராமத்தில் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி கிராமப்புற பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் காண்பதும், கிராம ஏழைகளின் வருமானங்களைப் பெருக்குவதும் ஊரக வளர்ச்சித்துறையின் தலையாய பணியாகும்.

தனிநபர், சமுதாய சாண எரிவாயுக்கலன்கள் அமைத்தும் புகை இல்லாத அடுப்புகள் நிறுவியும், மாற்று எரிசக்தி மேம்பாடு செய்து தேசீயக் கண்ணோட்டத்தில் செயல்படுவதும் ஊரக வளர்ச்சித் துறையின் சீரிய செயல்பாடாகும்.

தேசீயக் கண்ணோட்டத்தில் காடுகள் பெருக்கும் திட்டத்தில் ஓர் அங்கமாகப் பல எக்டேரில் சமுதாயக் காடுகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்திச் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தலை மிக முக்கியப் பணியாக ஏற்றுச் செயல்படுத்தி வருகிறது ஊரக வளர்ச்சித் துறை.

ஊரக வளர்ச்சித்துறையின் மிக முக்கியக் குறிக்கோள், கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகரங்களை

நாடி வேலை தேடிவரும் நிலையை மாற்றி, கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது ஆகும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கிராம மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் சீரிய திட்டம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் மொத்தம் ரூ.386 கோடி முதலீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ரூ.386 கோடியை இரண்டு நிதியாண்டுகளில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.194.64 கோடி ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு 1992-93-ஆம் ஆண்டிற்கு எஞ்சிய தொகை ஒதுக்கப்படவிருக்கிறது.

21.8.1991-இல் தர்மபுரி மாவட்டம் பர்கூர் பேரூராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரட்சிமிகு குடியிருப்புத் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்துப் புதிய வரலாறு படைத்திட்டார்கள். இந்த மாதிரிக் கிராமியக் குடியிருப்புத் திட்டத்தில் மனைகள், சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப் பள்ளி, அங்காடி, பூங்கா, நூலகம், தாய்சேய் நல நிலையம், வழபாட்டு இடங்கள், சாலைகள், மேல்நிலை நீர்த் தொட்டி, தெருவிளக்குகள் ஆகிய அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். மொத்த மதிப்பீடு ரூ.3 கோடியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்குச் சாதி, மத இன வேறுபாடு இன்றி வீட்டு வசதி அளிப்பது இப்புதிய அரசின் நோக்கமாகும். ஒரே குடியிருப்பு வளாகத்திற்குள் அனைத்து வசதிகளும் உள்ளடங்கிய மாதிரிக் குடியிருப்பு வளாகமாக அமையும்.

'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்று அழைக்கப்படும் இந்த ஏற்றமிகு கிராமக் குடியிருப்புத் திட்டம், வரும் ஆண்டுகளில் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் அமைக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சமதர்மச் சமுதாயம் மலர்ந்திடப் புரட்சிமிகு திட்டமாக அமைந்த இது மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.



**பெண்மை, தாய்மை, இறைமை என்ற மூன்று நிலைகளிலும் பெண்களை மதித்துப் போற்றினால்தான் இந்த உலகம் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்க முடியும்!**

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டமும் கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களில் வருமானத்தைப் பெருக்கிட வழிகாணும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டமும், கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமும் தேசிய சாண எரிவாயுத் திட்டமும் தேசிய மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமும் தொடர்ந்து முனைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டுவரும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தப்படவிருக்கிறது. அதற்காக அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 647 பேரூராட்சிகளில் வாழும் ஒரு கோடி மக்கள் பயன்பெறுவர். 354 பேரூராட்சிகளில் இதுவரை குடிநீர்த் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 141 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஊராட்சிகளுக்குத் தரம் மிக்க குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்டர்கள் ஆகியவற்றை நிர்ணயித்த விலையில் வாங்கிட வேண்டுமென்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஆழ்ந்து ஆய்ந்த பின்னர், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரம் வாய்ந்த உற்பத்தியாளர்களான எச்.எம்.டி. நிறுவத்தினர், மைசூர் லாம்ப்ஸ் ஆகிய நிறுவனத்திடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலையில் குழல் விளக்குகள், காப்பர் சோக்குகள், ஸ்டாட்டர்கள் வாங்க அரசு ஆணையிட்டது. இதனால் தெருவிளக்குகள் அடிக்கடி கெட்டுப் போகாமல் கிராமங்களின் இருளைப் போக்கி ஒளியேற்றியுள்ளது இந்த அரசு. தெரு விளக்குகளைக் கூடப் பராமரிக்க இயலாத நிலையிலுள்ள ஊராட்சிகளுக்குத் தெரு விளக்குச் சாதனங்கள் வாங்கவும் மின் கட்டணம் செலுத்த வகை செய்யும் முறையிலும் ரூ. 3 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதன் மூலம் எல்லாத் தெரு விளக்குகளும் ஒளிர்வதற்கு அரசு உறுதி செய்துள்ளது.

1988-89-ஆம் ஆண்டு முதல் செயல்படும் தீவிர சுகாதாரத் திட்டத்தை இந்த அரசு மேலும் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. பழுதுபடும் கைப்பம்புகளால் கிராம மக்கள் குடிநீருக்குத் துயரடையாமல் இருக்க, 1991-92-ஆம் ஆண்டுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க ஒதுக்கியிருந்த மானியத் தொகை ரூ.300 இலட்சத்தை ரூ.395 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. பின்னர் 1992, பிப்ரவரியில் கைப்பம்பு, விசைப்பம்பு மானியத்தை உயர்த்தியும் அதனைப் பிரித்து வழங்க வரன்முறைகளை வகுத்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாகம்

நகராட்சிகள், மாநகராட்சிகள் நிர்வாகம் நகர மக்களுடைய அடிப்படைத் தேவைகளான பொதுச் சுகாதாரம், கழிவுப் பொருட்களை அகற்றுதல், சாலை வசதிகள், கல்வி, நோய்த் தடுப்பு, குடிநீர் வசதிகள் ஆகியவற்றை அன்றாடம் அளித்து வருகிறது. இந்த அமைப்புகளின் நிதிநிலை பல ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறு இருந்ததோ அதே நிலைமையில் இன்றும் இருந்து வருகிறது. நகராட்சி, மாநகராட்சி அமைப்புகளின் நிதி நிலைக்கும் செய்ய வேண்டிய பணிகளுக்கும்

உள்ள பற்றாக்குறை மிகப் பெரிய அளவில் உள்ளது. இதனால்தான் 1.4.1992 முதல் தொழில் வரியைப் புதிய விகிதங்களில் வசூலிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைத் திறம்பட நிர்வகிப்ப தற்கான வழிவகைகளை ஆராயவும் நகராட்சி நிர்வாகச் சீர்திருத்தத் திற்கும் 'வல்லுநர் குழு' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நகராட்சிப் பணிகளைக் கண் காணிக்க மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. மக்கள் குறைகளை உடனுக்குடன் களைவதற்கு வசதியாக 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' நடத்தப்படு கின்றது. வாரத்திற்கு ஒரு நாள் உயர் அதிகாரிகளே நேரில் மக்கள் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க ஏதுவாகும்.

ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் குறைந்த செலவில் கழிப்பிடங்கள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. 1992-93-ஆம் ஆண்டில் 40 நகராட்சிகளில் இத் திட்டம் விரிவு படுத்தப்படும். 1994-ஆம் ஆண்டிற் குள் நகராட்சிகளிலுள்ள உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் அகற்றப் படும்.

நகராட்சிகளின் முக்கியப் பகுதி களில் சிறப்புத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உசிலம்பட்டி, கூத்தாநல்லூர், குளித்தலை, ஆவடி, வந்தவாசி ஆகிய ஐந்து பேரூராட்சிகளும் நகராட்சிகளாக மாற்றி அமைக்கப் படும்.

திருச்சிராப்பள்ளி, சேலம் நகராட்சிகளும் மாநகராட்சிகளா கவும், திருநெல்வேலி, பாளையங் கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகள் இணைக்கப் பட்டு திருநெல்வேலி மாநகராட்சி யாகவும் உயர்த்தப்படவுள்ளன.

**மாநகராட்சிகள்**

சென்னை மாநகரை அழகு படுத்துவதற்கு 'எழில்மிகு சென்னை 2000' என்ற திட்டம் 1,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டு களில் செயல்படுத்தப்படுகிறது. சாலைகள், பாலங்கள், அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், கால்நடைகளை அகற்றுதல் முதலிய பணிகள் ரூ.240 கோடி செலவில் முதல் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிப் பணி களை மேம்படுத்த இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 5 அதிகாரிகளைத் துணை ஆணையாளர்களாக அரசு நியமித் துள்ளது. சொத்து வரி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ரூ.10 கோடி கூடுதலாகப் பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நேரு விளையாட்டு அரங்கினை இடித்துவிட்டு அனைத்து நாடுகள் அளவிலான பல்வேறு விளையாட்டுகளை நடத்திட அனைத்து நாட்டு விளையாட்டு அரங்கிற்கு நிக ரான விளையாட்டு அரங்கினை ரூ.30 கோடி செலவில் அரசு அமைத்திடவுள்ளது. 1993, ஜனவரி மாதத்திற்குள் இத் திட்டம் முடி வுறும்.

சென்னை நகரில் நடைபாதை வாசிகள் இரவில் தங்குவதற்கு ரூ.40 இலட்சம் செலவில் விடுதிகள் கட்டப்படுகின்றன. கோயம்புத்தூரி லும் ரூ.20.50 இலட்சம் செலவில்

**புதுடில்லியில் உள்ள புகழ்பெற்ற சிரோமணி நிறுவனம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மகிளா சிரோமணி (சிறந்த பெண்மணி) விருது வழங்கிச் சிறப்பித்தது. 10.6.92 அன்று டில்லியில் அளிக்கப்பட்ட அவ்விருதினை, அங்குள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் எம். தம்பிதுரை அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் பெற்று வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் வழங்கினார்.**



இதற்கெனக் கட்டடம் கட்டப்பட வுள்ளது.

மதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே கல் பாலத்திற்கு மேலாக ரூ.700 இலட்சம் செலவில் உலக வங்கியின் உதவியுடன் ஒரு மேம் பாலம் கட்டப்படுகிறது. மதுரையில் தற்போது மத்தியப் பேருந்து நிலையம் உள்ள இடத்தில் பல அடுக்கு மாடி களைக் கொண்ட நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் (சென்னைக் குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட) சுமார் 3 இலட்சம் அலுவலர்களும் பணியாளர்களும் உள்ளனர். அவர்கள் தகுதிக்கேற்ப ஒரு சிறு தொகையை நன்கொடையாகப் பெற்று, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும் பொறியியல் கல்லூரி யும் துவக்கப்படவுள்ளன. இக் கல்லூரி களில் குழந்தைகளுக்கு ஒரு குறிப் பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

தற்போது உள்ளாட்சி அமைப்பு களில் தனித் தனியாக இயங்கி வரும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஒரே அமைப்பின்கீழ் செயல்படுவதற்கு ''உள்ளாட்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனங்களின் இயக்ககம்'' என்ற அமைப்பு உரு வாக்கப்படுகிறது. இந்த இயக்ககம் மேற்சொன்ன மருத்துவக் கல்லூரி யையும் பொறியியல் கல்லூரியையும் நிர்வகிக்கும். ஒவ்வொரு துப்புரவுப் பணியாளரின் குழந்தையும், எதிர் காலத்தில் ஒரு மருத்துவராக, பொறியாளராக வரவிருக்கும் அரிய வாய்ப்பு உருவாகும் சிறப்புமிகு வாய்ப்பு இதனால் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்றதும் பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க ஒசூர், திருத்துறைப்பூண்டி பேரூராட் சிகள் நகராட்சிகளாக உயர்த்தப் பட்டன.

நகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்தும் பொருட்டு, தொழில் வரியை மாற்றியமைக்க ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் மேற்கொள்ளும் பணி அல்லது தொழில் அடிப்படையில் தொழில் வரி வசூலிக்கப்படும். இதனால் நகராட்சிகளின் வரு மானம் உயரும்.

**தமிழ்நாடு நீர் வழங்கல் கழிவுநீர் அகற்றும் வாரியம்**

சென்னை மாநகர் தவிர தமிழகத்தில் பிற பகுதிகள் யாவற் றிற்கும் நீர் வழங்குவதும் கழிவு நீர்க்கால் வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் இந்த வாரியத்தின் பணி யாகும். இதுவரை குடிநீர் வழங்கப் படாத 2,483 குடியிருப்புகளுக்கு 1992, மார்ச் மாதத்திற்குள் எவ் வாறாயினும் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1,418 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 31.12.1991-க் குள் இத்திட்டத்தை நிறைவேற்றியது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.64.50 கோடி செலவில் 3,653 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

1992-93-இல் 33 பேரூராட் சிப் பகுதிகளில் ரூ.10 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் நிறை வேற்றப்படவிருக்கிறது.

1992-93-இல் 13 வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அரசு ரூ.4.49 கோடி ஒதுக்கீடு செய் துள்ளது.

9,000 கிராமப்புறங்களுக்கு ரூ.530 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கிக் கடனுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத் தினால் 40 இலட்சம் பேர் பயன் பெறுவர்.

1991-92-இல் 19 நகராட்சி களிலும் 41 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற் கொள்ளப்பட்டு 12 திட்டங்கள் முடிவுற்றன. இதற்கு ரூ.20.74 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-இல் ரூ.31.80 கோடி செலவில் 17 குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன.

உதகையில் கழிவுநீர்க்கால் திட் டத்தை ரூ.7.61 கோடி செலவில் நிறைவேற்றுவதற்கும் கோவையில் கழிவுநீர்க்கால் திட்டத்தை விரைந்து மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. திருச்சிக்குக் கழிவுநீர் வடிகால் திட்டம் ரூ.6.760 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் ஆணைப்படி ஒகேனக்கல் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.250 கோடி செலவில் மேற்கொள்ளப் படுகிறது. இதனால் கிருஷ்ணகிரி, தர்மபுரி நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும் பர்கூர் தொழில் பேட்டையும் தர்மபுரியிலுள்ள 3,300 குடியிருப்புகளும் பயன் பெறும். மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி காங்கேயம் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.20.43 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது.

நாகப்பட்டினத்திற்கு ரூ.9 கோடி செலவிலும், தேன்கனிக்கோட் டைக்கு ரூபாய் ஒரு கோடி செல

**ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவின் பழத்தோட்டம் என்று வர்ணிக்கலாம்.**

**நமது மொத்த ஆப்பிள் விளைச்சலில் 75 சதவிகிதம் (எட்டு இலட்சம் டன்) இம்மாநிலத்தில் விளைகிறது! 1987-88-இல் அங்கு விளைந்த பழங்களின் எடை 26.64 மில்லியன் டன்கள். நாட்டில் பழ மரங்கள் பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் ஆறு சதவிகிதமும், மொத்த பழ விளைச்சலில் மூன்று சதவிகிதமும் இங்கேதான்.**

**கி.மு. 1,000 ஆண்டிலிருந்தே மித வெப்ப மண்டலத்தில் விளையும் பழ வகைகளை, இந்த மாநிலத்தில் பயிரிடப்பட்டன என்பது 'சுவையான' செய்தியாகும்!**

விலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னைக் குடிநீர் வாரியம்**

இவ்வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுத் திட்டங்களுக்குப் போதிய அளவில் அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கப் பெற்றது. குடிநீர்ப் பிரிவின் கீழ் 5 திட்டங்களுக்காக ரூ.37.88 கோடிக்கும், கழிவு நீர் அகற்று வசதியின் கீழ் 10 திட்டங்களுக்கு ரூ.34.35 கோடிக்குமாக மொத்தம் ரூ.72.23 கோடி மதிப்பீட்டிற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் அரசு ரூ.31 கோடி அளவுக்கு நிதியுதவியும் அளித்துள்ளது. இதனைக் கொண்டு பெருமளவில் திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினைச் செய்ய முடிந்தது.

இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆந்திர மாநில மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் ஏற்படும் அனைத்து இடர்ப்பாடுகளையும் நீக்க வழிவகை செய்ததாகும். இதே சமயத்தில் உலக வங்கிக் குழுவும் இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு நடத்தியது. அடுத்த ஆண்டிற்குள் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி வரத்தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசு உதவியுடன் இந்த வாரியம் பெருமளவில் நகரின் கழிவுநீர் அமைப்பினைச் சீரமைக்கும் பணியினை எடுத்துக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயலில் உள்ள கழிவுநீர்க் குழாய்களைச் சுத்திகரிப்புச் செய்வது, கழிவு நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படச் செய்வது ஆகியவை அடங்கும். இந்தப் பணிகளுக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.3.58 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.



மற்றும் ஒரு முக்கியப் பணியாகச் சுமார் 700 தனியார் தெருக்களிலும் சுமார் 60 பொதுத் தெருக்களிலும் கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டு, கழிவுநீரகற்று வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.6 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

நகரத்தின் குடிநீர் விநியோகம் நாளொன்றுக்கு 55 மில்லியன் காலன் அளவாகச் சீரான அளவில் விநியோகம் செய்யப்பட்டது. நகரின் பொதுமக்களுக்கு ஒரே சீராகக் குடிநீர் கிடைக்கப் பெறுவதற்காகப் பழமையான, தூர்ந்த குடிநீர் விநியோகக் குழாய்கள் புதிய குழாய்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் இந்தப் பணிகளுக்கு மட்டும் ரூ.4.24 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுவரை குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு 180 தெருக்களில் ரூ.2.80 கோடி செலவில் புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**சிறப்புப் பணிகள்**

நாட்டிலேயே முதன்முறையாகக் கழிவுநீரை மீள்பயன்பாடு செய்யும் திட்டத்தை இவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக உயிரியல் முறையில் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட கழிவுநீர் நாளொன்றுக்கு 2.5 மில்லியன் காலன் அளவில் சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் ஓரளவு சுத்தரிகரிக்கப்பட்ட கழிவுநீரை மேலும் இரசாயன முறையில் சுத்திகரிப்புச் செய்து தனித் தொழிற்சாலையில் குளிர வைக்கும் நீர்த் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

இதே வகையில், சென்னை உரத் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 3.75 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விரைவில் வழங்கப்படும். மேலும் மணலியில் உத்தேசிக்கப்பட்ட 'டாடா கோதாரி' இரும்புத் தொழிற்சாலை மற்றும் 'நாப்கோ' நிறுவனம் ஆகியவற்றுக்கு 10 முதல் 15 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை வழங்க சாத்தியக் கூறுகள் உள்ளன. இது தவிர, தற்போதுள்ள 'ஸ்பிக்' நிறுவனம், பெட்ரோ கெமிக்கல் பிராடக்ட்ஸ் எண்ணூர் அனல்மின் நிலையம் ஆகியவற்றின் கூடுதலான நீர்த்தேவையையும் சமாளிக்க முடியும்.

**கழிவுநீர் மறு உபயோகத்தின் மூலம் வனவளர்ப்பு**

இந்த ஓர் ஆண்டில் இவ்வாரியம் அதன் கழிவுநீர்ப் பண்ணை நிலத்தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினைக் கொண்டு மரம் வளர்க்க முடியும் என்பதை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டியது. நேசப்பாக்கத்தில் 1.5 ஏக்கர் நிலபரப்பில் சோதனை அடிப்படையில் சுபாபுல், போலியேஜ் வகை, சுபாபுல் மர வகை, மேட்ச்வுட், தேக்குமரம், ஆகியவகையான மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இதில் கண்டுள்ள வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆண்டில் நேசப்பாக்கம், கோயம்பேடு இடங்களில் 120 ஏக்கர் பண்ணை நிலம் உழப்பட்டு மண் பதப்படுத்தப்பட்டு, வன வளர்ப்பு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

சமதர்மச் சமுதாயத்தை அமைத்துச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நலனும் வளனும் சேர்த்திட முனைந்து செயல்பட்டுவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, மக்கள் நலப்பணிகளைத் தொடர்ந்து செயலாற்றும் பணி தொடரும். ●

“ அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ”



# வேளாண்மைத் துறையின் மேலான சாதனைகள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

**கு.ப. கிருஷ்ணன்**

**மா**ண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற இந்த ஓர் ஆண்டில் இத்துறையானது, வேளாண் உற்பத்தி, வேளாண் பெருமக்களின் நலன் ஆகியவற்றை தனது இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வறுமை அகலவும், வேளாண் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக ஏழை, எளிய மக்களின் வாழ்வு வளம்பெறவும், சீரிய இலட்சியப்பாதையை முன் நிறுத்தி இவ்வரசு முழு மூச்சுடன் பல்வேறு வேளாண் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி உள்ளது.

வேளாண் பணிகள் தொடங்கப்படும் காலத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கிய அறிவுரைகள், ஆக்கப்பூர்வமான மானிய உதவிகள் ஆகியவற்றை, உழவர் பெருமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. இது பெருமை அளிக்கக் கூடியது ஆகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.70 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. மேலும் எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகப்படுத்த ரூபாய் 23.82 இலட்சம் செலவில் நீர் சேமிப்புக்கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தி 245 இலட்சம் மெட்ரிக் டன்களை அடைந்து உள்ளது.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்துள்ளபடி 8 மாவட்டங்களில் ரூபாய் 75 இலட்சம் செலவில் 5,000 எக்டேர்களில் தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது

தமிழகத்தில் ''செம்பனை'' என்னும் பாமாயில் மரங்கள் வளர்க்க ரூபாய் 28.80 கோடி செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 1.07 கோடிக்கு விதைகள் வாங்கி நாற்றாங்கால் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

விவசாயிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், ''பயிர் விளைச்சல் போட்டி'' திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இது நல்ல வெற்றியும் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் நெற்பயிருக்கு 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு ரூ.50,000 என்றும், இரண்டாவது பரிசு ரூபாய் 25,000 என்றும், மாவட்ட அளவில் முதல் பரிசு ரூபாய் 5,000 என்றும் இரண்டாவது பரிசு ரூபாய் 3,000 என்றும் வழங்கப்பட்டது. இப்புதிய திட்டத்தால், எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் ஆக இருந்த சராசரி நெல் உற்பத்தி அளவு 6 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு 23 இலட்சம் எக்டேர்.

''தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ் வேளாண்மை வளர்ச்சிக்கு இவ்வாண்டு ரூபாய் 10 கோடி செலவிடப்பட்டு உள்ளது.



1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீட்டில், விதை, உரம், பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு வேளாண் சலுகைகள் எந்த மாநிலத்திலும், எந்தக் காலத்திலும் வழங்கப்படவில்லை என்பது நினைவு கூர்ந்து பெருமைப்படத்தக்கது.

இராசாயன உரங்களின் விலையேற்றத்தை ஈடு செய்ய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விலையேற்றத்திற்கு முன்பு இருந்த விலையிலேயே இரசாயன உரங்கள் வழங்குவதற்கு, மத்திய அரசிடமிருந்து ரூபாய் 53,973 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மானிய விலையில் இரசாயன உரங்கள் வழங்கப்பட்டது.

நுண்உயிர் உரங்களின் அதிகத் தேவையைக் கருத்தில் கொண்டு கடலூரில் உள்ள ''உயிரின உற்பத்தி மையம்'' ரூபாய் 13.5 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு உயிரின உர உற்பத்தித் திறன் ஒரு ஆண்டிற்கு 10 இலட்சம் பொட்டலங்களிலிருந்து 15 இலட்சம் பொட்டலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''தேசிய நீர்ப் பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்'' 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 35.61 கோடி ஒதுக்கீட்டில் 89,025 எக்டேரில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத் திட்டத்திற்கு ரூபாய் 80 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''

என்ற பாட்டுக்கனல் பாரதியின் கனவை நனவாக்க வந்த புதுமைப்பெண் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''நவரத்தினத் திட்டங்கள்'' வேளாண் களத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள வேளையில், புதிய வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கும், உழவர்தம் உயர்விற்கும் 21 புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புதுமைத் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்து மக்களின் மனதைக் குளிர்வித்துக் கொண்டுள்ளது. ●



# சாதனை படைக்கிறது!

பி.வி.கிரி



ஏழை எளியோர்
ஏற்றம் பெறவே
-எண்ணிலாத் திட்டங்கள்
வாழ்வில் ஒளியை
ஏற்றி வைக்கவே
- வகையான சட்டங்கள்!

உழவும் தொழிலும்
ஓங்கி வளரவே
- உதவுகின்ற அரசு
மழலைச் செல்வம்
மகிழ்ந்து உண்ணவே
- மகிழ்கின்ற அரசு!

பள்ளிக் கட்டடம்
பலப்பல எழவே
- பணிகள் ஏராளம்
துள்ளி ஆடிடத்
துறையும் உண்டு
- தொண்டுகள் தாராளம்!

அன்னைத் தமிழில்
ஆயிரம் பணிகள்
- அழகாய் நடக்கிறது
எண்ணம் கவரும்
எண்ணிலாக் கலைகள்
- ஏற்றம் பெறுகின்றது!

கால்நடை வளர்ச்சி
காவல் துறையும்
- கணக்காய் வளர்கிறது
பால்வளம் பெருக
பாசனம் சிறக்க
- பயனோ தெரிகிறது!


கண்ணைக் கவரும்
கைத்தறித் துணிகள்
- கைவண்ணம் மிளிர்கிறது
விண்ணை முட்டும்
ஆலயப் பணியோ
- அடுக்காய்த் தொடர்கிறது!

குடிநீர் எங்கும்
குறைவின்றிக் கிடைத்திட
- கடமை விரைகிறது
வீடுகள் மனையும்
வேலை வாய்ப்பும்
- சிறப்பாய் இருக்கிறது!


பட்டிக் காட்டிலும்
போக்கு வரத்து
- பாங்காய் நடக்கிறது
பொட்டல் காடும்
பொய்த்த பூமியும்
- பொன்னாய் மாறுகிறது!


கூட்டு உறவும்
காட்டு வளமும்
- கைகோத் திடுகிறது
நாட்டு வளமும்
நல்வாழ் வுமுமே
- நாளும் சிறக்கிறது!

சமூக நலமும்
சுற்றுலா வளர்ச்சியும்
- சீராய் நடக்கிறது
சமமாய் மகளிர்
சகலமும் பெறவே
- சாதனை படைக்கிறது!










# பொதுப்பணித் துறையின் பொன்னான பணிகள்

”பாசனம், கடலரிப்புத் தடுப்பு, நிலத்தடி நீர், காவிரி நீர்த்தகராறு, கிருஷ்ணா நதிநீர் ஆகிய பணிகள் குறித்தும், மின்சாரம், நெடுஞ்சாலைகள் ஆகிய பணிகள் குறித்தும் பொதுப்பணித்துறை பொறுப்புடன் செயலாற்றி வருகின்றது.“



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

**எஸ். கண்ணப்பன்**

பொதுப்பணித்துறை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் மிகத் தொன்மை வாய்ந்த அரசுத் துறைகளில் ஒன்றாகும். இத்துறை 1853-ஆம் ஆண்டில் 'லார்டு டெல்ஹவுசி' என்ற ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இன்று விரிந்து பரந்து வளர்ந்து பொதுமக்களின் இன்றியமையாதத் தேவைகளை நிறைவு செய்யும் அரும் பணிகளை ஆற்றி வருகிறது.

இத்துறை, பாசனத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தும் பணிகளையும் நிலத்தடி நீர் ஆய்வு, பாசனத் திட்டங்களைக் கண்டறிதல், அத்திட்டங்களைச் செயல்படுத்துதல், பராமரித்தல் போன்ற பணிகளையும் ஆற்றி வருகிறது. இத் துறை அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள், பள்ளிகள் மருத்துவமனைகள், வீட்டுவசதிக் குடியிருப்புகள் முதலியனவற்றிற்குக் கட்டடம் கட்டும் பொறுப்பையும் மேற்கொண்டு வருகிறது.

சாலைகளையும் நெடுஞ்சாலைகளையும் அமைத்து, பராமரிக்கும் பொறுப்பும் இத்துறையைச் சார்ந்ததே ஆகும்.

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை**

**சாதனைப் பட்டியல்**

தமிழ்நாடு பொதுப்பணித்துறை, பல்வேறு துறைகளைக் கொண்டுள்ளது.

**பாசனத்துறை**

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தி, பராமரித்து வருதல், மாநிலங்களுக்கிடையிலான ஆறுகள் குறித்த பிரச்சினைகள், பாசனம் தொடர்பான கொள்கை முடிவுப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கிறது.


தமிழ்நாட்டில் 50 அணைகள் உள்ளன; சுமார் 12,550 கி.மீட்டர் நீளத்திற்குச் சுமார் 4,900 கால்வாய்கள் உள்ளன; 24 இலட்சம் எக்டேருக்கும் மேற்பட்ட பாசனப்பகுதிகள் உள்ளன. இத்துறையின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய சாதனைப் பட்டியலைப் பின்வரும் குறிப்புகள் தெற்றெனப் புலப்படுத்துவதைக் காணலாம்.

தற்போது, ரூ.251 கோடி செலவிலான பதினேழு பெரும் பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் புதிதாக 19,416 எக்டேர் புன்செய் நிலங்கள் பாசனத வசதிப் பெறும்; 1,688 எக்டேர் நிலங்கள் பாசன இணைப்பு கிடைக்கும், 7,182 எக்டேர் நிலங்கள் நிலையான பாசனம் பெறும்.

தற்போது, ரூ.66.22 கோடி செலவிலான நான்கு புதிய பெரும் பாசனத் திட்டங்கள், இராமநாதபுரம், திண்டுக்கல்-அண்ணா, காமராசர் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதிகள் பயன் பெறும்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் ரூ.101.85 இலட்சம் செலவில் ஆறு நடுத்தர, பெரும் திட்டங்களுக்குப் புதிதாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உண்மையில், 1991-92-ஆம் ஆண்டில் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பாசனப் பரப்பளவு



11,03,028 எக்டேர் (27,25,581 ஏக்கர்) ஆகும்.

**தேசிய நீர் நிருவாகத் திட்டம்**

பாசன வளத்தை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்க மாகும். பல்வேறு பாசனத் திட்டப் பணிகளின் கீழ் 1,53,400 எக்டேர் பரப்பு பயனடையும் ஆயக் கட்டுதாரர்களுக்காக தமிழ்நாடு அரசு, ரூ.52.70 கோடி வழங்கியுள்ளது. இவை, நடந்தேறிவரும் திட்டங்களுக்கும், புதிய திட்டங்களுக்கும் பயன் படுத்தப்படும். பழைய அணைகளை வலுப்படுத்து வதற்கான அணைப் பாதுகாப்பு உறுதித் திட்டம்.

பெரியாறு, கொடகனாறு, பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, வீடூர், உப்பாறு, பொன்னியாறு, கோமுகி ஆகிய அணைகளின் கட்டுமானம் நீரியல் ஆகியவற்றை மறு சீரமைப்பதற்காக உலக வங்கி யின் நிதியுதவி ரூ.42 கோடி செலவிடப்படும். இத்திட்டம், கோடிக் கணக்கில் முதலீடு செய்வதற் கேற்ப பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதியளிக்கும் திட்டமாகும்.

**கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்**

தமிழ்நாடு மாநிலம் 1000 கி.மீட்டர் தூரத் திற்குப் பரவலான கடற்கரையைக் கொண்டுள் ளது. சென்னை, தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய கடற்கரைப் பகுதிகளை, கடல் அரிப்பின் அழிவு களிலிருந்து பாதுகாப்பது அவசியமாகும்.

பொதுச் சொத்துக்களையும், தனியார் சொத் துக்களையும் பாதுகாப்பதற்கும், கடல் அரிப்புத் தடுக்கும் பணி அவசியமானதாகும்.

வட சென்னையில் எண்ணூர் நெடுஞ் சாலைக்கு, ரூ.4.24 கோடி செலவில் பாது காப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவது இதற்கு ஓர் உதாரணமாகும்.

**சிறுபாசனம்**

பொதுப்பணித்துறையின் இந்தப் பிரிவு, ஏரிப் பாசன ஏற்பாட்டின் கீழ் வராத, 40 எக்டேருக்கும் அதற்கும் அதிகமாகப் பரப்புள்ள பாசனப் பகுதி யின் பராமரிப்பைச் செயல்படுத்துகிறது. இங்கு, இது ஒரு மிகைப்படியான கருத்தாகும். தமிழ் நாட்டில், ஐரோப்பியப் பொருளாதாரக்குழு உதவியுடன் ஏரிப்பாசன ஏற்பாடு இரு நிலை களில். நவீனப்படுத்தப்படுகிறது. 28,780 எக்டேர் பயனடையக் கூடிய மேல் நிலையிலுள்ள, 1,206 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலை II-இல், மொத்தம் 22,332 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதி களுக்குப் பாசன வசதி அளிக்க, 152 மானாவாரி ஏரிகளுக்கு நீர் வழங்கவும், 2,080 எக்டேர் பரப்பு பயன்பெறும் வகையில் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்த முன்னோடித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள் ளது. இதற்கு 55 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. 33.74 கோடி ரூபாய் செலவில் 137 ஏரிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றில் 27 ஏரிகள் தொடர்பான பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

**புதிய பெருந் திட்டம்**

அயல்நாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி (ஜப்பான்) அல்லது ஐரோப்பிய பொருளாதாரக் குழு நிலை II-லிருந்து நிதியுதவி பெறுவதற்காக 200 கோடி ரூபாய் செலவில் 2,500 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. VIIIவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**1992-93-ஆம் ஆண்டுப்பகுதி II திட்டங்கள்**

16 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், 354.92 இலட்சம் ரூபாய் முடிவான செலவில் 19 சிறுபாசனச் சிறப்புத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

**பெரியாறு வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தல்**

மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங் களில் 60,000 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியளிக்க, கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு ஆற்றின் நீரை, கிழக்கு நோக்கித் திருப்பி விடுவதற்காக 1895-ஆம் ஆண்டில் பெரியாறு அணை கட்டப்பட்டது.

வைகையாற்றில் பெருகிவரும் நீரைத் தேக்கி வைத்து, இரண்டு மாவட்டங்களில் உள்ள ஆயக் கட்டுப் பகுதிகள் பயன்பெறும் வகையில் அந்த நீரைத் திறந்து விடுவதற்காக, 1959-ஆம் ஆண்டில் வைகை அணை கட்டப்பட்டது.

இவ்விரு பாசன ஏற்பாடுகளில் பெரிய அள விலான பழுதுபார்ப்புப் பணிகளும், சீரமைப்புப் பணிகளும், 1977-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் உலக வங்கியின் கடன் உதவியை முழுவதுமாகப் பயன்படுத்தி இரண்டு நிலைகளில் முடிக்கப்பட்டுள்ளன. நீர் பெறுவதற்கு மேலும் வசதியாக இருக்கும் பொருட்டு, இணைப்புக் கால்வாய் அமைக்கும் பணி தற்போது முழு மூச்

சுடன் நடைபெற்று வருகிறது. இதனால், திண்டுக்கல்-அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களில் 1,620 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்- 1992 மார்ச்சு வரை ரூ.84.79 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூ.12.65 கோடி செலவிடக் கருதப்படுகிறது.

### நிலத்தடி நீர்

கிணறுகள், துளைக் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்காக தகுந்த இடங்களைத் தெரிந்தெடுப்பதற்கும், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் விவசாயிகள், பொதுமக்கள் அரசுத் துறைகள் ஆகியோருக்கு இப்பிரிவு ஆலோசனை நல்குவதோடு அறிவியல் ஆய்வு மூலம் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கும் அவர்களுக்கு உதவி செய்கிறது.

### காவிரி நீர்த்தகராறு

1990-ஆம் ஆண்டில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றம், தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு, 205 டி.எம்.சி. நீர் விடுமாறு கர்நாடக மாநிலத்திற்கு உத்தரவிட்டு இடைக்கால ஆணை பிறப்பித்தது. தமிழ்நாடு சட்டமன்றம் இந்த ஆணையை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. கர்நாடக மாநிலம் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது, கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குப் புறம்பானது என்று உச்ச நீதிமன்றம் 22.11.91-ஆம் நாளிட்ட தன்னுடைய ஆணையில் அறிவித்தது. இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும், பிரதம அமைச்சரைச் சந்தித்து, காவிரி வடிநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் உரிய அளவு பயன்களை அளிப்பதைக் கருத்திற்கொண்டு நீர், தேசிய ஆதாரமாகக் கருதப்பட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டனர். நீர் திறந்துவிடுவது பற்றி இவ்வரசு 14.5.92 அன்று மனு செய்து கொண்ட தன்பேரில், தற்போது இவ்விஷயம் உச்ச நீதிமன்றத்திடம் பரிசீலனையில் உள்ளது.

### கிருஷ்ணா நதி நீர் குடிநீர் வழங்குத் திட்டம்

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து 15 டி.எம்.சி. நீர் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு, ஆந்திரப் பிரதேச அரசுடன் 1983 ஏப்ரலில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1992-93-ஆம் ஆண்டில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்குத் தமிழ்நாட்டின் பங்காக தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி வழங்கியுள்ளது.

கண்டலேறு-பூண்டி கால்வாய், பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்லும் இணைப்புக் கால்வாய், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிகளின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டப் பணிகள்




★ உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனை அளவான 90.7 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவைத் தமிழக அரசு எட்டியுள்ளது; அரிசி உற்பத்தி 71 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் எல்லைக்குள் முழு வேகத்தில் நடை பெற்று வருகின்றன.

இதுகாறும் பாசனம் குடிநீர் வழங்கல் துறை யின் சாதனை விளக்கப்பட்டது. மின்சாரத் துறை யின் பணிகளின் சிறப்பைக் காண்போம்.

**மின்துறை**

தமிழ்நாட்டில் 26.3.92-லிருந்து மின் வெட்டு இல்லை என்பது குறித்து நாம் பெருமைப்படலாம். பின்வரும் மின் உற்பத்தி நிலையங்களில் 222.250 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் பிரிவு IV-210 மெகாவாட் நரி மணம் எரிவாயு விசையாழி திட்டம் - 10 மெ.வா. புளியங்குளம் காற்றாலைகள் 1.5 மெ.வா. மணவக்கண்டி புனல் மின் திட்டம் (0.75 மெ.வா.).

தூத்துக்குடி அனல்மின் நிலையம் 1991-ஆம் ஆண்டில் 60.95 சதவீத மின் சக்தியை உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. இந்த அனல் மின் நிலையம் ஆறாவது முறையாகப் பாராட்டத் தக்க விருதினைப் பெற்றுள்ளது.

1991 ஜூலையிலிருந்து 1992 ஜூன் வரை யில் மொத்தம் 4,17,813 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 41,520 மின் இணைப்புகள் வேளாண்மைப் பம்பு செட்டு களுக்குக் கொடுக்கப்பட்டவையாகும். 1992 மார்ச் வரையில் 27,388 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மின் உற்பத்தி செய்வதில் தனியார் துறை பங்கேற்பதற்கு ஊக்கம் அளிக்கப் படுகிறது. சில திட்டங்கள் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன.

300 மெகாவாட் பிள்ளைபெருமாள் நல்லூர் எரிவாயு விசையாழி மின் உற்பத்தித் திட்டம்.

500 மெகாவாட் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம் நிலை - IV 1000 மெகாவாட் கடலூர் அனல் மின் நிலையம். அரசு புதிய தொழில் கொள்கைப்படி 100 சதவீத, ஏற்று மதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவு





★ பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெருநாட்டில் நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும் போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும்.

களுக்கும் (EOU) புதிய திட்டங்களுக்கும், தொழில் வளர்ச்சியை முன்னிட்டுப் பல சலுகைகளை வழங்குகிறது. பொதுப்பணித்துறையின் மற்றொரு முக்கியப் பிரிவைப் பார்ப்போம்.

**நிறைவேற்றப்பட்ட முக்கியக் கட்டடப் பணிகள்**

1. சென்னை, உயர்நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடம் ரூ.413.00 இலட்சம் செலவில் கட்டப் பட்டது.

2. விருதுநகரில் காவல்துறைப் பணியாளர் குடியிருப்புக் கட்டடம் ரூ.167.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

3. இராமநாதபுரத்தில் காவல்துறைப் பணி யாளர்களுக்குக் குடியிருப்பு ரூ.229.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.


4. சிவகங்கையில் காவல்துறைப் பணியாளர் களுக்குக் குடியிருப்பு ரூ. 230.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

5. கோயம்புத்தூரில் சட்டக்கல்லூரியும் விடுதி யும் ரூ.95.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

6. விருதுநகரில் ஆயுதக் காவல்படைப் பணி யாளர்களுக்குக் குடியிருப்புகள் ரூ.215.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

7. தமிழ்நாட்டில் புயல் புகலிடம் (35 எண் ணிக்கை) ரூ.127.00 இலட்சம் செலவில் கட்டப் பட்டது.

ஒரு நாட்டில் அமைந்துள்ள சாலைகளின் தரமும், அவற்றின் மேம்பட்ட தன்மையும், அந் நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக்



கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும்.

தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, அரசு ஒப்புதல் அளிக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் பெரும் பாலங்கள் கட்டுதல் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

49,000 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளைப் பராமரிப்பதுடன், இத்துறை, 5223 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்கும் பணியையும் மேற்கொண்டது.

5 ஆண்டுக்கால அளவில், ரூ.150 கோடி செலவில், மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ள சாலைகளை மீண்டும் அமைக்கும் பணி குறித்த சிறப்பு பழுது பார்ப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில், 782 கி.மீ. நீளச் சாலைகள் மீண்டும் போடப்பட்டன.

134 பெரிய, சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 46 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ரூ.30 கோடி செலவில், தனியார் அமைப்புகள் மூலம் சாலைகளை மேம்படுத்தும் பணியும், இதற்காக செலவிட்ட தொகையை சுங்கம் வசூலிப்பதன் மூலம் திரும்ப பெறுவதும் ஒரு புதிய அம்சமாகும். இந்த முறை, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் செயற்படுத்திப் பார்க்கப்பட்டு வருகிறது.

**கிழக்குக் கடற்கரைச் சாலை**

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.53 கோடி செலவில், திருவான்மியூரிலிருந்து கடலூர் வரை இருவழிப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அது, சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. ரூ.13 கோடி ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைகள்**

இவ்வாண்டில் ரூ.408 இலட்சம் செலவில் முதல்சாலைப் பணிகளும், ரூ.49 இலட்சம் செலவில் வேலூர் மாற்றுச் சாலைப்பணிகளும், ரூ.47 இலட்சம் செலவில் ஏனைய பாலம் கட்டும் பணிகள் முதலியனவும் முடிக்கப்பட்டுள்ளன.

**தேசிய நெடுஞ்சாலை-45**

தேசிய நெடுஞ்சாலை-45-இல் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலான பகுதி ரூ.72 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டில் செலவு ரூ.7.2 கோடியாகும்.

**தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்**

நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10 கோடி செலவில் மூன்று பெரும் பணிகளுக்கும், ரூ.45 கோடி செலவில் வேறு 13 பணிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட்டச் செலவு ரூ.150 கோடியாகும்.

# ஆதிதிராவிடர் மேம்பாடு : அரசு உதவிகள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
**எம். ஆனந்தன்**

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 15.2.1974-ஆம் ஆண்டு 1956-ஆம் ஆண்டு கம்பெனிச்சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு நிறுவப்பட்ட இந்நிறுவனம், 1980-81-ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றி வருகிறது.

கடந்த ஆண்டு 1991-92-இல் தாட்கோ நிறுவனம் 18 மாணவ மாணவியர் விடுதிகள் 2 பழங்குடியினர் மாணவ விடுதிகள், 8 பள்ளிக் கட்டடங்கள், ஒரு ஜி.டி.ஆர். பள்ளிக் கட்டடம், 0 சமுதாயக் கூடங்கள் மற்றும் 268 ஜீவன்தாரா கிணறுகள் ஆக ரூ.451 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்துள்ளது.

நடப்பாண்டில் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றியுள்ளது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

வேலையின்றி அவதிப்படும் ஏழை இந்து ஆதி திராவிடர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அமைத்து வாழ்வளிக்க இத்திட்டம் செயல்படுகிறது. இத்



**“ ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக, வீட்டு வசதி, பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள், ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுதல் ஆகிய பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன. சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறு தொழில் கடன் ஆகியவையும் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழி வகுக்கின்றன. ”**

திட்டத்தின்மூலம் நபர் ஒன்றுக்கு அதிகப்பட்சம் ரூ.10,000 வரை மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்படுகிறது. இதில் 50 விழுக்காடு தாட்கோ மானியமாகவும், எஞ்சிய 50 விழுக்காடு வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மளிகைக் கடைகள், பெட்டிக் கடைகள், ரெடி மேடு ஆடைகள் தயாரித்தல்-முதலியன வழங்கப் படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 8,000 ஆதி திராவிடர்களுக்கு ரூ.400 இலட்சம் மானிய உதவியுடன் கடன் வழங்கப்பட்டது.

**சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்:**

தாட்கோவில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் முக்கிய இடம் பெறுகிறது. இத்திட்டம் தாட்கோவில் முழு மானியத்துடன் "ட்ரைசம்" திட்டத்திற்கு இணையாக 6 மாதக் காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது. படித்து வேலை வாய்ப் பின்றி இருக்கும் ஆதி திராவிடர் இளைஞர்கள், பள்ளிப்படிப்பினை இடையில் நிறுத்திய மாண வர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். பயிற்சி முடிந்தபின் மானியத்துடன் வங்கிக் கடன் வழங்கப்பட்டு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்த இத் திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் வானொலி மற்றும் தொலைக் காட்சி பழுதுபார்த்தல், ஜெம் கட்டிங், வெல்டிங், எலக்ட்ரிசியன், ப்ளம்பிங், டர்னிங், மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல், தையல் பயிற்சி ஆகிய தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இப்பயிற்சிக்காக நிதி உதவி 6 மாதங்களுக்கு நபர் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.**

1. மாதம் ஒன்றுக்கு உதவித்தொகை ரூ.250/-
2. பயிற்சியாளர்களுக்குச் சம்பளம் மாதம் 1-க்கு ரூ.75/-
3. மூலப் பொருட்கள் வாங்க மாதம் 1-க்கு ரூ.25/-

பயிற்சிக்காகக் கருவிக் கலப்பெட்டி ரூ.500 மதிப்புக்கு ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில் 2,307 நபர்களுக்கு ரூ.59.982 இலட்சம் செலவில் முழு மானியத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

**விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்கள்:**

விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் உற் பத்திப் பெருக்கத்திற்குக் கீழ்க்கண்ட திட்டங்களை ஆதி திராவிட விவசாயிகளுக்குத் தாட்கோ மானியத்துடன் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் மாவட்ட மேலாளர்கள் தாட்கோ மூலமாகவும், விவசாயப் பொறியியற் பிரிவு மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

வித்துக்கள், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள் போன்றவை தாட்கோ வழங்கும் மானி யத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.




**★ நம்மை வாய்ச்சொல் வீரர்களாக்கப் பெறப்பட்டதல்ல சுதந்திரம். பல நூறு ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த சோம்பலை விரட்டி, நம்மை நாமே வளர்த்துக் கொண்டு, வாய்மை மிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க நாம் பெற்ற உந்து சக்தியே சுதந்திரம் ஆகும்.**

கறவை மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடுகள், முயல் வளர்த்தல், வெள்ளைப் பன்றி வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்கள் தாட்கோ மானியத்துடன் கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**கீழ்க்கண்ட திட்டங்கள் ஆதி திராவிடர் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியத்துடன் வழங்கப்படும்:**

1. ஆழ்குழாய்க் கிணறு.
2. பம்பு செட்டுடன் கூடிய மின்மோட்டார் அமைத்தல்.



3. எண்ணெய்ப் பொறிகள் வழங்குதல்.
4. பம்பு அறைகள் அமைத்தல்.
5. இரு எருதுகளுடன் கூடிய டயர் வண்டி.
6. உழவு மாடுகள் (ஜதை).
7. இரு மாடுகள் கொண்ட மாட்டு வண்டி.
8. சைக்கிளுடன் கூடிய விசைத்தெளிப்பான்.
9. இரும்புப் பங்குகள் வழங்குதல்.

**சிறு தொழில் கடன் திட்டம்:**

இத்திட்டத்தின்மூலம் மானியத்துடன் விளிம்புத் தொகைக் கடனாக ஏழை ஆதி திராவிடர், மலை வாழ் மக்கள் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிருத்துவர்கள் ஆகியோருக்குச் சுயமாகத் தொழில் செய்ய உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத் தின்கீழ் 50 விழுக்காடு மானியமும், 25 விழுக் காடு விளிம்புத் தொகையாகவும், எஞ்சிய 25 விழுக்காடு வங்கிக் கடனாகவும் அதிகப் பட்சமாக ரூ.5,000 வரை வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 540 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.



**தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்:**


ஆதி திராவிடத் தனி நபர் தொழில் முனை வோர்களை உருவாக்கும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் இது வரை 2,400 தொழில் முனைவோர் உருவாக்கப் பட்டுள்ளார்கள். ஆதி திராவிடர் தொழில் முனை வோர்களுக்கு, அவர்களின் விருப்பம் தகுதி பயிற்சி ஆகியனவற்றிற்கேற்ப ரூ.5 இலட்சம் வரை மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. தாட்கோ மானியமாக ரூ.15,000 மற்றும் மானியம் ரூ.85,000 அல்லது சொத்து மதிப்பில் 20 விழுக்காடுகள், இதில் எது குறைவோ அவற்றை 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும்படி வழங்கப் படுகிறது. எஞ்சிய தொகையை வங்கிக் கடனாக வழங்கப்பட்டு சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

வருவாய் ஈட்டும் திட்டங்களான லாரி, மினி வேன்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், ட்ராக்டர் மற்றும் ட்ரெயிலர், இரசாயனத் தொழிற்சாலை, கம்ப்யூட்டர் மையங்கள், செயற்கை வைரங்கள் தீட்டும் தொழில், ஏற்றுமதி ஆடைகள், ஜிராக்ஸ் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 879 ஆதி திராவிடர் தனி நபர் தொழில் முனைவோர்களைத் தாட்கோ உருவாக்கி யுள்ளது.

இது தவிர, அரசு மற்ற 22 துறைகளின் மூலமாக ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல அரிய திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றி வருகிறது.

நடப்பாண்டில் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.2,653 இலட்சம் செலவிடப்பட்டு, 65,738 ஆதி திராவிடர் மக்கள் பயனடைந்துள்ளனர்.



★ குறைகூறியே பழக்கப்பட்ட சில தீய சக்திகள் அரசின் கவனத்தைத் திசைதிருப்ப, சில விரும்பத்தகாத முறைகளைக் கையாளுகின்றன. அத்தகைய தீய சக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

# தொழிலாளர் நலம் பெற...





மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**எஸ். ரகுபதி**

**"தொழில் உறவுகள் தொடர்கின்றன; தொழிலாளர் நலம் பெருகுகின்றன. தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களது உரிமைகளை நிலைநாட்டவும் அரசு கருத்துடன் செயலாற்றி வருகிறது. தொழில் தகராறுகள் தீரவும், பிரச்சினைகளை சுமுகமாக முடிவு செய்யவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன."**

தமிழக அரசு தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் நேரிடையாக, தங்கள் வளர்ச்சியையும் நிறுவன வளர்ச்சியையும் குறித்துப் பேசி தாங்களே முடிவெடுக்கும் கூட்டு முயற்சியையே ஊக்குவிக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தினரின் பணி நிலைமையினை வரன்முறைப்படுத்துவதற்காகவும், அவர்களுக்காக நலன் திட்டங்கள் சரிவரப் பெறப்படும் வகையிலும் இவ்வரசு மிகவும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டு சமூகத்தில் நல்லதொரு அந்தஸ்தைப் பெற்று வாழும் விதத்தில் அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது

அரசு பதவியேற்ற நாளிலிருந்து கடந்த ஓராண்டுக் காலமாக தமிழகத்தில் தொழில் உறவு நிலைமை மிகவும் சுமுகமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர் துறை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாட்டிற்கான சமரச அமைப்புத் தொழில் தகராறுகள் ஏற்படும் முன்னரே அவற்றை இனம் கண்டு அவை வரும் முன்னரே நல்லதொரு தீர்வு கண்டு, பிரச்சினைகளைச் சுமுகமாக முடிவு செய்யும் விதத்தில் மிகவும் முனைப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் பணியாற்றிட முடுக்கிவிடப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் உள்ள மொத்த 20,366 தொழில் நிறுவனங்களில் 10,77,724 தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 11.6.92 அன்று உள்ளபடி 14 தொழில் நிறுவனங்களில் மட்டுமே வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் 5,124 தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஜூலை 1991 முதல் மே 1992 மாதம் முடிய உள்ள காலத்தில் தமிழக அரசின் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களால் மொத்தம் உள்ள 13,330 தொழிற்தகராறுகளில் 11,470 தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

## முக்கியமான தொழிற் தாவாக்கள்

### 1990-91-ஆம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை

தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் தொழிலாளர்கள் 30% போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கும் பொருட்டு வேலைநிறுத்த அறிவிப்புக் கொடுத்து பின்னர் 22.10.91 முதல் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையின்படி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்கள் 1989-90-ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அதே சதவிகித போனஸ் வழங்கும்படி 1.11.91 அன்று அறிவுரை வழங்கினார். இவ்வறிவுரை வழங்கப்பட்ட பின்னரும் தென்னிந்திய நூற்பாலைகள் சங்கத்தைச் சார்ந்த பல உறுப்பினர்கள் அறிவுரைப்படியான போனஸ் வழங்க




வில்லை. 15.11.91 அன்று மொத்தமுள்ள 524 நூற்பாலைகளில் 43,500 தொழிலாளர்களைக் கொண்ட 98 நூற்பாலைகள் வேலைநிறுத்தம் செய்தன. இதன் பின்னர் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தினரின் கருத்துக்களையும் கேட்டறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டதைப் போன்றே இவ்வாண்டும் போனஸ் வழங்க வேண்டும் எனவும், அத்தொகையை இரு தவணை முறைகளில் முறையே 22.11.91 மற்றும் 7.1.92 ஆகிய இரு தேதிகளுக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

நலிவுற்ற நூற்பாலைகளைப் பொறுத்த வரையில் 15% போனஸ் வழங்கவேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்கள். இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகளின் போனஸ் பிரச்சினை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

மேலும் இன்ஜினியரிங், சர்க்கரை, சிமெண்ட், தோட்ட நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைக்காகித ஆலைகள் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட போனஸ் பிரச்சினை கடந்த ஓராண்டில் இவ்வரசின் தலையீட்டினால் சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

**மூடிய ஆலைகளைத் திறத்தல்**

1.4.91 முதல் பணி முடக்கம் செய்யப்பட்டிருந்த பி அண்டு சி மில் இவ்வரசின் சீரிய முயற்சியினாலும், இத்துறை அலுவலர்களின் கடும் முயற்சியினாலும் 13.4.92 முதல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு பின்னி ஆலை நடைமுறை மூலதனத்திற்காக, பாரத வங்கிக்கு ரூ.10 கோடிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த உத்தரவாதம் 6 மாதக் காலத்திற்கு அல்லது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு நிர்வாகம் வழங்கியுள்ள திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கும் வரை இவற்றுள் எது முன்னதாக முடியுமோ அதுவரை அமலில் இருக்கும்.

பெருங்களத்தூரில் 7.2.1989 முதல் மூடிக் கிடந்த 3,086 தொழிலாளர்களைக் கொண்ட திஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட், என்னும் நிறுவனம் இவ்வரசின் பெரு முயற்சியினால் 4.2.1992 முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கோவையில் 13.11.84 முதல் இயங்காமலிருந்த வசந்தா மில்ஸ் என்னும் நிறுவனம் மீண்டும் திறப்பது சம்பந்தமாக இத்துறை அலுவலர்களின் பெருமுயற்சியினால் 24.2.92 அன்று தொழிற்தகராறுகள் சட்டம் 1947-ன் பிரிவு 12(3)ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

**மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்**

இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள 18,962 பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 75,84,400 உதவித் தொகையாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலச் சட்ட அமலாக்கம்**

சட்டங்கள், சட்ட திருத்தங்கள், அறிக்கைகள், விதிவிலக்குகள் மற்றும் தமிழ்நாடு எடைகள்

மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) விதிகள், 1989.

தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தர (அமலாக்கம்) விதிகள் 1989-இல் உள்ள 4-வது அட்டவணையில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின்படி, ஒரு கிலோ கிராம் வரையிலும் அளவுள்ள உணவு எண்ணை விற்பனை செய்யப்படும்போது அளவு, மூலமும் ஒரு கிலோ கிராம் எண்ணெய்க்கு மேல் விற்பனை செய்யப்படும்போது எடை போடுவதன் மூலம் மட்டுமே உரிய அளவைக் கணக்கிட வேண்டும் என்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது

**தோட்டத் தொழிலாளர் சட்டம்**

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்க செய்ய வேண்டியும், அந்த வசதிகளைப் பெற்றுத் தர வழிமுறைகளைப் பரிந்துரை செய்யவும் ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948**

கடந்த ஜூன் 1991 முதல் மே 1992 வரையிலான காலத்தில் 1948- ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம் மறு நிர்ணயம் செய்துள்ளது..

**நிர்ணயம்**

1. காகிம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில்

**மறு நிர்ணயம்**

1. கம்பளித் தரைவிரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்
2. தோல் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்
3. உப்பளத் தொழில்
4. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழில்
5. ஜவ்வரிசித் தொழில்
6. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்
7. ஓட்டல் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்
8. அச்சகத் தொழில்.

தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீரிய முறையில் அமல் செய்யும் பொருட்டு கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசு கீழ்க்கண்ட புதிய பதவிகளை இத்துறையில் ஏற்படுத்தி உள்ளது.

1. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தை அமல்படுத்துவதற்காக மட்டும் 6 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள விற்பனையாளர்களின் எடையளவுகளை முத்திரை செய்வதற்காகவே 8 முத்திரை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. சென்னை மற்றும் கோவையில் உள்ள ஸ்டோரேஜ் டாங்குகளைச் சரிபார்க்கும் பணிக்காகவே 2 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**நலத் திட்டங்கள்**

**பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி**

பீடித் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் மற்றும் கடன் தொகையில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,000 வீடுகள் கட்டுவதற்காக அரசு திருநெல்வேலி-கட்டபொம்மன மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் நிலம் கையகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், உரிய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது முடிவுற்றதும் வீடு கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.



★ ஒன்றுபட்ட நமது இந்தியாவின் ஒருமைப்பாடு காக்க உறுதிபூணும் அதே நேரத்தில் நமது உரிமைக்காகக் குரல் கொடுக்கவும் நாம் தயங்கமாட்டோம்.

**கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்துதல்**

அமைப்பு ரீதியற்றத் துறைகளில் ஒரு பெரும்பான்மையான பகுதியினர் கட்டடத் தொழிலாளர்களாகும். இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதோடல்லாமல், 1982-ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிரந்தரம் மற்றும் வேலை நிலைமை) சட்டத்திலுள்ள சலுகைகளை இத்தொழிலாளர்களும் பெற வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதைத் தவிர இத்தொழிலாளர்களுக்கென வைப்பு நிதி, பணிக்கொடை, பேறுகால சலுகைகள் போன்ற பயன்களோடு விபத்து மற்றும் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் நிதி உதவி கிடைக்கும் வகையில் அரசு தனியாக ஒரு நலத் திட்டத்தினை உருவாக்கவும் உத்தேசித்துள்ளது.

**மகளிர் பிரிவு ஏற்படுத்துதல்**

பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு, பல்வேறு தொழில் நிறுவனங்களில் அவர்களது வேலைவாய்ப்பு, வேலை நிலைமை மற்றும் அவர்களுக்கென ஏற்படுத்தப்

பட்டுள்ள நல வசதிகள் போன்ற விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு அரசு 'மகளிர் பிரிவு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி மகளிர் பிரிவின் தலைவராகத் தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் ஒரு பெண் அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். பெண் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பெண் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களின் முன்னேற்றம் குறித்தும் கருத்து தெரிவித்தல், குழந்தைகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு என நலத்திட்டங்கள், கருத்தரங்குகள், கருத்தாய்வுகள் நிகழ்த்த ஆலோசனைகள் கூறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இவர் பணிக்கப்பட்டுள்ளார். மேலும், சம ஊதியச் சட்டத்தினை அமலாக்கம் குறித்த பணியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் மறு வாழ்வு நிதி ஏற்படுத்துதல்**

பொதுவாக நவீனப்படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிறுவனங்களினாலோ ஆட்குறைப்பு அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது.

எனவே, அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை கண்டறிந்து அவ்விதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய நிலையுள்ளது. அவற்றுள் ஒன்றாக அரசால் கண்டறியப்பட்டதுதான், அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென வகுக்கப்பட்ட நல நிதித் திட்டம் ஆகும்.

பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்காகவே, சமீபத்தில் அரசு ஒரு புதிய தொழிற்கொள்கையினைப் போதுமான நிதி சலுகைகளுடன் அறிவித்துள்ளது. இப்புதிய தொழிற்கொள்கையினால் தொழிலாளர் புனர்வாழ்வு நிதியினைத் தொடங்கவும், இந்த நிதியினைக் கொண்டு நிறுவனங்களைச் சீரமைக்கும் போது அதில் உள்ள தொழிலாளர்கள் பயனடைய ஏதுவாகும். இந்த நல நிதியை எவ்வாறு அமைப்பது மற்றும் அமல்படுத்துவது என்பது பற்றிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து செயல்படுத்தும். இந்த நல நிதிக்கு ரூ.50 கோடி நிதி உதவி அளித்து உதவும்படி மைய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்**

பீடித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகளை அவர்களைப் போய்ச் சரிவர சேர்வதற்கெனவும், பீடித் தொழிலாளர்களுக்கென நிறுவனங்களை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துவது பற்றி அரசு சிந்தித்து வருகிறது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டும், மூல



தனம், பணியாளர் அமைப்பு மற்றும் விற்பனை நிலைகளைக் கருத்திற்கொண்டும் ஒரு வரைவுத் திட்டத்தினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நல வாரியம்**

தொழிலாளர்களின் நலனுக்காகக் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட இடங்களில் இவ்வரசு தொழிலாளர் நல மையங்கள்/குழந்தைகள் காப்பகங்கள்/படிப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. தேனியிலுள்ள பழனிச் செட்டிப்பாளையம்.
2. ஈரோட்டில் உள்ள பள்ளிப்பாளையம்.
3. இராஜபாளையத்திலுள்ள துலுக்கப்பட்டி (குழந்தைகள் காப்பகம்)
4. வடலூர் (படிப்பகம் மற்றும் குழந்தைகள் காப்பகம்)

**தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பொறியியல் கல்லூரி அமைத்தல்**

கல்வித் தகுதியின் அடிப்படையில் தற்போது தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளைப் பொறியியல் கல்லூரியில் சேர்க்க இயலாத நிலை உள்ளது. மேலும், சுய பொருளாதார அடிப்படையில் இயங்கும் பொறியியல் கல்லூரிகளிலும் தங்கள் குழந்தைகளைச் சேர்த்துப் படிக்க வைப்பதற்குப் போதிய பொருளாதார வசதி இல்லாத நிலையிலேயே தொழிலாளர்கள் காணப்படுகிறார்கள். தொழிலாளர்களின் இந்த இக்கட்டான நிலையிலிருந்து அவர்களை மீட்கும் பொருட்டாகவும், அவர்களது குழந்தைகளும் பொறியியல் பட்டம் பெற்று பொறியாளர்களாக உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக, தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

தற்போது சுமார் 12 இலட்சம் தொழிலாளர்கள் தொழிலாளர் நல நிதியில் சந்தா செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி ரூ.250-ஐ 5 மாத சுலப தவணைகளில் பிடித்தம் செய்யவும், நிர்வாகத்திடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி தொகை வசூலித்து பொறியியல் கல்லூரி தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனால் சுமார் 15 கோடி ரூபாய் வசூலாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூபாய் 8 கோடி பொறியியல் கல்லூரி ஆரம்பிப்பதற்கும், மீதமுள்ள தொகை நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டி பொறியியல் கல்லூரி நடத்துவதற்கான செலவிற்குப் பயன்படுத்தப்படும். ●

# வீட்டு வசதித் துறை ஆற்றிடும் வியத்தகு பணிகள்

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்

**டி.எம். செல்வகணபதி**

**“ வீட்டு வசதித்துறை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் - ஆகியவற்றின் கடந்த ஓராண்டுக் காலப் பணிகளைத் தொகுத்து வழங்கும் கட்டுரை இது. ”**



உண்ண உணவு, உடுத்த உடை, வசிக்க வீடு ஆகிய மூன்றும் மக்களின் முக்கியத் தேவைகளாகும். இவற்றில் ஆழ்ந்த கவனத்தோடு செயல்பட்டு வரும் தமிழக அரசு எல்லோருக்கும் வீட்டு வசதி கிட்டச் செய்வதில் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, மாநிலம் முழுவதுமாகச் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 23,170 குடியிருப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இவற்றில் வீடுகள், மனைகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளும் அடங்கும்.

**குறைந்த வருவாய் பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ.12,601 முதல் ரூ.26,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீடு ரூ.50,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 9,287 குடியிருப்புகளை (வீடுகளும் மற்றும் மனைகளும்) கட்டியுள்ளது.

**நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப்பிரிவனர்க்காக வீட்டு வசதித் திட்டம்**

நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.26,401 முதல் ரூ.44,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மதிப்பீடு ரூ.1,75,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 4,952 குடியிருப்புகள் (மனைகள் வீடுகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள்) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

**சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டம்**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துச் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்டப்படும் முதல் கட்டமாக 77 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 7 நகரங்களில் ரூ.1,042 இலட்சம் மதிப்பீட்டில் 1,230 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 6 நகரங்களில் ரூ.1,555 இலட்சம் மதிப்பீட்டில் 2,126 வீடுகள் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன. மீதமுள்ள நகரங்களில், நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.





### தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை, மதுரை, சேலம், கோயம் புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய நகரங் களில் 967 எக்டேர் பரப்பளவில் ரூ.246.41 கோடி மதிப்பீட்டில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத் தின் கீழ் 70,000 மனைகளை உருவாக்கி வருகிறது. இதற்காக திட்டக்காலம் 1988 அக்டோபர் மாதம் முதல்1995 மார்ச் மாதம் முடிய ஆகும்:

இதுவரை 24 திட்டங்கள் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளன. 31.3.1991 முடிய 6 திட்டங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. மேலும் 4 திட்டங்கள் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இத் திட்டத்தில் மேலும் 8000 தன் னிறைவு மனைகள் திட்ட மதிப் பீட்டில் ஏற்பட்ட சேமிப்பின் மூலம் உருவாக்கி மொத்தம் 78,000 தன் னிறைவு மனைகள் உருவாக்க திட்ட மிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3,281 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு, 16,000 தன் னிறைவு மனைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

### தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம், மாநிலத் தலைநகர் மாவட்டம், வருவாய்க் கோட்டத் தலைமை இடத்தில் அரசு ஊழியர் களுக்கு வாடகைக் குடியிருப்புகள் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டு உள்ளது. அரசின் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குடியிருப்பு களைப் பராமரித்து வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 520 அடுக்கு மாடி குடியிருப்புகளைக் கட்டி யுள்ளது.

### நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாட்டில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் நிலங்களைக் கையகப் படுத்தி வருகின்றது. நில உரிமை யாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தும் பொருட்டு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறி யாளருக்கு உரிமை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது (அரசு நிலை ஆணை எண் 35 நாள் 8.1.1991) நிலங்களின் விலையை நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சி யாளரைத் தலைவராகக் கொண்ட குழுவின் முன்பு ஒப்புதல் பெறப் படும். இக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியாளரும், இதன் உறுப்பினர்களாக நகர-ஊரமைப்புத் திட்டத்தின் துணை இயக்குநரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியாளரும் இருக்கு மாறும் அரசு உத்தரவிட்டுள்ளது. தனியார் நிலங்களைப் பேச்சு வார்த் தைகளின் மூலம் வாங்குவதைத் துரிதப்படுத்தலாம் என வாரியம் நம்புகிறது. இருந்த போதிலும், பெறுநகர்ப் பகுதியில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிலம் கையகப் படுத்தும் நெறிமுறைகள் தொடரப் பட வேண்டும்.

### சாதனைகளின் சுருக்கம்

1991-92-ஆம் ஆண்டில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.116.50 கோடி செலவில் 23,170 குடி யிருப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

### தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசைப்பகுதிகளை அகற்றியும் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டும், குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதும் தான் அரசின் கொள் கையாகும். அரசின் கொள்கையைச்

செயற்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்படுத்தப் பட்டது.

கடந்த ஓராண்டுக் காலத்தில், மேலே கூறியுள்ள அரசின் கொள் கையைத் திட்டவடிவமாக்கி நிறை வேற்றுவதற்கென, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கீழ்க் காணும் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன.

**குடிசை மாற்றுத் திட்டம்**

இது, குடிசைப்பகுதிகளை அகற்றி பல மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கென அரசினால் வகுக்கப் பட்ட நலத்திட்டமாகும். இவ்வாறு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற் கெனவே குடிசைப்பகுதிகளில் வசித்து வந்த மக்களுக்கு ஒதுக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் மற்ற நகரங்களில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு ரூ.10.38 கோடி செலவில் 2,666 குடியிருப் புகள் கட்டப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் குடிசை வாழ் மக் களின் மேம்பாட்டிற்காகச் சாலைகள், குடிநீர், கழிவுநீர், வடிகால் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப் படை வசதிகள் செய்யப்படுவதுடன் மனை உரிமையும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதியான இத் திட்டம்,உலக வங்கி நிதியுடன், சென்னை மற்றும் மாநிலத்தின் முக்கிய 9 நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மேற் காணும் நகரங்களில் ரூ.3.50 கோடி செலவில் 12,264 குடும்பங் களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

**விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், சுகாதார மில்லாத குடிசைப்பகுதிகளை மேம் பாடு செய்து அப்பகுதிகளில் சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு, குடும்பத்திற்கு ரூ.1,500 வீதம் செலவு செய்து, பொது குடி நீர்க் குழாய், பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் தெரு மின்விளக்குகள் அமைக்கப்படுகின்றன. இத்தொகை அரசினால் மானியமாக அளிக்கப் படுகிறது. இத்திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்குள் வராத நகரங்களில் மட்டுமே பொது வாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.1.50 கோடி செலவில் மற்ற நகரங்களில் உள்ள 10,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதியான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் செய்து தரப்பட்டுள்ளன.

**நடைபாதையில் வசிப்போருக்கு வீடுகள் கட்டும் திட்டம்**

சென்னை நகரில் நடைபாதை யில் வசித்து வரும் மக்களை அவ் விடங்களிலிருந்து அகற்றி, சென்னைப் பெருநகரத்தின் பல பகுதிகளில் குடி யேற்றம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடனும் ஹட்கோ நிறுவனம் வழங்கும் கடனுதவியுடனும் அடிப் படை வசதிகளுடன் கூடிய மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு மைய வீடு களும் கட்டித்தரப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், ரூ.0.34 கோடி செலவில் 1,542 குடும்பங் களுக்கு மனைகளில் மைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இத்துடன், ரூ.0.31 கோடி செலவில் 1,911 குடிசை வாழ் இளைஞர்களுக்கு ஆக்க வளமுடைய பயிற்சி அளிக்கப் படுகிறது.

**கடன் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்காக ரூ.8,000 கடனுதவி வழங்கப்படுகிறது. இக் கடன் மூன்று தவணைகளில் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 3,715 குடும்பங்களுக்கு ரூ.3.04 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நேரு வேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.4,150 வீதம் உறைவிட நிலையை உயர்த்தி வழங் கப்படுகிறது. இந்நிதி உதவி கடன் மற்றும் மானிய வடிவில், ரூ.3,150 ஹட்கோவிலிருந்து கடனாகவும், ரூ.800 மற்றும் ரூ.200 முறையே மத்திய அரச மற்றும் மாநில அரசால் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இக்கடன் 10 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தப் படவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், உறைவிட



நிலையை உயர்த்த கடனாக 4,776 குடும்பங்களுக்கு ரூ.2.02 கோடி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.91 அன்று பார்வையிட்டார்கள். இப்பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி இங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட வேண்டுமென்று முதலமைச்சரின் ஆணையை நிறைவேற்றும் முகத்தான், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ரூ.82.135 கோடி மதிப்பீட்டில், ஹட்கோ கடனுதவியாக ரூ.69.813 கோடியுடனும், மாநில அரசின் மானியமாக ரூ.12.323 கோடியுடனும் 15,000 குடியிருப்புகளைக் கட்டம் கட்டமாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது. ரூ.4 கோடி செலவில் ஹட்கோ நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைச் செப்பணிடும் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் வீட்டு வசதி சங்கங்களைப் பொறுத்த வரையில், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளர் அதன் நிர்வாகத் தலைமைத் துறை பொறுப்பாளராக அமைந்துள்ளார்.

இத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலமாக மாநில அளவில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தையும், கீழ் மட்டத்தில் முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்களையும் செயல்படுத்தி வருகின்றது. கடந்த ஓராண்டுக் காலத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தும் அனைத்துத் திட்டங்களும் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

**கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்**

கிராமப்புறத்தில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக் கொள்வதற்கான நிதி உதவியானது மாநில அரசின் மூலமாக 1978-79-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில், ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில், ஒரு வீட்டிற்கு ரூ.1,500 என்ற வீதம் ரூ.450 இலட்சங்கள் அரசிடமிருந்து மானியமாகப் பெற்று, கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 30,000 வீடுகளைக் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஓராண்டில் மொத்த இலக்காகிய 30,000 வீடுகளையும் அரசு கட்டியுள்ளது.



**★ சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும்; புறத்தில் உள்ளது வேறு- அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

கிராமப்புறங்களில் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காகச் செயல்படுத்தும் திட்டங்கள்:

கிராமப்புறங்களில் 30,000 வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவி வழங்கும் திட்டப்பணிகளுக்கும் மேலாக, வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1989-90-ஆம் ஆண்டு முதலாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களும் வீடுகள் கட்டுவதற்காகக் கடனுதவி அளித்து வருகின்றன. இதற்காக வீட்டு வசதி இணையம் ஹட்கோவிடமிருந்து நிதி உதவி பெறுகிறது. 1991-92-ஆம் ஆண்டில் குறைந்த வருவாய்ப் பிரிவின் கீழ் 1,504 வீடுகள் கட்டப்பட்டு ரூ.494.00 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதைப் போன்று நடுத்தர வருவாய்ப் பிரிவின் கீழ் 1,789 வீடுகள் கட்டப்பட்டு ரூ.952.00 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டமானது, நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக மாநிலத்தின் பெரும்பாலான ஊராட்சிகளிலும் மற்றும் எல்லா நகராட்சி பகுதிகளிலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வில்லங்கம் இல்லாத வீட்டு மனைப் பட்டாக்களை உடைய உறுப்பினர்களே வீடு கட்டுவதற்கான கடனுதவி பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் முதல் ரூ.1.5 இலட்சமும், நகராட்சி மற்றும் மாநகராட்சியின் சுற்றுப் பகுதிகளில் வாழும் பிரிவினருக்கு ரூ.80,000 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களால் 9,057 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு ரூ.111 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.101 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

**கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா)**

கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் வீடுகளை மேம்படுத்தும் பொருட்டு, கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் இந்தியா

விலேயே முதன்முறையாக ஒரு சிறந்த திட்டமாக அரசால் துவங்கப் பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு வழங்கப் படும் நிதி உதவி பின்வருமாறு:

'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கப்படும் கடன் ரூபாய் 2,000, இதில் அரசின் மானியம் ரூபாய் 500, பயனீட்டாளரது பங்கு ரூபாய் 500, ஆக மொத்தம் ரூபாய் 3,000.

இத்திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் வசிக்கும் பொருளா தாரத்தில் நலிவடைந்த பிரிவினர் தங்களுடைய வீடுகளை மேம்பாடு செய்வதற்காகக் கடனுதவி அளிக்கப் படுகிறது. அதாவது, ஓலை வேயப் பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்து தல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவைகளுக்காகக் கடன் உதவி அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில், 10,000 வீடுகள் மேம்படுத்துவதற் காக ரூ.50 இலட்சங்கள் அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதற் காக 10,000 பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் செயல்பாடு சாதனை, நடப்பு நிதியாண்டில் (1992-93) கொண்டு வரப்படும்.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.120.81 கோடி செலவில் 50,484 வீடுகள் கட்டப்பட்டுள்ளன இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.108.47 கோடி செலவில் 43,554 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

சென்னைப் பெருநகர் பகுதியில் உருவாகும் எல்லா வளர்ச்சிப் பணி களுக்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டம் 1971 பிரிவு 49-ன் படி திட்ட அனுமதி வழங்கு வதன் மூலம் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்குபடுத்துகிறது. முழுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் படி திட்ட அனுமதி வழங்கப்படு கிறது. இந்த ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நிலுவையில் உள்ள திட்ட அனுமதி வழங்கக் கோரி பெறப்பட்ட விண்ணப்பங் களைக் குறைக்கும் நோக்கத்தோடு தனி முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-இல் கீழ்க்காணும் சில திருத்தங்களைக் கொண்டு வரலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனை யில் உள்ளது.

அ) ஒப்புதல் இல்லாமலும், விதி களிலிருந்து விலகியும், கட்டியுள்ள கட்டடங்களுக்கு விதிகளை விலக்கி மற்றும் தளர்த்தும் பொருட்டு, ஒரு வரன்முறைக் கட்டணத் தொகை வசூலிப்பது;

ஆ) ஒப்புதல் இல்லாமல் மற்றும் விதிகளிலிருந்து விலகி கட்டியுள்ள கட்டடங்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் அளிப்பதை மறுப்பது பற்றி அதற்கான சட்டங்களைத் திருத் துவது;

சென்னைப் பெருநகர் பகுதிக் கான முழுமைத் திட்டத்தின் முதல் பகுதி 1975-1991-இல் ஆண்டிற் குத் தயாரிக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் பகுதிக் கான இரண்டாவது முழுமைத் திட்டம் 1991-2011 தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மறைமலை நகர்த்திட்டம்**

மறைமலை நகர்த்திட்டம் 3,300 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஆண்டுக் காலத்திற்குள் ஒரு இலட்சம் மக்கள் வாழத்தக்க வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதுவரை 1,445 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2,704 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

**மணலி புது நகர்த் திட்டம்**

மணலி புது நகர்த் திட்டம், 1,450 ஏக்கர் நிலப்பரப்பில்



மேதகு மொரிஷியஸ் நாட்டுக் குடியரசுத் தலைவர் திரு. வீராசாமி ரிங்காடு அவர்கள் 3.6.'92 அன்று சென்னைக்கு வருகைதந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரையும், அவரது குடும்பத்தாரையும் மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா ஆகியோர் வரவேற்றனர்.

75,000 மக்கள் 20 ஆண்டுகளுக்குள் குடியேற்றத் தக்க வகையில் பகுதிப் பகுதியாகச் செயல்படுத்தப் படுகிறது. இதுவரை 8,724 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1760 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

மத்திய வர்த்தகப் பகுதியில் உள்ள அழுகு பொருள், துணி வகைகள், உணவு தானியங்கள் ஆகியவற்றின் விற்பனைத் விற்பனைத் தலத்தை கோயம்பேட்டிற்கு மாற்றுவதன் மூலம் மத்திய பகுதியில் நெரிசலைத் தவிர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம் ரூ.50.4 கோடி செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2,229 கடைகள் அழுகு பொருள் சந்தைக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளன. பூக்கடைகளுக்கான 456 கடைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. காய்களுக்கான 1,381 கடைகள் முடிவடையும் தறுவாயில் உள்ள.

சாத்தங்காடு என்ற சென்னை நகரின் வடபகுதியில் உள்ள இடத்தில் நவீனமாக அனைத்து வசதிகளுடன் இரும்பு மற்றும் எஃகு மொத்த அங்காடி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.17 கோடி ஆகும். திட்டப் பணிகள் முடிந்து அங்காடி திறக்கப்பட்டு விட்டது. 484 கடைகளுக்கான மனைகள் அதற்குரியவர்களிடம் கொடுக்கப்பட்டு விட்டன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உள் வட்டச்சாலையின் வடபகுதியில், சுமார் 535 ஏக்கர் பரப்புள்ள நிலங்களை கையகப் படுத்தி அதனை மேம்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.30 கோடிகள்.

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.632 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு மாபெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ரூ.354 கோடி செலவில் சென்னை மாநகருக்கான திட்டப்பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெறச் செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆவன செய்து வருகிறது.

> ★ நாட்டில், கற்றறிவாளர்கள் இருக்கின்றனரோ- அதைத் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.
>
> —அறிஞர் அண்ணா

தன்னிறைவு வீட்டுமனைகள், குடிசைப் பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்படுத்துதல், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் வாங்குதல், மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் வருவாய் வரத்தக்க வசதித் திட்டங்களைத் தீட்டவும், தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

### முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம்

முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு புதிய திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், சென்னையில் தனியாரிடமிருந்து குறைந்த வருவாயினருக்கான தன்னிறைவு, மனைகளை வாங்குதல் மற்றும் அடிப்படை வசதிகள், சமுதாய வசதிகள், வீட்டு மேம்பாட்டு கடனுதவி வழங்குதல் என்பவை அடங்கும். இது ஒரு தனியார் மற்றும் அரசு நிறுவனம் என்ற ஒரு கூட்டு திட்டமாக இருக்கும். இத் திட்டத்தில் சேரும் மனைகள் மேம்படுத்தும் தனியார்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், விலக்கு அளிக்க வழிவகை செய்யும் நோக்கம் உள்ளது. 10,000 மனைகள் ரூ.13.5 கோடி மதிப்பீட்டில் மக்களுக்குத் தரப்பட உள்ளது.

### அடையார்-கடற்கரைப் பகுதித் திட்டம்

சென்னையில் கிரீன்வேஸ் சாலையில் 45 ஏக்கர் பரப்பில் அடையாறு கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றினைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாட்டிற்காக அரசு கொடுத்துள்ளது.

இந்த நிலப்பரப்பில், அலுவலகக் கட்டடங்கள், கேளிக்கைகளுக்கான வளாகம், பூங்காக்கள், விளையாட்டு அரங்கங்கள் முதலியவைகள் உள்ளடங்கிய ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட இருக்கிறது.

### சுயசார்பு நகரங்களில் வளர்ச்சித் திட்டம்

தமிழக அரசின் முயற்சியின் விளைவாக, மைய அரசு குடியிருப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மையத்திற்குச் சுய சார்பு நகரங்களின் வளர்ச்சித் திட்டத்தில், சென்னை நகரை இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மையம் ஏற்றுக் கொண்டு சென்னை நகரை இத்திட்டத்தில் சேர்த்துள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் சென்னை நகரம் மட்டுமே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. தேவைகளின் அவசரத்திற்கு ஏற்ற வகையில், பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, இனங்கண்டு கொள்ளுதல், நிர்வாகம் தொழில் நுட்பம் மற்றும் அரசியல் நிலையில் செயல் திட்டங்களைத் தயாரித்தல், முக்கியச் செயலாக்கக் காரணங்களின் ஒத்துழைப்பை விழைதல் மற்றும் திட்டத்தைச் செயலாக்க ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

### உள்ளாட்சி உதவித் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் வசூலிக்கப்படும் திட்ட மேம்பாடு கட்டணத்தின் ஒரு பகுதி சென்னைப் பெருநகரில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவைகளால் மேம்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்குச் செலவிட அளிக்கப்படுகிறது.

### சுற்றுப்புற சுகாதாரத் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஜப்பானிய அரசு உதவியுடன் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டத்திற்கான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

### தொழில் நுட்ப ஆய்வுகள்

சென்னைப் பெருநகருக்கான போக்குவரத்துத் திட்டம் தயார் செய்ய ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சாலை நெருக்கடி பற்றிய ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது.

# உணவுத்துறையின் ஒப்பற்ற சாதனைகள்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

**ஜி. விஸ்வநாதன்**

**“ தமிழ்நாட்டில் மொத்தம் 21,986 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப்புறங்களில் 17,394 நியாய விலைக்கடைகளும், நகர்ப்புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன. ”**

மக்கள் உயிர் வாழ இன்றியமையாதது உணவே ஆகும். இந்த இன்றியமையா உணவுபொருட்களைப் பொது மக்கள் போதுமான அளவிலும் நியாயமான விலையிலும் பெறச் செய்வதே தமிழக அரசின் கொள்கையாகும். ஆக்கப் பூர்வமான பொதுவிநியோக முறையினைப் பராமரிப்பதாலும், மக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கண்காணிப்பதாலும், பலவேறு கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதாலும், மாநிலத்தில் நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிப்பதாலும் அரசு மேற்கண்ட தனது கொள்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிகிறது.

மேற்கண்ட தமிழக அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதே உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியாகும். இக் கொள்கையினை இத்துறை வெற்றிகரமாகச் செயலாக்க உணவுபொருள்கள்



வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உணவு பொருள் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுக் காவல்துறை துணைத் தலைவர் ஆகிய இரண்டு துறைத் தலைவர்களுடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகிய 2 அரசு நிறுவனங்கள் உறுதுணையாக உள்ளன. 1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் ஆகியனவும் இத்துறைக்குப் பெரிதும் உதவுகின்றன.

உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கீழ் ஒரு இணை இயக்குநரும் மேலும் 2 துணை இயக்குநர்களும் இயங்கி வருகின்றனர். சென்னை மாநகரம் வடக்கு மற்றும் தெற்கு எனப் பிரிக்கப்பட்டு இரண்டு துணை ஆணையாளர்களின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், சென்னை மாநகரம் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி ஆணையாளரின் கீழ் இயங்கி வருகின்றன. மாவட்டங்களைப் பொருத்தவரையில் வட்ட மற்றும் மாவட்ட வழங்கல் அதிகாரிகள் உணவுப் பொருள் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளனர்.

1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ், மாநில அரசு பிறப்பித்துள்ள கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்த குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர் உதவுகின்றனர். இந்தக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிலும் மற்றும் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், வனத்துறைக்கான குற்றப் புலனாய்வுக் காவல்துறைத் தலைவர் ஆகியோரின் கண்காணிப்பிலும் இயங்கி வருகின்றனர்.

1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் மொத்த நுகர்வோராகச் செயல்பட்டு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய வர்த்தக கழகம் ஆகியவற்றிடமிருந்து பெற்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாயவிலைக் கடைகளுக்கும் வழங்குகிறது. இந்த நிறுவனம் கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவுத் தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டங்



களைச் செயல்படுத்துதல், அதற்கு தேவையான மூலதனம் நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில் நுட்பம் மேலாண்மைச் சேவைகள், ஆலோசனை உதவிபோன்ற பணிகளைச்செய்து வருகின்றது இந்நிறுவனத்தால் பல பொருள் அங்காடிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1958-59-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளை பொருள்கள், விதைகள், உரங்கள் விவசாயச் சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியிலான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது.

**பொது விநியோக முறை**

மத்திய அரசு பொது விநியோக முறையின் கீழ், மக்களுக்கு வழங்குவதற்காக அரசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியவற்றை மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது. இந்த இன்றியமையாதப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் பொருட்டு தமிழகத்தில் மொத்தம் 21,986 நியாயவிலைக் கடைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப் புறங்களில் 17,394 நியாய விலைக் கடைகளும் நகர்ப் புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன. மக்கள் சுலபமாகச் சென்று வாங்கக்கூடிய வகையில் நியாயவிலைக் கடைகளை அமைத்தல் என்பது பொது விநியோக முறையின் நான்கு முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். குறிப்பிட்ட வகை இன்றியமையாப் பொருட்கள் சுலபமாய் கிடைத்தல், மக்கள் வாங்கத் தக்க வகையில் நியாயமான விலையில் கிடைத்தல் ஆகியவை பொது விநியோக மற்ற குறிக்கோள்களாகும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. பொது விநியோகத்தில் நியாய விலைக் கடைகள் நடத்த தனியார் தமிழகத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. அரசு நிறுவனத்தின் 21,986 நியாய விலைக்கடைகளைத் தவிர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவைப்படும் இடங்களில் பகுதி நேர நியாய விலைக்கடைகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர 11 நடமாடும் நியாய விலைக்கடைகள் வட ஆர்க்காடு- அம்பேத்கர், திண்டுக்கல்- அண்ணா, திருநெல்வேலி- கட்டபொம்மன், நீலகிரி, பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இயங்கி நெடுந்தூரம் உள்ள, எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற உதவுகின்றன.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பொதுவிநியோகத்தின் மூலம் பயன் அடைகின்றன. அனைத்துக் குடும்பங்களும் நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களைப் பெறுவதற்காக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் சுமார் 125 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இவை இந்த ஆண்டு முடிவு வரை புழக்கத்தில் இருக்கும். குடும்ப அட்டைகளில் உள்ள குடும்பத் தலைவரின் வருமானம் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினைச் சரி செய்யும் பொருட்டு சமீபத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரு வினாப்பட்டியல் தரப்பட்டு சரியான விவரங்கள் அவர்களிடமிருந்தே பெறப் பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளைக் களைய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் பொருட்களின் முக்கியமானது அரிசியாகும். ஆனால், மாநிலத்தில் அரிசி உற்பத்தித் தேவையை நிறைவு செய்ய இயலாதவாறு பற்றாக்குறையாக உள்ளது பொதுவிநியோகத்திற்கு தேவையான அரிசி கீழ்க்காணும் முறைகளில் பெறப் படுகிறது;

காவிரி டெல்டா பகுதியில் ஏகபோகக் கொள்முதல் முறையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்தல்;

அறுவடைக்காலங்களில், தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்கள் முழுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர், உடையார் பாளையம், முசிறி, குளித்தலை, லால்குடி, திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில், அறந்தாங்கி வட்டங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்கிறது.

1.7.1991 முதல் 14.9.1991 வரையிலான ஒரு சிறிய இடைவெளி தவிர, 1991-ஆம் ஆண்டு முழுவதும் காவிரி டெல்டாப் பகுதி முழுவதும் ஏகபோகக் கொள்முதல் அமலில் இருந்தது. 1992-ஆம் ஆண்டு சம்பாப்

பருவம் 16.12.91-இல் ஆரம்பித்து 30.6.92 வரை தொடரும். இதில் 31.5.92 வரை பெறப்பட்ட நெல்லின் அளவு 12.15 இலட்சம் டன்களாகும். 1990-91-ஆம் ஆண்டின் சம்பாப் பருவத்தில் பெறப்பட்ட நெல்லின் அளவு 10.50 இலட்சம் டன்கள்தான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

**மத்திய அரசு ஒதுக்கீடு**

மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் பொது விநியோகம் மூலம் வழங்குவதற்காக மாநிலங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்கிறது. மாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 75 ஆயிரம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு பொது விநியோகத்தில் அரிசியின் நுகர்வு மிக அதிக அளவான 17.31 இலட்சம் டன்னை எட்டியுள்ளது. 1990-ஆம் ஆண்டின் நுகர்வு 12.33 இலட்சம் டன்கள். அதிக அளவு ஏகபோக கொள்முதல் மற்றும் மத்திய அரசின் கூடுதல் ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம் இந்த அதிக அளவு நுகர்வினைச் சமாளிக்க முடிந்தது.

**அரிசி ஆலையாளர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து வர்த்தக லெவி மூலம் கொள்முதல்**

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நெல்/அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் பகுதி 3-இன் படி உரிமம் பெற்ற ஆலையாளர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து அவர்களிடம் உள்ள இருப்பில் 50 சதவிகிதத்தை அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையில் லெவியாகப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வர்த்தக லெவி மூலம் பெறப்பட்ட அரசியின் அளவினைக் காணும்போது மிகக் குறைந்த அளவே, அதாவது சராசரியாக 6 சதவிகிதம்தான் பெறப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இந்தச் சிறிய அளவு அரிசியினைப் பெற பெருத்த அளவில் பணமும் நேரமும் செயல் திறனும் விரயமாகிறது. மேலும் பல முறைகேடுகளுக்கும் இம்முறை இடமளிக்கிறது. மேலும் மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்வது இயலாத நிலையில் அரிசி இருப்புக் குறைவான மாவட்டங்களிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் வெளி அங்காடிகளில் அரிசி விலை உயர்ந்திருந்தது. தவிரவும் அரிசி வியாபாரிகள் வர்த்தகர் லெவியினை நீக்கினால் வெளி அங்காடி அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாயிலிருந்து 1.50 ரூபாய் வரை குறையுமென உறுதி அளித்தனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசு 29.1.92 முதல் வர்த்தக லெவி முறையினை நிறுத்தி வைத்தது- வெளி அங்காடியில் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேலும் குறைந்துள்ளது. அரசின் மேற்கண்ட முடிவு சரியானதெனக் காட்டும். வர்த்தகர்கள் அரிசி அதிகமுள்ள மாவட்டங்களிலிருந்து தேவையான மாவட்டங்களுக்கு அரசியினை எடுத்துச் செல்ல முடிந்ததால் தென் மாவட்டங்களில் அரிசி விலை குறைவு பெருமளவில் உள்ளது.

**மேற்கூறிய முறைகளில் பெறப்படும் அரிசி பொதுவிநியோகத்திற்குப் போதா விட்டால் வெளிச்சந்தையில் வாங்குதல்**

பொது விநியோக முறையின் தேவைகளை மேற்கண்ட கொள்முதல் மூலம் சரிகட்ட முடியவில்லையெனில், மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அரசு வெளிச்சந்தையில் அரிசி வாங்குகிறது.

மத்திய அரசு அரிசியின் விலையை அவ்வப்போது ஏற்றினாலும்கூட மாநில அரசு அரிசியின் விலையை ஏற்றாமல் உள்ளது. தற்போது சாதாண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்ற விலையிலும் சன்ன மற்றும் மிகச் சன்ன அரிசி கிலோ ஒன்றுக்கு 3.00 ரூபாய் என்ற விலையிலும் விற்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி விற்கப்படுவதால் ஒவ்வொரு ஆண்டும் அரசு அதிகத் தொகை மானியமாக அளிக்கவேண்டி உள்ளது. 1992-93-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இதற்காக 343 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் அரிசி தற்போது பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 4 கிலோ மற்றும் சிறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ என்ற அளவில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிற்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகிறது.



**ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் தமிழில் கல்வி கற்பதைத் தவிர்த்துவிடலாம் என்கிற எண்ணம் எவருக்காவது இருந்தால், அவர்கள் தயவுசெய்து தங்களது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

மாதந்தோறும் பொது விநியோக முறை மூலம் வழங்குவதற்காக மத்திய அரசு மாநிலத்திற்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமை வழங்குகிறது. கிலோ ஒன்றுக்கு 2.60 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது.

மத்திய அரசு இம்மாநிலத்திற்கு நபர் ஒருவருக்கு 425 கிராம் என்ற விகிதத்தில் 1986-ஆம் ஆண்டில் இருந்த மக்கள் தொகை 530 இலட்சம் என்ற கணக்கில் 1.2.1987 முதல் மாதந்தோறும் 22,500 மெட்ரிக் டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் மக்கட் தொகை கணக்கெடுப்புத் துறை இயக்குநரின் கணக்குப்படி 1.3.91-இல் இம்மாநிலத்தின் மக்கட் தொகை 557 இலட்சமாகும். எனவே, மாநிலத்தின் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே பற்றாக்குறை உள்ளது. ஆகவே, மைய அரசின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. இந்த நிலையில் மாநிலத்தின் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையைச் சீராக வழங்க வேண்டும் என்பதற்காக, இவ்வரசு நபருக்கு ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ என்று நிர்ணயித்து 1.10.1989 முதல் நடைமுறைப் படுத்தி வருகிறது. மாதம் ஒன்றுக்கு இம்மாநிலத்திற்கு 31 ஆயிரம் மெட்ரிக் டன் சர்க்கரை வழங்க வேண்டும் என மத்திய அரசை இவ்வரசு கேட்டு வருகிறது. பொது விநியோகத்தில் சர்க்கரையின் விலை 6.90 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ பாமாலின் வழங்கினால்கூட இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13 ஆயிரம் டன் பாமாலின் தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மத்திய அரசு பாமாலின் இறக்குமதியை வெகுவாகக் குறைத்துவிட்டது. இதன் காரணமாக இம்மாநிலத்திற்குப் பாமாலின் ஒதுக்கீடு வெகுவாகக் குறைக்கப்பட்டதுடன், சில மாதங்களில் பாமாலின் ஒதுக்கீடு செய்யப்படவே இல்லை. பொது விநியோக முறையின் மூலம் பாமோலின் வழங்கப்படாதது பொதுமக்களுக்கு ஒரு

பெரும் குறையாக இருந்ததோடு, வெளி அங்காடியில் சமையல் எண்ணெயின் விலை வெகுவாக உயர ஆரம்பித்தது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பொது விநியோகத்தில் பாமோலின் வழங்குவதற்காக மாநில அரசு நேரடியாக அதனை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மேற்கொண்டார். அவரது பெரு முயற்சியின் காரணமாக மத்திய அரசின் இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் விலையை ரூபாய் நாணயத்தில் அளிக்கும் திட்டத்தின் கீழ் 18,000 மெட்ரிக் டன்கள் பாமோலின் இறக்குமதி செய்ய முடிந்தது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியும் பெறப்பட்டது. இந்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசால் குடும்ப அட்டைதாரர்களுக்கு, உதிரி எண்ணெய் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயித்திருந்தாலும் கூட, கிலோ ஒன்றுக்கு 22.50 ரூபாய்க்குப் பாமோலின் வழங்க முடிந்தது.

பொது விநியோக மூலம் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக, ஆண்டினை குளிர்காலம், கோடைகாலம், மழைக் காலம் என மூன்றாகப் பிரித்து மத்திய அரசு மாநிலங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குகிறது. சென்னை அதன் புறநகர் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள் ஆகியவற்றில் மாதம் ஒன்றுக்குக் குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும் மற்ற நகராட்சி பகுதிகளின் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 6 லிட்டர் வீதமும், பேரூராட்சிகள் மற்றும் நகரிய பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படுகிறது. விலை லிட்டர் ஒன்றுக்கு 2.80 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் மொத்தம் 530 மொத்த மண்ணெண்ணெய் வணிகர்கள் உள்ளனர். நியாயவிலைக் கடைகளைத் தவிர சுமார் 2,900 தனியார் சில்லறை வணிகர்கள் மண்ணெண்ணெய் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். சில்லறை விற்பனையாளர் பதிவுச் சான்றிதழ் பெற்று இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறார்கள், இவர்கள் தவிர, 2,800 கை வண்டிக்காரர்கள் குடும்ப அட்டைதாரர்களின் அதிகப்படியான மண்ணெண்ணெய் தேவையை நிறைவுசெய்கிறார்கள்.

சிறு வணிகர்கள் மற்றும் தேநீர்க் கடைகள் வைத்திருப்பவர்கள் தங்களது மண்ணெண்ணெய்த் தேவைக்கு கைவண்டிக் காரர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இந்த சிறு வணிகர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு பொறுப் பேற்றபின் இவர்களுக்கு மாதத்திற்கு 30 லிட்டருக்கு மேற்படாமல் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் விலையில் மண்ணெண்ணெய் வழங்கலாம் என ஆணையிட்டுள்ளது. இது சோதனை முறையில் தற்போது சென்னை, மதுரை நகரங்களில் அமல்படுத்தப்படும்.

இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதுமாக எடுக்கப் பட்டு விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதில் இவ்வரசு உறுதிகொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கணிப் பொறி மேலாண்மைத் தகவல் முறை அரசால் உருவாக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையிலுள்ளது.

மக்களுக்குப் பொது விநியோகம் மூலம் வழங்கப்படும் இன்றியமையாதப் பொருட்கள் நல்ல தரத்துடனும் சரியான எடையுடனும் வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு அரசு நியாய விலைக் கடைகள் அளவிலும், வட்ட அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1.6.92 அன்று தலைமைச் செயலகத்தில்- ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**



விழிப்புப் பணிக்குழுக்கள் அமைத்துள்ளது. எடைக் குறைவினைத் தவிர்க்கும் பொருட்டு அரிசி நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலேயே தரப்படுத்தப்படுகிறது. கடைகளின் மீதான மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடை பணியாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. விழிப்புப் பணிக்குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் கடமைகள், செயல்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கட்டளைகளுக்கிணங்க வலிவூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதி போன்ற பகுதிகளில் 1.1.1992 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் குடும்ப அட்டை பெறாதவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான அனைத்து உள்ளமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து நெல் மற்றும் அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் குறித்து பெறப்படும் தகவல்களைப் பதிவு செய்ய ஜார்ஜ் டவுன் மண்டலத்தில் உள்ள உணவுபொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1992-ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 15 நபர்களை 1980-ஆம் ஆண்டு கள்ளச்சந்தைத் தடுப்பு, இன்றியமையாப் பொருட்கள் வழங்கலை பராமரித்தல் சட்டத்தின் கீழ் காவலில் வைத்தனர். உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டு 17,828 சட்டபூர்வ மாதரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1,179 மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதே காலத்தில் 1,015 இனங்களில் குற்ற வழக்குகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் இந்த காலத்தில் ரூபாய் 1.96 இலட்சம் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. 1991-ஆம் அண்டில், 1977-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 6,638 குற்ற வழக்குகளும் 1985-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள்



★ சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைக்க வேண்டும்; சமுதாயத்திலே பொருளாதாரத்தையும் சமுதாய அமைப்பையும் சமுத்துவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும்; சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

(செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1,015 குற்ற வ்ழக்குகளும் அனுமதிக்கப்பட்டன. இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ், முறையே 6.69 இலட்சம் ரூபாய் மற்றும் 22.86 இலட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

**விலை ஏற்றத்தை தடுத்தல்**

வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களின் விலையை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதனால் இயல்பு மீறிய விலை ஏற்ற இறக்கம் ஏற்படும்போது சரியான நடவடிக்கை எடுக்க முடிகிறது. உயர்ந்து வரும் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு விலைகளுக்கான குழு ஒன்றினை அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின் படி, வெளி அங்காடியில் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் பருப்பு, மிளகாய், தனியா, கடுகு, மிளகு, வெல்லம், தேயிலை போன்ற 27 பொருட்களை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்கி வெளி அங்காடி விலையை விடக் குறைந்த விலையில் விற்று வருகின்றன. இவை தவிர கட்டாயமாகவோ அல்லது தாமாகவோ உணவுப் பொருட்களின் விலையினை வியாபாரிகள் குறைக்க செய்வதற்காக, அரிசி, மிளகாய் வற்றல், சமையல் எண்ணெய், பயிறுவகைகள், காய்கறிகள் வியாபாரிகளுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. வர்த்தக லெவியினை 29.1.1992 முதல் நிறுத்தி வைத்ததும், விலை உயர்வினைத் தடுப்பதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியே ஆகும். இதனால் லெவி அங்காடியில் அரிசி விலை குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது. இந்தப் பலமுனை நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக குறைந்துள்ளது.

## மகளிர் விடுதி

**பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிகள் நாடெங்கிலும் 605 உள்ளன. இவற்றில் 38,685 பணி புரியும் மகளிர் தங்குவதற்கு வசதி உள்ளது. அவற்றுள், 205 விடுதிகளில் 5,275 குழந்தைகளைப் பகல் பொழுதில் கவனித்து கொள்ளும் வசதியும் உண்டு.**

**கடந்த ஆண்டு இறுதி வரை மகளிர் விடுதிகளுக்காக ரூ.2.84 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 60 விடுதிகள் உள்ளன. இவற்றில் 3,038 பணி புரியும் மகளிர் தங்குவதற்கு வசதி உண்டு. இருபது விடுதிகள் 520 குழந்தைகளைப் பகல் பொழுதில் கவனித்துக் கொள்ளும் வசதியும் கொண்டிருக்கின்றன.**

**நுகர்வோர் பாதுகாப்பு**


1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி, கீழ்க்கண்ட அமைப்புகளை இம்மாநில அரசு உருவாக்கியுள்ளது.

1. மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு;
2. மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம்;
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்.

**நலத்திட்டங்கள்**

இத்துறையின் மேற்கண்ட பணிகளைத் தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றைச் சத்துணவு மையங்களில் நேரிடையாக வழங்கும் பணியினைச் செய்து வருகிறது. மேலும் பணியாளர் நலத்திட்டத்தின் கீழ் காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுக்கு அரசு ஆணைகளின் படி இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் இக்கழகம் வழங்கி வருகிறது. மேலும், இலங்கை அகதிகளுக்கும் இன்றியமையாப் பொருட்களை இக்கழகம் வழங்கி வருகிறது●

# பணிபுரியும் சிறுவர்களுக்கு நலநிதி



**“ தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு நல நிதியைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. ”**

**தீப்**பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு, ஒரு நல நிதியைத் தமிழக அரசு 1.1.'91 முதல் உருவாக்கியுள்ளது.

தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபர்கள், ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2 வீதம் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். 54,924 தீப்பெட்டித் தொழிலாளர்கள் இதனால் பெரும் பயனடைவர். மாநில அரசும் இதற்கு இணையாகத் தன் பங்காக, ஆண்டு ஒன்றிற்கு ஒரு தொழிலாளிக்கு ரூ.2 வீதம் அளிக்கும். தற்போது இந்தத் தொகையை ரூ.2-லிருந்து ரூ.10 ஆக உயர்த்திட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தைப் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில், ஏற்கெனவே அமலிலுள்ள இந்தத் திட்டம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் தற்போது விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும்பொருட்டு, எந்த மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளனவோ அம்மாவட்டங்களில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இந்த அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குழு மற்றும் தனி நபர் விபத்து மற்றும் ஆயுள் ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10-லிருந்து 65 வயது வரையிலுள்ள தொழிலாளிகளுக்குப் பொருந்தும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சந்தாத் தொகை ஆண்டிற்கு ஒரு நபருக்கு ரூ.6 ஆகும். இந்தத் தொகையைத் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் கொடுக்கின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் ஒருவர் உச்சவரம்பாக ரூ.50,000/- பெற முடியும். 1.7.'91-லிருந்து தேசியக் காப்பீட்டுக் கழகத்தினரால் இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பணிபுரிவதைத் தடுக்கும் பொருட்டு, மேற்படித் தொழிற்சாலைகளில் சோதனைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை முடுக்கிவிடுமாறு தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளருக்கு ஆணைகள் இடப் பட்டுள்ளன. மேலும், சம்பந்தப் பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர், வேலைசெய்யும் தொழிலாளர்களின் வயது பற்றிய சான்றிதழ்களைக் குறிப்பிட்ட படிவத்தில் பராமரித்து வருகின்றனரா என்பதைக் கண்டறியும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதற்காகத் தொழிலாளர்களால் வேண்டப்படும் வயதுச் சான்றிதழ்களை, அவர்களது பிறந்த தேதி சான்றிதழ்களுடன் ஒப்பிட்டுச் சரி பார்த்து, பின்னர் வயதுச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் என்று கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும், வட்ட ஆட்சியருக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சிவகாசியில் ஒரு பயிற்சி நிலையம் நடப்பு ஆண்டில் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டது. அரசும் இந்தப் பயிற்சி நிலையத்தைத் துவக்க தற்போது அனுமதி அளித்துள்ளது.

கடந்த 4.3.'92 அன்று மண்டலத் தொழிலாளர் நிலையம், அடையாறு, சென்னை-20, என்னும் இடத்தில், இத்துறையினரால் 'தேசியப் பாதுகாப்பு நாள்' கொண்டாடப்பட்டது. அப்போது 'பாதுகாப்பு மேம்பாடு' பற்றிய ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# நலிந்தோர் நலம் பேணும் அரசு

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**இந்திர குமாரி**



,,

**சமூக நலத்துறை, நலிந்தோர் நலம்பேண பல்வேறு பணிகளைச் சிறப்புடன் ஆற்றிவருகின்றது. பெண்கள் நலம், குழந்தைகள் நலம் எனும் இரு பெருந்திட்டங்களை இரு கண்களாகப் போற்றிவரும் இத்துறை, ஊனமுற்றோர், முதியோர் நலம் குறித்தும் முழு முயற்சியுடன் செயலாற்றி வருகிறது.**

‘‘

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீ நிற்கும் உலகு''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வழிநின்று, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஐந்தரைக் கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, தன்னிகரில்லாத் தலைவியாக விளங்கி செங் கோலோச்சி வருகிறார்கள்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை என்று அழைக்கப்படும் இந்தத் துறையில் நலிந்தோர் நலம் பேணப்படுகிறது. சமுதாயத்தில் பல நூற்றாண்டுக் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு, வீட்டுக்குள் முடக்கி வைக்கப்பட்டு வந்த பெண்கள், வளரும் வயதில் போதிய ஊட்டச் சத்து நிறைந்த உணவு கிடைக்காமல் வாடும் குழந்தைகள், தங்கள் உடல் ஊனத்தால் அல்லலுறும் ஊனமுற்றோர் என இந்த மூன்று வகைப்பட்டவர்களைக் கவனிப்ப தையே தலையாயக் கடமையாகக் கொண்டு செய லாற்றும் இந்தத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இயன்ற அளவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றார்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சென்ற ஆண்டு இந்தத் துறைக்கு ரூ.345 கோடி ஒதுக்கினார்கள்; இந்த ஆண்டு அதை ரூ.404 கோடியாக, அதாவது ரூ.59 கோடி அதிகப் படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நலிவுற்றோர் நலத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

சமுதாயத்தில் இன்று பெண்களை எதிர் நோக்கி உள்ள பிரச்சினைகள் பல. வறுமை, எழுத்தறிவின்மை, போதிய ஊட்டச்சத்தின்மை, உடல்நலக்கேடு, தாழ்வு மனப்பான்மை, சமு தாயத்தில் சரியான அந்தஸ்து மறுக்கப்பட்டு கொடுமைக்குள்ளாவது போன்றவை அவற்றில் சில. நாடு விடுதலை அடைந்தபின்பு பிரமிக்கத் தக்க வளர்ச்சியை அடைந்திருந்தாலும், பெண் களைப் பொறுத்தமட்டில் இந்த வளர்ச்சி எதிர் பார்த்த பலனை எட்டவில்லை.

1. 35 வயதுக்குக்கீழ் இறப்பவர்களில் பெரும் பாலானவர்கள் பெண்கள்தான்.

2. பிரசவத்தின்போது இறந்துபோகும் பெண் களின் எண்ணிக்கை இன்றும் அதிகமாகவே உள்ளது. 70 சதவீத பிரசவங்கள் இன்றும் வீட்டி லேயே நடைபெறுகின்றன.

3. 14 வயது வரை உள்ள பெண்களில், கிராமப்புறத்தில் 47 சதவீதத்தினரும், நகர்ப்புறத் தில் 73 சதவீதத்தினரும்தான் பள்ளி செல் கின்றனர்.



எங்கள் பயணம் தொடர்கிறது;
பணிகள்
துரிதப்படுத்தப்படுகின்றன;
எதிர்ப்பட்ட மிரட்டல்களையும்
உருட்டல்களையும் தவிடு
பொடியாக்கித் தகர்த்து
எறிந்துதான் இந்த ஆட்சி
மக்களாட்சியாக மலர்ந்திருக்கிறது!

4.13 சதவீதம் பெண் தொழிலாளர் மட்டுமே அமைப்பு ரீதியிலான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வேலை செய்யும் பெண்களின் ஆண்டு சராசரி வருமானம் - கிராமப்புறத்தில் ரூ.866; நகர்ப்புறத்தில் ரூ.1,160

இப்படி புள்ளி விவரங்கள் நம் மனதை நோகச் செய்வனவாக உள்ளன. இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு விழாவிலே குறிப்பிட்டதுபோல இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் தவறானவையாக, பெண்களுக்குச் சாதகமானவையாக இருக்கக்கூடாதா என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

மகளிருக்கு உரிய உரிமைப் பங்கை அவர்களுக்கு அளிக்க வேண்டியது இன்றைய அவசியத் தேவை ஆகும். ஒவ்வொரு பெண்மணியும் உறுதியான தன்னம்பிக்கையைப் பிரதிபலிக்க நாம் உதவ வேண்டும். பெண்களின் ஆக்கப் பூர்வமான திறமைகளை வளர்த்து உருவாக்க வேண்டும். அதன் மூலம் புதிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பணிகளில் அவர்களை ஈடுபட செய்ய வேண்டும். அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கான புதிய எண்ணங்களையும், கருத்துக்களையும் கண்டுபிடிக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் உயர்ந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

'எந்த நாடு, எந்த தேசம் மகளிரை மதிக்கவில்லையோ, அந்த நாடு அந்த தேசம் என்றும் உயர்ந்த நாடாக ஆனதில்லை. எக்காத்திலும் உயர்ந்த நாடாக ஆகப் போவதும் இல்லை. எந்தக் குடும்பத்தில் பெண் கலையுடன் வாழ்கிறாளோ, அக்குடும்பத்தின் வாழ்வுக்கு வழியுமில்லை, நம்பிக்கையும் இல்லை' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இந்தச் சூழ்நிலையில், சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே, மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்பதையும், சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழும் மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதையும் இந்த அரசின் செயல் இலக்காகக் கொள்ள வேண்டும் என்பதை டாக்டர் புரட்சித் தலைவி எங்களுக்குக் கோடிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே, சமூக நலத்துறை தன் திட்டங்களை, பெண்கள் முன்னேற்றம் என்ற பாதையில் செலுத்தி வருகின்றது.

பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், அவை முழுமையாகப் பெண்களை அடைவதற்கும், பெண்கள் தங்கள் உரிமையை உணர்ந்து நிலைநாட்டுவதற்கும் அவர்களிடம் உள்ள இயல்பான கூச்சத்தன்மையும், தாழ்வு மனப்பான்மையும் தடைகளாக உள்ளன. இந்தத் தடைகளை நீக்கி, பெண்களை எழுச்சியுறச் செய்து தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் வண்ணம் அவர்களை ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்குவதே புரட்சித் தலைவி அரசின் கொள்கையாகும்.

கடந்த ஓராண்டுக் கால இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் தமிழக அரசின் சாதனைகள் ஏராளம். இதில் சமூகநலத்துறை தன் பங்காக ஆற்றியுள்ளது குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

**பெண்கள் நலம்**

ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்பு வசதிகள்

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 20,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ரூ.15 கோடி அளவிலான புதிய திட்டம்.

பெண்களுக்குத் தொழில்பயிற்சி அளிக்கும் ரூ.10 இலட்சம் மதிப்பிலான திட்டம்.

ஆதரவற்ற பெண்களின் திருமணத்துக்கான உதவித்தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரமாக உயர்வு.





இருபதாயிரம் பெண் குழந்தைகளின் எதிர் காலப் பாதுகாப்புக்கு ரூ.4 கோடி முதலீடு.

பணிபுரியும் பெண்களின் நலனுக்காகக் கூடுதலாக விடுதிகள் துவக்கம்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மூலம் தாய்மார்களுக்குச் சுகாதார/ஊட்டச் சத்துப் பாதுகாப்பு.

கருவுற்ற/பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித் தொகை ரூ.200- விருந்து ரூ.300 ஆக உயர்வு.

சத்துமாவு, தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு.

**குழந்தைகள் நலம்**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் தர்மபுரி உட்பட மேலும் 4 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ரூ.2 கோடி மதிப்பில் புதிய பாத்திரங்கள்.

சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்குக் கூடுதல் புரதச்சத்து கிடைக்க சோயா மாவு சேர்ப்பு

ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கிப் பயிலும் குழந்தைகளுக்கு உணவுத்தொகை உயர்வு. அவர்களுக்கு நூலக வசதி, யோகா பயிற்சி.

சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கட்டடங்களைப் பழுதுபார்க்க, புதுப்பிக்க சிறப்புத் திட்டம்.

**ஊனமுற்றோர் நலம்**

ஊனமுற்றோர் நலனுக்கெனத் தனித்துறை.

வேலையில்லாத பார்வையற்றோருக்கு வழங்கும் உதவித்தொகை மேலும் ரூ.50 உயர்வு.

போலியோ நோய்த் தடுப்பு, மறுவாழ்வுத் திட்டம் தீவிரப்படுத்துதல்; தர்மபுரி மாவட்டம் முழுவதிலும் நிறைவேற்றம்.

காதுகேளாதோர் பள்ளிகளுக்குத் தொலைக் காட்சி பெட்டியும், பார்வையற்றோர் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டியும் வழங்குதல்.

பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளிக்கு ரூ.11 இலட்சம் மதிப்பில் புதிய பிரெய்லி அச்சு இயந்திரம்.

ஊனமுற்றோர்களுக்குக் கருவிகள் - உபகரணங்கள் வாங்கி அளிக்க ரூ.35 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு.

பார்வையற்றோர்களுக்கு ரூ.800 ஊதியத்தில் நாற்காலி பின்னும் வேலை.

தனியார் துறையில் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதை ஊக்குவிக்க முதலமைச்சர் பதக்கங்கள்.

சிறப்புப் பள்ளிகளில் கூடுதலாக ஆசிரியர் பதவியிடங்கள்; உணவுத் தொகை அதிகரிப்பு.

சென்னைக்கருகே முட்டுக்காட்டில் ஊனமுற்றவர்களின் நலனுக்காகத் தேசிய மையம் அமைக்க முயற்சி.

**முதியோர் நலம்**


முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.50-லிருந்து ரூ.75 ஆக உயர்வு.

வாரம் ஒருமுறை ஒரு கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் மீண்டும் துவக்கம்.

ஆதரவற்ற முதியோர் நலனுக்காக முதியோர் இல்லங்கள் தொடக்கம்.

முதியோர் ஓய்வூதியத் தொகைக்கு விண்ணப்பித்து, காத்திருப்பதைத் தவிர்க்க முன்னதாகவே 30 ஆயிரம் இடங்கள் ஒதுக்கீடு.

இதுபோக, சத்துணவு ஊழியர்களுக்கு ரூ.10, ரூ.20 என மாத ஊதிய உயர்வு. இப்படி மாண்புமிகு



முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்துள்ள திட்டங்கள் ஏராளம்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களுள் பெரும் பாலானவை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தாயுள்ளத்தில் உதித்த வையே. திங்கட்கிழமைதோறும் ஒவ்வொரு மாவட்டமாகப் பொதுமக்களைச் சந்தித்து அவர் களின் குறைதீர்க்கும் நடவடிக்கையை மேற் கொண்டு மனுநீதிச் சோழன் வரலாற்றை மீண்டும் படைத்து வருகிறார்கள், நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அப்போது தன்னிடம் மூன்று சக்கரவண்டி, சக்கர நாற்காலி போன்றவை கேட்டு வரும் ஊனமுற்றவர்களின் தேவையைக் கணித்து, ஆண்டு ஒதுக்கீட்டை ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.60 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டார்கள்.

காணார்க்கும் கண்டார்க்கும்
களிப்பருளும் களிப்பே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே!

என்ற வள்ளலார் வரிகள் இன்று நம் இதய தெய்வத்துக்கு முற்றிலும் பொருந்தும். மக்களைச் சந்திக்கும் இந்தத் திட்டத்தில் இன்னொரு புரட்சி யையும் நமது முதல்வர் இப்போது செய்திருக் கிறார்கள். ஒரு திங்கட்கிழமையன்று தன்னிடம் மனு கொடுப்பவர்களில் தகுதியுடையவர்களுக்கு அடுத்த திங்கட்கிழமையன்று தன் திருக்கரங் களாலேயே உதவிகளை அளிக்கும் வழக்கத்தை மேற்கொண்டு அதை நிறைவேற்றியும் வருகிறார்கள்.


சமூகநலம், சத்துணவுத்துறையின் அமைச் சராகப் பணியாற்றும் ஓர் அரிய வாய்ப்பை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு அளித்திருக்கிறார்கள். இதை என் வாழ் நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக நான் கருதுகிறேன்.

தமிழகத்தில் வாழும் கோடானு கோடி மக் களின் நம்பிக்கை நட்சத்திரமாக, கலங்கரை விளக்கமாக, பொற்காலச் சிற்பியாக, விளங்கும் அவரின் சிந்தனையில் உதித்த திட்டங்களை இந்தத்துறை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வருகின்றது.

தமிழக வரலாற்றின் பொன்னேட்டில் இடம் பெற்று விளங்கப்போகும் இந்த ஆட்சியில் ஏழை, எளியவர், குழந்தை, தாய்மார், ஊனமுற்றவர் ஆகியோர் பெரும் சிறப்பை, வளமான வாழ்வை எய்துவர் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த இலட்சியப் பயணத் தின் ஆண்டு நிறைவு நாளில் அவர்களின் ஆணை என்னும் அடிச்சுவட்டை ஒட்டி, சமூகநலத்துறை நடைபயிலும் என்பதைத் பெருமையோடும் உறுதியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். ●

“ கிராமக் கைவினைஞர்களுக்கு
வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில்
கதர் கிராமத் தொழில்கள்
பெருமளவில் வளர்ந்து வருகின்றன. ”



# கண்ணுக்கினிய கதர் உற்பத்தி

**மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர்**
**எஸ். நாகூர் மீரான்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை வகுத்து, வளர்ச்சியுறச் செய்து, ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் நோக்கத்துடன் 1.4.1960-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு

அ. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.
ஆ. உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
இ. மக்களிடம் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

பம்பாயில் செயல்படும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 96 கிராமத் தொழில்களில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 57 கிராமத் தொழில்களை கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையில் செயல்படுத்தி வருகிறது.

1. வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகள்
2. வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
3. வாரியத்தின் நிதி உதவி பெறும் தனி நபர் கைவினைஞர்கள்.

கதர்த் திட்டங்கள், உண்ணா எண்ணெய் சோப்புத் தொழில்கள் ஆகியவை வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகளாகச் செயல்படுகின்றன. பனைத் தொழில், கந்தசாரி வெல்லம் தயாரிக்கும் தொழில், பருப்பு, தானிய வகைத் தயாரிப்பு, தும்பு, சுண்ணாம்பு, மூங்கில், பிரம்புத் தொழில் போன்ற தொழில்கள், கூட்டுறவு அமைப்புகள், தனிநபர் கைவினைஞர் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழில் பிரிவுகள், தொழில் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் கைவினைஞர் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**கதர்**

வாரியம் 694 கிராமிய நூற்பு மையங்

களையும், 82 கதர் உற்பத்தி மையங்களையும் செயல்படுத்தி வருகிறது. கதர் தொழில்கள் மூலம் சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் மட்டும் 37,000 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கதர் தொழில்கள் மூலமாக கூடுதலாக 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் கீழ் முன்னரே 159 கதர் அங்காடிகள் இயங்கி வருகின்றன. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதிதாக 19 கதர் அங்காடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரியத்தின் கதர் பிரிவின் கீழ் 22 பட்டு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு ரூ.20.29 கோடியாக இருந்த பட்டு உற்பத்தி, தமிழக அரசின் இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்தில் ரூ.22.80 கோடிக்கு அதிகரித்துள்ளது. இது 11 சதவிகிதம் அதிகமாகும்.

பெரும்பாலும் கதர் உற்பத்தி அலகுகளும், பட்டு உற்பத்தி அலகுகளும், கிராமிய நூற்பு நிலையங்களும் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன. புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் 20 தொழிற்கூடங்களும், 6 கிடங்குகளும் ஒவ்வொன்றும் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கட்டடப் பணிகள் முடிந்தவுடன் இதுவரை வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த வாரிய அலகுகள் சொந்தக் கட்டடத்தில் செயல்படும்.

பாலியஸ்டர் நூல் இழைகளை இதுவரை கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்தும் தேசியப் பஞ்சாலைக் கழகத்திலிருந்தும் வாரியம் வாங்கி வந்தது. இப்புதிய அரசு காலத்தில் பாலியஸ்டர் - பருத்தி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பாலியஸ்டர் பட்டைகள் தயாரிக்கும் அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் மூலம் தயாரிக்கப்பட்ட பாலியஸ்டர் பட்டைகள் சுமார் 100 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**கிராமத் தொழில்கள்**

ஊரகப் பகுதிகளில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும், மனித சக்தியையும் முறையாகப் பயன்படுத்தி அப்பகுதிகளில் வறுமையை அகற்றுவதற்கு வாரியம் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதே கிராமத் தொழில் திட்டங்களின் சிறப்பாகும். இவ்வாரியத்தின் கீழ் 239 துறை அலகுகளும், 1,635 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1.6.92 அன்று, ஊனமுற்ற ஒரு சிறுவனுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கி உதவினார்.

இவற்றில் கதர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். முந்தைய ஆண்டில் ரூ.251.59 கோடியாக இருந்த உற்பத்தி இப்புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் ரூ.277.17 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 10 சதவீதம் அதிகமாகும். இதைப்போலவே கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் ரூ.280.77 கோடியிலிருந்து இப்புதிய அரசின் காலத்தில் ரூ.310.14 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 11 சதவீதம் அதிகமாகும்.

கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காகவே 9 கிராமிய தொழிற் பேட்டைகள் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விற்பனையை மேலும் அதிகரிக்க இப்புதிய அரசின் காலத்தில் திருவண்ணாமலையில் ஒரு புதிய கிராமத் தொழில் பொருட்



களை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரியம், சென்னை குறளகத்தில் மிகப் பெரிய கதர் அங்காடியை நடத்தி வருகிறது. இக்கதர் அங்காடியில் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் ஆண்டு விற்பனை ரூ.12.90 கோடியைத் தாண்டியுள்ளது. கதர், கிராமத் தொழில் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், இல்லத் தேவைக்கான பொருட்கள் இக்கதர் அங்காடியில் விற்பனையாகின்றன. விற்பனையை மேலும் அதிகரித்திடவும், சென்னை நகர் முழுவதும் பொது மக்களிடம் விளம்பரம் செய்யும் நோக்கத்துடன் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஒரு நடமாடும் ஊர்தி வாங்கப்பட்டு விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**பனைத் தொழில்**

இந்தியாவில் தமிழ்நாட்டில் பனை மரங்கள் அதிகம் உள்ளன. ஏறத்தாழ 5 கோடி பனை மரங்கள் தமிகத்தில் இருக்கின்றன. இதன்மூலம் அதிக அளவில் பனைத் தொழிலில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆரம் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உண்ணும் பொருட்களாகிய பதனீர், பனஞ் சர்க்கரை, பனங் கற்கண்டு, பனைவெல்லம், பனை மிட்டாய் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களாகிய பனை நார், தூரிகை, பனை ஓலைப் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

பனைத் தொழில் மூலம் அதிக அளிவல் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பது சிறப்பான ஒன்றாகும். ஒரு ஆண்டுக்குச் சுமார் ரூ.1.55 கோடிக்குப் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பதநீர் இறக்கும் காலங்களில் கிராமியக் கைவினைஞர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பும், பதநீர் இறக்காத காலங்களில் முறையான அளவில் அதிகப்படியான வேலைவாய்ப்பும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், விபத்துக்குள்ளாகி மரணமடைய நேர்ந்தால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, இத்தொழிலை மேலும் வளர்ச்சியடையச் செய்திட வேண்டி, பனைத் தொழிலுக்கு என ஒரு வாரியம் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, 20.4.92-இல் தமிழகச் சட்டப் பேரவையிலும் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

**சோப்புத் தொழில்**

வாரியம் வழக்கமாக சலவைச் சோப்பும், குளியல் சோப்பும் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. வாரியத்தில் டிட்டர்ஜெண்ட் சோப்பும், உற்பத்தி செய்யப்படுகிறது; மேலும், இதற்காக புதுக்கோட்டை, மூலங்குடி (நாகப்பட்டினம்), பண்ருட்டி (தென்னார்க்காடு), பல்லடம் (கோவை) கொடுங்கையூர், காங்கேயம் (பெரியார்) முதலிய 6 இடங்களில் டிட்டர்ஜெண்ட் சோப்பு அலகுகள் இப்புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோப்பு உற்பத்தி செய்ய ஆசிட் சிலரி ஒரு அத்தியாவசியமான இரசாயனப் பொருளாகும். இந்த இரசாயனப் பொருள் உற்பத்தி செய்யும் 2 அலகுகள் தஞ்சை நெடுந்தெருவிலும், கோவை மாவட்டம் நல்லூரிலும் இந்தப் புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் பின்தங்கிய ஏழை மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில் தோல் தொழிலாகும். இத்தொழிலில் ஏழ்மை நிலையில் உள்ள காலணித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற தோல் தைக்கும்

தையல் இயந்திரத்துடன், காலணி தொழிற் கூடம் ஒவ்வொருவருக்கும் வழங்கும் சிறப்பான திட்டத்தை இவ் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் மூலம் 1981-82-ஆம் ஆண்டு முதல் 7,250 தொழிற் கூடங்கள் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. ஒரு தொழிற் கூடத்தின் மதிப்பு தையல் இயந்திரத்துடன் சுமார் ரூ.10,000 ஆகும். இப்புதிய அரசு இவ்வாண்டில் மட்டும் ஏழை காலணித் தொழிலாளர் களுக்கு 2000 தொழிற் கூடங்கள் வழங் கிட ரூ.200 இலட்சம் அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**மட்பாண்ட தொழில்**

இத்தொழிலின் கீழ், விருத்தாச் சலத்தில் இதற்கு முன் செயலற்றுப் போயிருந்த ஒரு மட்பாண்ட அலகை வாரியம் மேற்கொண்டு வழவழப்பான பீங்கான் மட்பாண்டங்கள் தயாரிப் பதன் மூலம் இந்த புதிய அரசின் காலத்தில் இவ்வலகு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலகில் உற்பத்தியாகும் பொருட்கள் சென்னை கதர் அங்காடியில் விற்பனை யாகின்றன.

**செயற்கை இரத்தினக் கற்கள் பட்டைத் தீட்டும் தொழில்**

செயற்கை இரத்தினக் கற்களுக்குப் பட்டைத் தீட்டும் தொழில் வாரியம் எடுத்துக்கொண்டுள்ள ஒரு புதிய தொழிலாகும். இத்தொழிலில் பயிற்சி பெற்றுள்ள தொழிலாளர்களை உறுப் பினர்களாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவற்றின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், அல்லித் துறை, மனச்சநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் 3 கூட்டுறவுச் சங்கங்கள் இப் புதிய அரசின் காலத்தில் தொடங்கப் பட்டுள்ளன.

**மின்னணுத் தொழில்**

மின்னணுத் தொழிலும் இவ்வாரியத் தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு நவீன தொழிலாகும். இப்புதிய அரசின் காலத் தில் 217 உறுப்பினர்களைக் கொண்டு (பெரும்பாலும் பெண்கள்) 5 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு இத்தொழில் மூலம் அளிக்கப்பட உள்ளது.

**கூட்டுறவு**

கிராமப்புறங்களில் பல்வேறு தொழில் களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பின்கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த இப்புதிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்கள், மனித சக்தி, போக்குவரத்து வசதிகள் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறான கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வாரியாக அமைக்கப்படுகின் றன. முன்னரே செயல்பட்டு வரும் 1,579 கூட்டுறவுச் சங்கங்களுடன் இந்த அரசின் காலத்தில் 56 கூட்டுறவுச் சங் கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தச்சு கொல்லு, ஸ்கேன் விஷன், மின் னணு செங்கல், சுண்ணாம்பு, மட் பாண்டம், பாய் முடைதல், புளி பக்குவப் படுத்துதல், பழப்பக்குவப்படுத்துதல், செயற்கை வைரப்பட்டை தீட்டுதல் அவற்றை வழவழப்பாக்குதல், தோல் பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் இவ்வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

இப்புதிய அரசு 1,090 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பட்டை விழு துகள் வழங்கிடவும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலாளர்கள் பயன் பெறவும், குறளகம் கதர் அங்காடியில் கம்ப்யூட்டர் பணப்பதிவு செய்யும் இயந் திரம் வாங்கவும் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.17.43 இலட்சம் வழங்கியுள்ளது.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரன்முறைகளுக்குட்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், பல்வேறு தொழில் செய்யும் தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறது. இதுவரை பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 67,170 கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 5,000 கைவினைஞர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் பல்வேறு தொழில்களின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாரியத்தின் மூலம் சென்ற ஆண்டுவரை மொத்தம் 9.99 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு வரை 10.83 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் சுமார் 83,100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பான ஒன்றாகும்.

மேற்கண்ட செயல் திட்டங்கள் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற இப்புதிய அரசின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தனது பெரும் பங்கை ஆற்றி வருகிறது. ●


**தமிழரசு**

**சந்தா விவரம்**

**தமிழ்** .......... ஓராண்டு = ரூ.24

அரையாண்டு = ரூ.12

**ஆங்கிலம்** ... ஓராண்டு = ரூ. 12

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு :**

உதவி இயக்குநர் : தமிழரசு,

(விற்பனை மற்றும் விநியோகம்)

அரசினர் தோட்டம், சென்னை-600 002.

—12-ஆம் பக்கத் தொடர்ச்சி

**தீயணைப்புத்துறை சேமநலநிதிக்கான அரசு மானியம்**

இவ்வாண்டு முதல் இந்நிதிக்கு அரசு வழங்கும் மானியம் ரூ.60,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**டெரிகாட்டன் சீருடை வழங்குதல்**

உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவிக்குக் கீழுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் கடந்த ஆண்டு வரை ஒரு செட் டெரி காட்டன் சீருடையும், ஒரு செட் பருத்தி நூலாலான சீருடையும் வழங்கப்பட்டன. இனிமேல் இவர்களுக்கு இரண்டு செட் டெரிகாட்டன் சீருடை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி உயர்த்துதல்**

நிலையத் தீயணைப்பு அலுவலருக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு அளிக்கப் படும் உபரிப்பணிப்படி மற்றும் உணவுப் படி ஆகியவற்றை உயர்த்தி அரசு ஆணை யிட்டுள்ளது.

**இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரி விதிப்பு விலக்கு**

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக் கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 50 சிசி திறன் கொண்ட இரு சக்கர வாகனங் களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக் கப்படும் என்று தெரிவித்தது.

அவ்வாறே இவ்வரசு பதவி ஏற்றபின் 50 சிசி திறனுள்ள இருசக்கரவாகனங் களுக்கு வரி விலக்களித்துள்ளது.

மேலும் ஒப்பந்த ஊர்திகளான ஆம்னி பேருந்து மற்றும் சுற்றுலா பேருந்துகளுக்கு ஒரு காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கான மோட்டார் வாகன வரி ரூ.2,000- லிருந்து ரூ.500 ஆக 1.4.90 முதல் குறைக்கப்பட்டது. அவ்வாறே மாற்றுப் பேருந்து ரிசர்வ் பேருந்துகளுக்கான வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கான வரி விகிதத்தில் 4-இல் மூன்று பங்கு மட்டும் செலுத்த வரி விகிதம் குறைக்கப் பட்டது. (முன்பு இவ்வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கு ஒத்த அள விலேயே இருந்தது.)

லாரி உரிமையாளர்கள் சங்கத்திட மிருந்து, பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், எடை ஏற்றப்பட்ட நிலை யில் 13,000 கிலோவிலிருந்து 15,000 கிலோ கிராம் வரையுள்ள சரக்கு வாகனங் களின் வரி விகிதம் ரூ.2,490-லிருந்து ரூ.2,190 ஆக 1.10.91 முதல் குறைக் கப்பட்டது.

**மோட்டார் வாகன விபத்துக்களுக்கான நிவாரணத் தொகை அதிகரித்தல்**

முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி 1978-79 முதல் ஏற்படுத்தப்பட்டு, விபத்தில் உயிரழந்தோர் மற்றும் காய முற்றோருடைய உறவினருக்கு விரைவில் நிவாரணத் தொகை அளித்து வருகிறது. 1991-92-இல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அறிவித்தவாறு கருணைத் தொகை வீதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

**கணிப்பொறிமயமாக்குதல்**

இவ்வரசு, சென்னை மாநகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணிப்பொறிகளை (Computer) நிறுவுவதற்கு 13.50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

## ஏற்றுமதி ஏறுமுகம்

**சுறுசுறுப்பு பானம் தேனீரைத் தந்திடும் தேயிலையின் ஏற்றுமதியும் விறுவிறுப்பாகவே உள்ளது. கடந்த நிதியாண்டில் (1991-92) ரூ.1,157 கோடி மதிப்புள்ள 210.39 மில்லியன் கிலோ தேயிலை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆகியுள்ளது. அதற்கு முந்தைய நிதியாண்டில் (1990-91) ரூ.1,071 கோடி மதிப்புள்ள 199.17 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.**




**★ மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது.**

பணியைக் குறித்த நேரத்தில் எவ்விதக் குறைபாடின்றி முழுமையாக விரைவாக ஆற்ற நினைக்கும் இந்த யுகத்தில் கணிப் பொறியின் பயன்பாடு பெரிதும் உதவும். கணிப்பொறியின் உதவியோடு போக்கு வரத்துத் துறை, பொதுமக்களுக்கு உரிய வாறு, பயனுள்ள முறையில் சிறந்த வேலை செய்ய முடியும்.

**கவுண்ட்டர் முறை ஏற்படுத்தல்**
**(Counter System)**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களிலிருந்து தரகர்களை நீக்கவும், பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், போக்குவரத்துத் துறை, அனைத்து அலு வலகங்களிலும் கவுண்ட்டர் முறையைக் கொண்டு வந்துள்ளது.

**சென்னை மாநகரில் 4 போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தல்**

பொதுமக்கள் சென்னை மாநகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்குச் செல்ல நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் ஏற்படும் இடர்ப்பாட்டைக் களைவதற்காக அரசு, சென்னை மாநகரில், பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப்பேட்டை மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய நான்கு போக்குவரத்துப் பிரிவகளைத் தொடங்கி யுள்ளது.

**எல்லைப்புறப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல்**

பிற மாநிலங்களிலிருந்து வரும் வண்டிகள் மோட்டார் வண்டி வரி ஏய்ப்புச் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, பின்வரும் குறிப்பட்ட சில பகுதிகளில் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

கோபாலபுரம் (கோயம்புத்தூர் மாவட்டம்), இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்), பர்கூர் (பெரியார் மாவட்டம்)

இச்சோதனைச் சாவடிகள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன.

**மாசுக் கட்டுப்பாடு**

மாசுக் கட்டுப்பாடு குறித்து தற்போது அதிக அளவு கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. தற்போது காற்றுத்தூய்மை கெடுவதற்கு மோட்டார் வண்டிகளே பெரிதும் காரணமாக விளங்குகின்றன. இவ்வாறு மாசுபடுவதைக் கட்டுப்படுத்த மோட்டார் வண்டிகள் புகை, ஆவி முதலியவற்றை எந்த அளவுக்குத்தான் வெளியேற்றலாம் என்பது குறித்து மத்திய அரசு சட்டப்படி வரையறுத்துள்ளது. வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேல், புகை முதலியவற்றை வெளியேற்றும் வண்டிகளின் உரிமையாளர்கள், அவ் வண்டிகளிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சோதனைக்காக வண்டிகளை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்துவதில் முதற்கட்டமாகச் சென்னையில் உள்ள சரக்கு வண்டிகள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தனது பணியாளர்கள் மற்றும் கருவிகள் கொண்டு இப்பணியைச் செயல்படுத்து மாறு ஆணையிடப்பட்டுள்ளது. இவ் வாரியம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் தவிர பிற இடங்களில் சோதனைகளை மேற்கொள்ளாது.

இத்திட்டம் சென்னையில் 19.2.1992 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நாட்டுடைமையாக்கல்**

பேருந்துகளை முழுமையாகத் தேசிய மயமாக்குவது என்பது முந்தைய அரசின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கை யின்படி, தனியார் உரிமையாளர்கள் பேருந்துகளைத் தொடர்ந்து இயக்குவது இயலாது. தற்போதைய அரசு, பொது மக்களின் நலன் கருதி, தனிப்பட்ட உரிமையாளர்கள் தற்போது இயக்கி வருகின்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே அவர்கள் பேருந்து களைத் தொடர்ந்து இயக்கலாம் என முடிவு செய்துள்ளது. தற்போதைய அரசின் கொள்கைக்கு இணங்க, ஒரு சட்டமுன்வடிவு அதாவது தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (தனி விதித் துறைகள்) சட்டம் 1992 சட்டமன்றப்பேர வையில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்ப நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேற் சொன்ன சட்ட முன்வடிவானது குறைந்த எண்ணிக்கையில் பேருந்துகளைத் தற் போது இயக்கிவரும் தனியார் உரிமை யாளர்கள் தொடர்ந்து ஒப்புதலளிக்கப்பட்ட வழித்தடத்தில் தங்கள் பேருந்துகளை ஓட்டுவதற்குப் பாதுகாப்பு அளிக்கும்.

**முன் கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்தல் முறை**

ஆட்டோ ஓட்டுநர்கள் மீட்டர் கட்டணத் திற்கு மேல் கூடுதல் கட்டணம் கேட்பது, குறிப்பிட்ட இடங்களுக்கு வர மறுப்பது, மீட்டர் போடாமலேயே ஓட்டுதல் போன்ற பல புகார்கள் பொதுமக்களிட மிருந்து பெறப்பட்டுள்ளன.

எனவே, முன்கூட்டியே கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்யும் முறையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை செய்து முதற்கட்டமாகச் சென்னையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திலும், எழும்பூர் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும், மதுரையில் அண்ணா மற்றும் பெரியார் பேருந்து நிலையங்களிலும் மற்றும் இரயில் நிலையத்திலும் அமலபடுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ் விடங்களிலிருந்து ஆட்டோக்கள் நகரின் பல பகுதிகளுக்குக் குறிப்பிட்ட கட்டண வீதத்தில் விடப்படும். கிலோமீட்டருக்கு ரூ.3 என்ற வீதத்தில் கட்டணம் நிர்ணயிக்கப்படும். இம்முறையினால், பொதுமக்களுக்கு இரயில் மற்றும் பஸ் நிலையங்களில் ஆட்டோ அமர்த்துவதில் உள்ள சிரமங்கள் தவிர்க்கப்படும். இம் முறை 1.6.1992 முதல் மதுரையில் அமலுக்கு வருகிறது. சென்னையில் விரைவில் அமலுக்கு வரும்.

**1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்**

1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் புதிய போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள், புதிய கட்டடங்கள் ஆகியன ஏற்படுத்த அரசு ரூ.76.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



**மதியை அறியாதவனும், விதியை அறியாதவனும், வாழ்க்கை நிலையை அறியாதவனும், அறம் செய்யாதவனும், மனத்தை அடக்காதவனும், பெரியோரை வணங்காதவனும் ஆன்மீக நெறியில் முன்னேற முடியாது.**

**- அண்ணல் காந்தியடிகள்.**

# வண்ணக் கைத்தறிகளுக்குப் பெருகிடும் வரவேற்பு!

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
**இ. மதுசூதனன்**



> "கண்ணைக் கவரும் வண்ணக் கைத்தறித் துணிகளுக்கு இன்று உலகெங்கும் பெரும் வரவேற்பு உள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு பல உதவிகளையும், சலுகைகளையும் அளித்து வருகிறது."

**கு**றைந்த வருவாய் ஈட்டும் கைத்தறியாளர்களுக்கு நிறைந்த வருவாய் அளிக்கும் பொருட்டு கைத்தறியை விசைத்தறியாக மாற்றும் பத்தாண்டுத் திட்டம்.

- கைத்தறியிலேயே உற்பத்தியைப் பெருக்கவும், உயர்ரகத் துணிவகை உற்பத்தி செய்யவும், நெசவாளர் வருவாயினை அதிகரிக்கவும், கைத்தறிகளை நவீனப்படுத்தும் ஐந்தாண்டுத் திட்டம்.
- கூட்டுறவில் உள்ள நெசவாளர் இறந்து போனால் வழங்கப்படும் காப்பீட்டுக் கருணைத் தொகை ரூ.12,000-லிருந்து ரூ.17,000 ஆக உயர்த்தியது.
- இறந்து போன கூட்டுறவுக் கைத்தறியாளர் குடும்பத்திற்கு மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு நெசவாளர் குடும்ப ஓய்வூதியம்.
- கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.25,000 மதிப்பீட்டில் தறிக்கூடத்துடன் கூடிய 2,000 குடியிருப்புகள் கட்டுதல்.
- டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,000 முதல் ரூ.2,000 வரை 16 மாணவர்களுக்கு நிதியுதவி நல்கி கல்வி முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்.
- அடிப்படை வசதி ஏதுமின்றி சமூக ரீதியில் பின்னடைந்துள்ள 'விளாகம்' நெசவாளர் கிராமத்தினைத் தத்தெடுத்து அங்குள்ள நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்விற்கென ரூ.25 இலட்சம் செலவு மேற்கொள்ளல்.
- ரூ.42.00 கோடி செலவில் 120 இலட்சம் கிராமப்புற நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக விநியோகித்தல்.
- கைத்தறித் துணிகள் விற்பனையினை மேம்படுத்த காஞ்சிபுரத்தில் பட்டு ரகங்களுக்கெனவும், ஈரோட்டில் பருத்தித் துணி இரகங்களுக்கும் பிரத்தியேகமாகப் பல்மாடி விற்பனை வளாகங்கள் அமைத்தல்.

### கைத்தறி நெசவாளர்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாட்டடைய தமிழக அரசின் பொன்னான திட்டங்கள்

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானது ஆடை. பன்னெடுங்காலமாகக் கைத்தறி மக்களின் ஆடைத் தேவையினைப்பூர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறது. தொழில் நுணுக்கமும், கலைவண்ணமும் வழிவழியாக வந்த கைத்திறனும் ஒருங்கிணைந்த இத்தொழில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும், குக்கிராமங்களிலும் வாழ்ந்து வரும் கணிசமான ஏழை மக்களுக்குப் பிழைப்பதற்கு வழிவகுக்கின்றது என்பதனையும், இவர்களில் பெரும்பாலோர் இன்னும் பழைய தறிகளிலேயே விலை மதிப்பு குறைவான துணிகளை உற்பத்தி செய்வதால், தங்களின் அன்றாட மற்றும் அத்தியாவசியத் தேவைக்குக்கூட ஊதியம் ஈட்ட முடியாத நிலையில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிப்பதனை ஏழை மற்றும் நலிவடைந்த மக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது.

இவ்வாறு நலவுற்று இருக்கும் இலட்சக் கணக்கான ஏழை நெசவாளர்களின் துயரினைத்துடைக்க புரட்சித் தலைவியின் ஆட்சியில் வாழ்க்கைத் தேவைக்கேற்ப வருவாய் கிடைக்க வழிகோலும் உயரிய நோக்குடன், மாறிவரும் விஞ்ஞான யுகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழில்நுட்ப யுக்திகளை இத்தொழிலிலும் புகுத்தி, அதன் மூலம் உற்பத்தியினைப் பெருக்கும் முகத்தான் இச்சாமான்ய அரசு 37,500 கைத்தறிகளை 75,000 விசைத்தறிகளாக மாற்றும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினைப் படிப்படியாக வரும் பத்து ஆண்டுகளின் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துகின்றது.

இத்திட்டத்தின் மூலமாக 1991-92 மற்றும் 1992-93-இல் முறையே 500 மற்றும் 2,500 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள், பொருளாதாரத்திலும் சமூகரீதியாகவும் மேம்பாட்டினை அடைவர்.

நெடுங்காலமாகவே உபயோகித்து வரும் பழமையான கைத்தறிகளில் சிரமப்பட்டு உழைத்தும், போதிய உற்பத்தியின்மையால் குறைந்த வருவாயினையே கூலியாகப் பெற்று வாழ்க்கையின் முன்னேற்ற

மின்றி இன்னலுறும் ஏழை நெசவாளர்களின் துயர்துடைக்க புரட்சி செல்வியின் தலைமையிலான தமிழக அரசு அவர்களின் ஊதிய உயர்வினுக்காகவே வரும் ஐந்தாண்டுகளில் ரூ.42.31 கோடி செலவில் 50,000 தொன்மையான கைத்தறிகள் தற்கால உற்பத்தித்தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்படவுள்ளன. இதன் வாயிலாக 50,000 நெசவாளர் குடும்பங்கள் செழிப்படைய உள்ளன.

வாழ்க்கை முழுவதும் மக்களின் மானம் காக்க ஆடை நெய்து, வறுமையில் உழன்று வாழும் ஏழை நெசவாளர் இறப்பின் அவர்களது குடும்பத்தினர் பிழைக்க வழியின்றி அல்லல்படும் அவல நிலையை மாற்றி அக்குடும்பத்தின் துயர் துடைக்கவும், அக்குடும்ப நலம் பேணவும் எளியோர்களின் நிலமையினை நன்குணர்ந்த இவ்வரசு அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில் முதன் முதலாக ஏன் இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத ஒரு முன்னோடியாக நெசவாளர்கள் ஒய்வூதிய திட்டத்தினை செயல்படுத்துகின்றது. இதன்மூலம் ஓர் நெசவாளர் இறந்தால் அன்னாரது குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மாதந்தோறும் ரூ.250 ஒய்வூதியமாக அரசினால் வழங்கப்படும். அத்துடனின்றி இயற்கை எய்திடும் நெசவாளர்கள் குடும்பத்திற்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த கருணைத்தொகையாக ரூ.12,000 கூட தற்போது கணிசமாக உயர்த்தப்பட்டு ரூ.17,000-மாக வழங்கப்படுகிறது.

இத்தகைய புரட்சிகரமான திட்டங்கள் மூலமாக வருவாயினை ஈட்டும் குடும்பத் தலைவனை இழக்க நேரிடும் நெசவாளர் குடும்பங்கள் பொருளாதாரச்சிக்கல்களில் சிக்கி தவிப்பது சீரழிவது தடுக்கப்பட்டு அவர்களது குடும்பத்தினரும் சமூகரீதியில் நல்ல நிலையில் வாழ்ந்து வளமடைய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இத்தகைய சீரிய திட்டங்களை நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென்று ஆய்ந்தறிந்து செயல்படுத்தியுள்ளார்.

செய்யும் தொழிலனைத்தும் சீர் தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்பது சான்றோர் வாக்கு. இத்தகைய சிறப்பான தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களில் பெரும்பான்மையினர் வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும் போதிய இடவசதியற்ற இல்லங்களில் வாழ்ந்துவரும் நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள், ஒவ்வொரு வீடும் ரூ.25,000 மதிப்பீட்டில் சுமார் 2,000 குடியிருப்புகள்



இவ்வாண்டு தமிழக அரசினால் கட்டப்படவுள்ளது. இதனால் 2,000 நெசவாளர்கள் குடியிருப்பு வீடுகள் பெற்று நலமடைவார்கள்.

நெசவாளர்களின் பிள்ளைகளும் பிறரைப்போல நன்கு கல்வி பயின்றும், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் தொடர்ந்து படிக்க பொருளுதவி நல்குவதற்கென்றே மறைந்த பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட 'டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை'. இதன் மூலமாக, கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கென ஆண்டுதோறும் ரூ.1,000-லிருந்து ரூ.2,000 வரை 16 மாணவர்களுக்குக்கல்வி முன்னேற்றத்திற்கென நிதியுதவி வழங்கப்படுகிறது.

பொதுவாக நெசவாளர்கள் கிராமப் பகுதிகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். நெசவாளர்கள் நிறைந்துவாழும் பல கிராமங்களில் இன்றும் எத்தகைய சமூக முன்னேற்றம் எய்தாத நிலை உள்ளது. அதாவது இக்கிராமங்கள் சமூக ரீதியில் மிகவும் பின்தங்கி, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் தினம் கடினமாக உழைக்கும் இம்மக்கள் பல வகை நோயால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இந்த நிலைமாற, நெசவாளர்கள் நிறைந்துள்ள கிராமங்களைச் சுகாதார மற்றும் சமூக அமைப்பில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் முதற்படியாக புரட்சித் தலைவியின் தலைமையில் ஆன இந்த அரசு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள 'விளாகம்' என்ற கிராமத்தினைத் தேர்ந்தெடுத்துள்ளது. ரூ.25.00 இலட்சம் செலவில் அக்கிராமத்தினை அனைத்து நிலையிலும் மேம்படவைக்கவும் குறிப்பாக நெசவாளர்களின் நலன் பேணவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவும் இந்தியாவிலேயே முன்மாதிரியாக நமது மாநிலத்தின் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதால் நமது முதல்வர் நெசவாளர்களின் நலனில் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

மக்களின் அத்தியாவசியத் தேவையில் ஒன்று உடை. பெரும்பான்மையான ஏழை மக்கள் பண்டிகைக் காலங்களில் கூட தங்களுக்கெனப் புத்தாடைகள் வாங்கப் போதிய வசதியின்றி வறுமையில் வாழும் நிலையை நன்குணர்ந்த ஏழைகளுக்கான இவ்வரசு, ரூ.42 கோடி செலவில் 120 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக வழங்கி அவர்களுக்கு உதவியது மட்டுமின்றி, இத்திட்டத்தின் மூலமாக, தமிழகம் முழுவதுமுள்ள நெசவாளர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறவும் வழிவகுத்துள்ளது.

பெண்ணுரிமைக்கெனப் பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தாய்க்குலம் என்று அழைத்துப் போற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றல் புதுமைப் பெண், புத்துலகச் சிற்பி புரட்சித்தலைவியின் ஆட்சியில் முற்றிலும் பெண்களுக்கெனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை பர்கூரில் நிறுவப்பட உள்ளது. இதன்மூலமாக, பல நூறு பெண்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பல மூலைமுடுக்குகளில் உள்ள நெசவாளர்களின் கைத்திறனால் தயாராகும் பலவேறு நேர்த்திமிகு கைத்தறி துணிவகைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே இடத்தில், பலரும் அவைகளைப் பார்த்து தேர்ந்தெடுத்து வாங்க வழிவகைகாணும் முகத்தான் முதல் முதலாகப் பட்டுத் துணிவகைகளுக்கெனக் காஞ்சிபுரத்திலும் பருத்தித் துணிவகைகளுக்கென ஈரோட்டிலும், ரூ.9 கோடி செலவில் விற்பனை வளாகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியாகும் துணிவகைகளில் விரைந்து விற்பதுடன் கைத்தறித் துணிவகைகளுக்கு மக்களிடையே உள்ள நன்மதிப்பும் உயரம் என்பது திண்ணம்.




# பூரண மதுவிலக்கு

**குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்து பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு செயலாற்றி வருகின்றது.**

**பூ**ரண மதுவிலக்கே, தற்போதைய அரசின் கொள்கையாகும். மது, தமிழகத்தில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக் கடைகளை மூடுவதால் அரசுக்கு ரூபாய் 391 கோடி ஒரு முழு ஆண்டிற்கு ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் முதல் நடவடிக்கையாக 16.7.'91-ஆம் நாள் மலிவுவிலை மதுக்கடைகளை மூடினார்.

நாட்டு மதுக்கடைகளை நடத்துவதில் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது அரசு.

மதுவிலக்குக் காரணமாக ஏற்படும் நற்பயன்கள் குறித்தும், குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்தும் பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்று 11.9.91- ஆம் நாள் அமைக்கப்பட்டது. இக் குழுவின் முதற் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் 22.10.91 அன்று சென்னையில் கூடியது. கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

நாடகங்கள் முதலியவற்றின் மூலமாக மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரங்களைச் செய்வதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மதுவின் தீமைகளை விளக்கும் முழுநீள பிரச்சாரப் படத்தை அரசே எடுப்பதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பிரச்சார நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் - செயலரான திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'வெளிச்சம்' என்ற நாடகத்தை அவர் தயாரிப்பதற்கும், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ரூபாய் 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது, 'வெளிச்சம்' நாடகம் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது.


திரைப்படம் தயாரிப்பதைப் பொறுத்தவரை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 85 இலட்சம், குடியின் கொடுமைகளை விளக்கும் பிரச்சாரப் படமான 'நீங்க நல்லா இருக்கணும்' தயாரிப்பதற்காக திருவாளர்கள் ஜீ.வி. பிலிம்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் தொடக்க விழா 29.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் படம் 2.10.92 காந்தி ஜெயந்தி அன்று வெளியிடப்படவுள்ளது.

# பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் சாதனைகள்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் வாழ்க்கைத் தரம் உயர அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதை விளக்குகிறது இக்கட்டுரை.


மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்

**டி. ஜெயக்குமார்**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோரின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1991-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 556 இலட்சமாகும். இனவாரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| | | |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் | ... | 67.15% |
| தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் | ... | 19.53% |
| இதர இனங்கள் | ... | 13.31% |

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்குத் தரமான கல்வி வசதியளிக்கும் பொருட்டுப் பள்ளிகள், மாணவர் விடுதிகள், படிப்புதவித் தொகைகள், சம்பளம், சிறப்புப் பயிற்சி முதலிய பல வழிகளில் அரசு உதவி வருகிறது. 57,194 மாணவர்களின் நன்மைக்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையானது 285 பள்ளிகளை நடத்தி வருகிறது.

“பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்கும் பொருட்டு இத்துறையானது 771 மாணவர் விடுதிகளை நடத்தி வருகிறது. இவற்றில் 43,538 மாணவர்கள் உள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவர் விடுதிகளில் இல்லாத இவ்வினத்தைச் சேர்ந்த பிற மாணவர்களுக்கும் அரசு படிப்புதவித் தொகை களை வழங்கி வருகிறது. இதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க் குள் இருக்க வேண்டும். பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகங் களுக்கான கட்டணம் ஆகியவை படிப்புதவித் தொகையில் அடங்கும். 9-ஆம் வகுப்பிலிருந்து இந்த உதவி மாணவர்களுக்குக் கிடைக்கிறது. படிப்புதவித் திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 3,68,642 மாணவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 2,28,431 மாணவர்களும் பயன் பெறுகின்றனர்.

### 1991-92-ஆம் ஆண்டுச் சாதனைகள்

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளின் பராமரிப்பை ஒழுங்குபடுத்தும் வகையில், ஒவ் வொரு விடுதிக்கும் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தலைமையாசிரி யரைத் தலைவராகவும், நான்கு பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் (இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு பெற்றோர் பிரதி நிதிகள்) விடுதியின் காப்பாளர் ஆகியோரை

அடுத்த இதழிலும்...

தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகள் பற்றிய — இன்னும் சில துறைகள் குறித்த கட்டுரைகள் 'தமிழரசு' அடுத்த இதழிலும் (16.7.'92) தொடரும்...

உறுப்பினர்களாகக் கொண்டும் இக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

பணி சார்ந்த பயிற்சிகளில் சிறப்புப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்குப் பயிற்சியளிப் பதற்காக அரசு உதவி செய்கின்றது. 450 மாண வர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும், 125 மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியும் மற்றும் 50 மாணவர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் ரூ.8.97 இலட்சம் செலவில் அளிக்கப் பட்டுள்ளது. பணி சார்ந்த பயிற்சிகளின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 1992-93-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 450-லிருந்து 1,000 ஆகவும், கணினிப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 125-லிருந்து 500 ஆகவும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெறுவோரின் எண் ணிக்கை 50-லிருந்து 500 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.66.36 இலட்சம் செலவிட உத்தேசிக் கப்பட்டுள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களில் சில பிரி வினர் சில சிறப்புத் திட்டங்களின் கீழ் பயனடை கின்றனர். ரூ.6,400-க்குள் ஆண்டு வருமான முள்ள அந்தந்தத் தொழில் செய்பவருக்கு 4,000 சலவைப் பெட்டிகளும், 500 முடி திருத்தும் கருவிகளும் மற்றும் 500 கல்லுடைக்கும் கருவி களும் இலவசமாக வழங்கப்பட்டன. முடி திருத் தகம், தேய்ப்பகம் மற்றும் நடமாடும் தேய்ப்பகம் அமைக்கக் கோரும் சலவையாளர்களுக்கு ரூ.2,000-லிருந்து ரூ.5,000 வரை இவ்வரசு நிதி யுதவியளித்து வருகின்றது.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1992-93-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவியருக்கென்றே ரூ.35.50 இலட்சம் செலவில் 25 புதிய விடுதிகள் திறக்கப் பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.65.85 இலட்சம் செலவில் 7 விடுதிக்குக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலையை உயர்த்துவதற்காக இதுபோன்ற பல திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகின்றது.

**சென்னையில் 3.6.92 அன்று நடைபெற்ற 'உகாதி' தெலுங்குப் புத்தாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.**





வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
விஜய்
UREA-N46%
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
HTA 7343



## சீரிய வண்ணம் செயல்படும்

# செய்தி - மக்கள் தொடர்புத் துறை

**செய்தி-மக்கள் தொடர்புத் துறையானது, புதிய அரசு பொறுப்பேற்றபின் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளின் பட்டியலாக விளங்குகிறது இந்தக் கட்டுரை:**

**தமிழ்நாட்டில் புதிய அரசு மலர்ந்த பின் அரசுத் துறைகள் அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டு வருவதை நாடறியும்.**

**அதிலும் குறிப்பாக-மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான நிர்வகிப்பில் உள்ள செய்தி- மக்கள் தொடர்புத் துறையானது சீரிய வண்ணம் செயல் பட்டு வருகிறது என்றால் உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.**

**செய்தி-மக்கள் தொடர்புத் துறை சிறப்புற ஆற்றிவரும் பணிகள் பற்றி எல்லோர்க்கும் தெரிவித்து எமது கடமையாகும்.**

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை மாற்றி அமைத்தல்**

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை ரூ.1.25 கோடி செலவில் எழில்மிக்கதாக மாற்றி அமைப்பது எனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணி தமிழ்நாடு மாநில கட்டுமானப் பணிக்கழகத்திடம் (Tamil Nadu State Construction Corporation) ஒப்படைக்கப்பட்டு 1.1.1992 அன்று இதற்கான முதல்கட்டப் பணி துவங்கியது.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தைச் சட்டப் பேரவையில் திறந்து வைத்தல்**

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைச் சட்டப் பேரவையில் 31.1.92 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். இத்திருவுருவப் படம் ஒன்றரை மாதக் காலத்தில் வண்ணமுற வரைந்து முடித்தது ஆகும்.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுதல்.**

முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாளை 1992 முதல், ஒவ்வொரு ஜனவரித் திங்கள் 17-ஆம் நாளன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கொண்டாடுவது என அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி 17.1.1992 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளை மாநில அளவில் சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





### மகாகவி பாரதியின் இல்லத்தைப் புதுப்பித்தல்

திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பிக்க அரசு ரூ.5 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

### வள்ளுவர் கோட்டத்திற்குக் குளிர் சாதன வசதி

25.3.1992 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, வள்ளுவர் கோட்டம் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படவுள்ளது.

### திரைப்பட நகரம் அமைத்தல்

திரைப்படங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்ட ஒரு திரைப்பட நகரைத் தரமணியிலுள்ள திரைப் படப் பயிற்சிக் கல்லூரியில் அமைக்கும் பணியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.5.1992 அன்று துவக்கி வைத்தார்கள்.

### குடியின் தீமைகளை விளக்கும் திரைப்படம் தயாரித்தல்

குடிப்பழக்கத்தின் தீமைகளை விளக்கும் ஒரு திரைப்படத்தை ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு G.V. பிலிம்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### குடியின் தீமையை விளக்கும் நாடகம்

குடியின் தீமைகளை விளக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகத்தைச் சென்னையிலும், மாவட்டத் தலை நகரங்களிலும் நடத்த அரசு தீர்மானித்துள்ளது. ரூ.2 இலட்சம் செலவில் இந்த நாடகத்தைத் தயாரிக்கும் பொறுப்பு நேஷனல் தியேட்டர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

### தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் அவைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அமல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், முன்பு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு, 12 முதல் 20 பிரதிகள் வரை வெளியிட்ட திரைப்படங்களுக்கு ரூ.1.50 இலட்சமும், 21 முதல் 30 வரை பிரதிகள் எடுக்கப்பட்ட திரைப்படங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை



**ஆசிரியர் பணி என்பது ஒரு புனிதமான கடமை; தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.**

ஏற்ற பிறகு, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான 45 திரைப் படங்களுக்குத் தலா ரூ.2 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கென ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டது. தரமான படங்களைத் தேர்ந்தெடுக்க நிபுணர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

### சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்குதல்

சிறந்த மூன்று தமிழ்ப் படங்களுக்குக் கீழ்க் கண்டவாறு முன்பு விருதுகள் வழங்கப்பட்டு வந்தன.

முதல் பரிசு - ரூ.1,00,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

சிறப்புப் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

**புதிய அரசு இந்த விருதுத் தொகையைக் கீழ்க் கண்டவாறு அதிகரித்துள்ளது.**

முதல் பரிசு - ரூ.1,25,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.75,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

இதுவரை திரையுலகில் சிறந்த நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கென 5 பவுன், 3 பவுன் (மொத்தம் 27 பதக்கங்கள்) எனப் பதக்கங்கள் வழங்கப்பட்டு வந்தன. இப்புதிய அரசு அனைவருக்கும் தலா 5 பவுன் மதிப்புள்ள பதக்கங்களை வழங்க முடிவு செய்துள்ளது. இப்பரிசுகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

### பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அதிகப்படுத்துதல்

பத்திரிகையாளர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையான ரூ.400-ஐ, ரூ.500-ஆக உயர்த்த 1.4.1992 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

### மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்துதல்

மதுரையிலுள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்த ஒரு ஆப்செட் இயந்திரத்தையும், மற்றும் இரண்டு புதிய இயந்திரங்களையும் வாங்க ரூ.11 இலட்சத்தை ஒதுக்கி 26.11.1991 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

### சென்னையில் உள்ள அரசு மத்திய அச்சகத்தை நவீனப்படுத்துதல்

சென்னையிலுள்ள மத்திய அச்சகத்தை நவீன படுத்தும் வகையில் 5 கணிப்பொறி இயந்திரங்களை வாங்க அரசாங்கம் ரூ.11 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. ●



# அறநிலைய ஆட்சித்துறை ஆற்றும் அரும்பணிகள்

> "தமிழகத் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், திருக்கோயில் பாதுகாப்புப் படை நிறுவவும், அர்ச்சகர்களுக்கு மாத ஒய்வு ஊதியம் வழங்கவும் இதுபோன்ற பல சிறப்புப் பணிகளில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரிய பணகள் ஆற்றி வருகின்றது."

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மற்றும் திருக்கோயில்கள் நிர்வாகத்தை - மேம்பாட்டைக் கவனிப்பதற்காக ஆலய நிர்வாக வாரியம் 13.12.1991 அன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் 18 அலுவல் சார்பற்ற, அலுவல் சார்ந்த பெருமக்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் 12 நபர்கள் கொண்ட மாவட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 17 மாவட்டக் குழுக்கள் ஆலய நிர்வாக வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத் திருக்கோயில்களைப் பாதுகாத்துப் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரத்தைப் பொது மக்களிடமிருந்து பெறும் வகையில் 'முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' ஏற்படுத்தப்பட்டுள்ளது. 9.6.'92-ஆம் நாள் வரையில் ரூ.4.15 கோடி சேர்ந்துள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம் திருவிழா கடந்த 18.2.92-ஆம் நாளில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதற்காகச் சுமார் ரூ.46 இலட்சம் செலவில் பல்வேறு திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள சிறப்புமிக்க திருக்கோயில்களையும் அவற்றில் உள்ள விலைமதிப்பற்ற சிலைகள் மற்றும் ஆபரணங்களைப் பாதுகாக்க 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' ஒன்றை நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்படையில் ஆயிரம் இரண்டாயிரம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் ராணுவ வீரர்களும் பங்கு பெறுவார்கள். இவ்வமைப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.528 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு மற்றும் பூசைப் பொருட்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமரி தேவசம் வாரியத்திற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு அரசு மானியம் ரூ.13.5 இலட்சம் தவிர, கூடுதலாக ரூ.3 இலட்சம் கடந்த 21.10.91 அன்று வழங்கப் பட்டது. இது தவிர முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் ஆண்டுதோறும் வழங்க முடிவெடுக்கப்பட்டு இந்த ஆண்டிற்கான தொகை ரூ.10 இலட்சத்தை வழங்க 4.5.92 அன்று ஆணையிடப்பட்டது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தைத் திருப்பணி செய்து மீண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பத் திருவிழாவினை நடத்த ரூ.105 இலட்சம் செலவில் பணிகளைச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ரூ.35 இலட்சத்தில் இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிருவாகம் இன்னும் சிறப்பாக நடைபெற தற்போதுள்ள 8 மண்டலங்களை 10 மண்டலங்களாகப் பிரித்து ஆணையிடப்பட்டுள்ளது. சிவகெங்கை, வேலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு புதிய மண்டலங்கள் கடந்த 20.2.1991 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன.

தூத்துக்குடியிலும், திருவண்ணாமலையிலும் புதிய உதவி ஆணையர் அலுவலகங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு 1992-93- ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் உத்தரவிடப்படவுள்ளது. இவ்விரு அலுவலகங்கள் வரப்பெறின் மொத்த உதவி ஆணையர் அலுவலகங்கள் 17-லிருந்து 19 ஆக உயரும். இதற்காக அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.20 இலட்சம் செலவாகும்.

தமிழ்நாட்டில் குறிப்பிட்ட 10 இடங்களில் சுமார் ரூ.8 இலட்சம் செலவில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் தினசரி பூசை முறைகள் குறித்து புத்தறிவுப் பயிற்சி (Refresher Course) அளிக்க முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் சீர்ரான தட்ப வெப்பம் மற்றும் ஈரத் தன்மையைப் பராமரிப்பதற்காக ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஏற்பாட்டால் அம்மையத்தில் உள்ள சிலைகள் பழுதின்றிப் பாதுகாத்துக் காக்கப்பட்டு வரும்.


இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது அடைந்து ஓய்வு பெற்றுள்ள, வறிய நிலையில் உள்ள வேதபாராயணம் செய்வோர் நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் பாடுவோர், அரையர் சேவை செய்வோர் அடங்கிய 100 நபர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்க 18.12.92- அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்த ஓதுவார்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.250-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க 20.11.91 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 அகவை அடைந்த வறிய நிலையில் உள்ள 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

பணியின்போது இறந்துவிடுகின்ற திருக்கோயில் பணியாளர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல நிதி ரூ.10,000- லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி 10.1.92 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1976-ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம்,



பத்தூரிலுள்ள அருள்மிகு விசுவநாத சாமி திருக்கோயிலிலுள்ள விலைமதிப்பிட முடியாத நடராசர் உலோகத் திருமேனியை இலண்டன் நீதிமன்றம் முதல் அதன் பாராளுமன்ற மேல்சபை வரை நீண்டகாலமாக வழக்காடி மீட்கப்பட்டது. 9.8.1991 அன்று இதற்கென்று நடைபெற்ற சிலை மீட்புப் பெருவிழாவில் இலண்டனிலுள்ள இந்தியத் தூதுவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்தச் சிறப்புமிக்க உலோகத் திருமேனியை ஒப்படைத்தார். அச்சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காகத் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சைவத்திற்கு ஒன்றும், வைணவத்திற்கு ஒன்றும் என்ற வகையில் தமிழ்நாட்டில் இரு ஆகமக் கல்லூரிகள் விரைவிலே அமைக்கப்பட இருக்கின்றன. கல்லூரிகளுக்கான இடங்கள் குறித்து தெரிவுசெய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**உலமா ஓய்வூதியத் திட்டம்**

தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று வறிய நிலையிலுள்ள மௌல்வி, பேஷ், இமாம், அரபு மொழி ஆசிரியர் ஆகியோருக்கு மாதம் ரூ.250 அவர்களது ஆயுட்காலம் வரை உலமா ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ஏற்கெனவே பயன்பெற்று வரும் 1,200 எண்ணிக்கையை அதிகரித்துக் கூடுதலாக 100 உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியம் வழங்கியுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக உயர்ந்தது. மேலும் 1992- 93-ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 100 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கப்படவுள்ளது. இதனால் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,400 ஆக அதிகரித்து வறிய நிலையிலுள்ள பலருக்கும் பயன் கிடைக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23
சிறப்பு மலர்
ஓராண்டுச் சாதனைகள்